மாநகர சபை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்: பதினாறு

உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 16 புதன்கிழமை (31.12.2008) UTHAYAN-A Lively National Tamil Daily சுதிர்:035

பாதாள உலகக் குழுக்களைப் பயன்படுத்தி வன்முறை மூலம் தேர்தலில் வெல்ல அரசு சதி

அம்பலப்படுத்துகின்றது ஐ.தே.கட்சி

கொழும்பு, டிசெம்பர் 31

"மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைத் தேர்தலில் அரசு பாதாள உலகக் கோஷ்டியினரைப் பயன்படுத்தி வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டு, அதன்மூலம் தேர்தலில் வெல்வதற்கு இரகசிய ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றது" என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிக்கின்றது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனின் சகோதரரும் ஐ.தே.கட்சியின் வடமேல் மாகாணசபைத் தேர்தல் வேட்பாளருமான அசோக பண்டார தென்னக்கோனே இதைத்

(16 ஆம் பக்கம் பார்க்க)

புலிகள் அம்பாறையில் அதிரடிப்படையினர் மீது தாக்குதல்

கொழும்பு, டிசெ.31

அம்பாறையில் உள்ள வனப்பகுதியில் விசேட அதிரடிப்படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்கியதில் அதிரடிப் படையைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் ஆறுபேர் படுகாயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக விடுதலைப் புலிகள் தெரிவித்தவை என இணையத்தளங்களில் வெளியான செய்தி வருமாறு:-

(16 ஆம் பக்கம் பார்க்க)

எரிபொருள் விலைகளைக் குறைத்து நிவாரணத்திட்டம் திடீர் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 31

இரு மாகாண சபைகளுக்கான வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வதற்கான இறுதித் தினம் இன்று முடிவடையவிருக்கையில் -

மக்களுக்கான பொருளாதார நிவாரணத் திட்டம் என்ற பெயரில் சில அத்தியாவசியப் பொருள்களுக்கான விலைகளைக் குறைக்கும் ஏற்பாடு ஒன்றை அரசு நேற்று இரவு திடீரென அறிவித்தது.

இதன்படி -

(16 ஆம் பக்கம் பார்க்க)

விடுதலைப்புலிகள் மீது தடை விதிப்பது குறித்து அமைச்சரவை ஆராய்ந்தது; ஆனால் முடிவில்லை

கொழும்பு, டிசெ.31

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தடை விதிப்பது குறித்து நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டதாயினும் முடிவு எதுவும் இன்றி அது கலைந்ததாக அரச உயர் அதிகாரிஒருவர் நேற்றிரவு தெரிவித்தார்.

வடக்கில் நடைபெறும் போர் தீர்க்கமான மான ஒரு கட்டத்தை நெருங்கி வருவதால் அரசு - விடுதலைப் புலிகள் மீது தடை விதிப்பது பெருமளவில் சாத்தியம். அது சம்பந்தமான உத்தியோகபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகலாம் என்றும்-

(16 ஆம் பக்கம் பார்க்க)

உதயன் நாள்காட்டி 2009

எமது வாசகர்களுக்கென்றே பல வர்ணங்களில் அச்சிடப்பட்ட உதயன் நாள்காட்டி நாளைய பத்திரிகையுடன் இணைத்து இலவசமாக வழங்கப்படும். உங்கள் பத்திரிகை முகவர்களிடம் இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள்.

இலங்கைக்கு எப்போது செல்வது என்பதில் இன்னும் தீர்க்கமான முடிவு எதுவும் இல்லை

பிரணாப் முகர்ஜி நேற்றுத் தெரிவிப்பு

புதுடில்லி, டிசெ.31

இலங்கையில் இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெறும் போரை நிறுத்துமாறு அந்நாட்டு அரசாங்கத்திடம் வற்புறுத்த வேண்டும் என்று தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் விடுதகோரிக்கையை எடுத்துக் கூறுவதற்கு அங்கு செல்வது குறித்து தீர்க்கமான முடிவு எதுவும் இது வரை எடுக்கப்படவில்லை.

வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி, இதனை நேற்று பி.ரி.ஐ. செய்தியாளரிடம் இங்கு தெரிவித்தார்.

இலங்கைக்கு செல்வது எப்போது என்பதில் இன்னும் (16 ஆம் பக்கம் பார்க்க)

தெல்லிப்பழை ஆஸ்பத்திரி மற்றும் பாடசாலைகளுக்கு மக்களை போக்குவரத்துச் செய்ய அனுமதிக்க முடிவு

அதற்கு முன்னர் பாதைகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்

யாழ்ப்பாணம், டிசெ.31

வலி.வடக்குப் பிரதேச மீள்குடியமர்வு தொடர்பாக உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய, தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மற்றும் மகாஜனக் கல்லூரி ஆகியவற்றுக்குப் பொதுமக்கள் சென்றுவர அனுமதிப்பதென பலாலியில் நேற்று (16 ஆம் பக்கம் பார்க்க)

அடுத்தவருடம் வடக்கில் தேர்தல் ஜனாதிபதி மஹிந்த அறிவிப்பு

கொழும்பு, டிசெ.31

இலங்கையின் வடபகுதியில் 2009 ஆம் ஆண்டு தேர்தலை நடத்துவதற்கு தான் எண்ணியுள்ளார் - என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தியப் பத்திரிகையாளர் குழுவொன்றை திங்கட்கிழமை இரவு சந்தித்தவேளையே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார். (16 ஆம் பக்கம் பார்க்க)

வடமராட்சி கீழக்கில் இரண்டு தினங்களாக ஷெல் மற்றும் விமானத்தாக்குதல்கள்

வவுனியா, டிசெ.31

வடமராட்சி கிழக்கில் விமானக் குண்டுவீச்சு மற்றும் ஷெல் தாக்குதல்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சிறு வர்கள் உட்பட ஐந்து பேர் படுகாயமடைந்துள்ளனர் பொது மக்களின் வீடுகள் பலவும் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

நாகர்கோவிலில் உள்ள படையினரின் பின் தளங்களில் இருந்து நேற்றுப் பிற்பகல் 1.45 மணியளவில் தொடர் ஷெல்த் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு, (16 ஆம் பக்கம் பார்க்க)

ஜி.சீ.ஈ. விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி 60 நிலையங்களில் இன்று ஆரம்பம்

கொழும்பு, டிசெ.31

ஆசிரியர்களின் பகிஷ்கரிப்புக்கு மத்தியில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி இன்று ஆரம்பமாகின்றது.

நாடு முழுவதிலும் 60 நிலையங்களில் மதிப்பீட்டுப் பணி [illegible] 15 ஆயிரம் ஆசிரியர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். (16 ஆம் பக்கம் பார்க்க)

அடுத்துவரும் ஆறு மாத காலப்பகுதிக்கு செலான் வங்கியை அரசே நிர்வகிக்கும்

கொழும்பு, டிசெ. 31

அடுத்த ஆறு மாத காலப் பகுதிக்கு செலான் வங்கியை அரசே நிர்வகிக்கும். அதன் பின்னர் அதன் உரிமையாளர்களிடம் அதனை வழங்குவதா இல்லையா என்பது குறித்து [illegible] என மத்திய வங்கி வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

இதேவேளை மத்திய வங்கியின் பணிப்பின்பேரில் (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கோல்டன் கீ' மோசடிகளுக்கு மத்திய வங்கியே காரணம்!

குற்றஞ்சாட்டுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, டிசெ.31

கோல்டன் கீ நிறுவனத்தில் ஏற்பட்ட மோசடிக்கு இலங்கை மத்திய வங்கியே காரணம் என்று ஜே.வி.பி. குற்றஞ்சாட்டியுள்ளது.

நிதி நிறுவனங்கள் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை மத்திய வங்கி உதாசீனப்படுத்தியமையாலேயே நிதி நிறுவனங்களில் மோசடி இடம்பெறுகின்றது என்று அக்கட்சி மேலும் கூறியது.

அக்கட்சி நேற்று கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுர குமார திஸாநாயக்கவே இதைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

நாட்டில் பொருளாதாரம் பலமாக இருக்க வேண்டும் என்றால் வங்கிகள் உள்ளீட்ட நிதி நிறுவனங்கள் திறம்பட செயற்பட வேண்டும்.

பொருளாதாரம் பலமாக இருந்தால்தான் யுத்தத்தையும் சரியாகச் செய்யமுடியும். ஆனால், இலங்கையில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துகொண்டே போகின்றது.

முதலில் பிரமுக வங்கியில் மோசடி இடம் பெற்றது. அடுத்த மோசடி சக்வித்தி நிதி நிறுவனத்தில் இடம்பெற்றது.

இப்போது செலிங்கோ கூட்டு நிறுவனத்தின் துணை நிறுவனமான கோல்டன் கீ நிறுவனத்திலும் மோசடி இடம்பெற்றுள்ளது.

இந்த நிறுவனம் ஏனைய நிறுவனங்களை விட அதிகளவிலான மக்கள் நம்பிக்கையை வென்றிருந்தது. அப்படிப்பட்ட நிறுவனத்திலும் இப்போது மோசடி இடம் பெற்றுவிட்டது.

இந்நிறுவனத்தில் பணத்தை முதலீடு செய்த மக்கள் பெரும் சிக்கலை எதிர்நோக்கியுள்ளனர்.

தொடர்ந்து இலங்கையில் இவ்வாறு நிதி மோசடி இடம்பெறுவதால் வங்கிகள் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை இழந்துள்ளனர்.

இதற்கான அடிப்படைக் காரணம் மத்திய வங்கியின் அஜாக்கிரதைதான். மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டிருந்த பொறுப்புகளை அது சரிவரச் செய்திருந்தால் இவ்வாறான மோசடிகள் இடம்பெற்றிருக்காது.

நிதி நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக மத்திய வங்கி மாதாந்தம் மற்றும் வருடாந்தம் அறிக்கைகளைப் பெற வேண்டும். அவ்வாறு பெற்றால் நிதி நிறுவனங்களின் பலவீனத்தை அறிய முடியும். அதை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க முடியும்.

ஆனால், மத்திய வங்கி இவ்வாறான பொறுப்புகளை நிறைவேற்றவில்லை. மோசடி இடம்பெற்ற பிறகுதான் நடவடிக்கையில் ஈடுபடுகின்றது.

இப்போது புதிதாக மோசடி இடம் பெற்றிருக்கும் கோல்டன் கீ நிறுவனம் மத்திய வங்கியில் பதியப்படவில்லை என்று மத்திய வங்கி இப்போது சொல்கிறது. இது பொறுப்பற்ற கூற்று.

ஆகவே, இது தொடர்பில் ஜனாதிபதி உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். கோல்டன் கீ நிறுவனமும் செலான் வங்கியும் விசாரணைக்குட்படுத்தப்படல் வேண்டும். இங்கு முதலீடு செய்திருக்கும் மக்களுக்கு அரசு நிவாரணத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் - என்றார்.

புங்குடுதீவு இளைஞர் கொழும்பில் வைத்துக் கடத்தப்பட்டார்

யாழ்ப்பாணம், டிசெ.31

புங்குடுதீவைச் சேர்ந்த சாரதி ஒருவர் கொழும்பு 15, முத்துவல என்னும் இடத்தில் வைத்து இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டுள்ளார் என அவரது உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

புங்குடுதீவு, 12 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தில்லைநாதன் சந்திரதாசன் (வயது 25) என்பவரே கடத்தப்பட்டவராவார்.

கொழும்பில் தங்கி, சாரதியாகப் பணியாற்றிவந்த இவர் கடந்த 25 ஆம் திகதி இரவு உணவு கடையில் உணவு வாங்கச் சென்ற போது இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டார் என்றும் அதன் பின்னர் அவர் குறித்த தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1-25)

வலிமேற்கின் மூன்று ஆலயங்களின் குருமார், நிர்வாகிகள் 6 பேர் பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.31

வலிகாமம் மேற்கில் மூன்று ஆலயங்களில் ஆயுதங்கள் வைத்திருந்ததாகத் தெரிவித்து கைது செய்யப்பட்ட ஆலயக்குருக்கள், ஆலய நிர்வாகிகள் உட்பட ஆறுபேர் மல்லாகம் நீதிமன்றத்தினால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

சீரணி அம்மன் ஆலயக்குருக்கள், நிர்வாக சபைத் தலைவர், சண்டிலிப்பாய் கல்வளை பிள்ளையார் ஆலயத்தின் ஆலயக்குருக்கள், தர்மகர்த்தா சபையின் செயலாளர், பொருளாளரின் மனைவி, மாகியப்பிட்டி கண்ணகை அம்மன் ஆலய நிர்வாக சபை உறுப்பினர் ஆகியோர் தடுப்புக்காவல் உத்தரவில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் நேற்று மல்லாகம் நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

குற்றஞ்சாட்டப்பட்ட அறுவரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் தடுப்புக் காவல் உத்தரவில் வைக்கப்பட்டனர். அந்த உத்தரவின்படி 90 நாள்களே தடுத்து வைக்க முடியும். அந்த நாள் முடிவடைந்தால் அவர்களைப் பிணையில் விடுவிக்கவேண்டும் என்று அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எம்.றெமேடியஸ் வாதிட்டார்.

அவரது வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிவான் சந்தேகநபர்களை தலா 30 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்ல அனுமதித்தார். ஒவ்வொருவரும் தலா இரண்டு அரச அதிகாரிகள் கையொப் பத்துடன் விடுவிக்கப்படவும் நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

மத்திய, வடமேல் மாகாண தேர்தல் மனுத்தாக்கல் இறுதித்தினம் இன்று

கொழும்பு, டிசெ.31

மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்யும் இறுதித் திகதி இன்றாகும்.

இம்மாதம் 24ஆம் திகதி மனுத்தாக்கல் ஆரம்பமானது. இன்று நண்பகல் 12 மணியுடன் மனுத்தாக்கல் நிறைவு பெறுகின்றது.

பிரதான கட்சிகளான ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் ஐ.தே.கட்சி ஆகியவை நேற்று மத்திய மாகாண சபைக்கு வேட்புமனுத்தாக்கல் செய்தன.

இக்கட்சிகள் இன்று வடமேல் மாகாண சபைக்கு வேட்புமனுத்தாக்கல் செய்யும்.

இரண்டு மாகாணங்களுக்கும் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியல் நிறைவு செய்யப்பட்டுவிட்டது என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அதேபோல் ஐ.தே.கட்சியில் போட்டியிடும் வேட்பாளர் பட்டியலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஓரிரு சுயேச்சைக் குழுக்களும் மனுத்தாக்கல் செய்துள்ளன என்று தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

வேட்பு மனுத்தாக்கல் செய்து முடிந்ததும் ஜனவரி முதலாம் திகதி முதல் இரு மாகாணங்களிலும் தேர்தல் பிரசாரப் பணி தொடங்கப்படும் என்று மேற்படி இரு கட்சிகளும் தெரிவித்துள்ளன.

தென்மராட்சியில் 3 மணி நேரம் மின் வெட்டு

தென்மராட்சிப் பிரதேசத்துக்கான மின் தடை இரவு வேளைகளில் 3 மணித்தியாலயங்களாக அதிகரிக்கப்பட்டது குறித்து அப் பகுதி மக்கள் அதிருப்தி தெரி வித்தனர்

மாலை 6 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை மின் தடை செய்யப்படுகிறது. இதனால் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மத்திய மாகாணசபைக்கான தேர்தலில் வெற்றிலைச் சின்னத்தில் 15 கட்சிகள்

இம்முறை நடைபெறவுள்ள மத்திய மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களுமாக மொத்தம் 15 கட்சிகள் இணைந்து வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடவுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஜனநாயக ஐ.தே. முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் விடுதலை முன்னணி, இ.ஐ.தொ.ச., ஜ.தொ.ச. மற்றும் சிங்கள - தமிழ் மகளிர் அமைப்பு ஆகிய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடன் தோ.தொ.தொ.ச மற்றும் சுயேச்சைக் குழுக்களும் ஒன்றிணைந்து மத்திய மாகாணத்தில் ஆளும்கட்சியின் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுகின்றன. (சி)

பாக். வடமேற்கு மாநிலத்தில் இஸ்லாமியச் சட்டம் அமுல்

தலிபான் தீவிரவாதிகள் அறிவிப்பு

இஸ்லாமாபாத், டிச. 31

பாகிஸ்தானின் வடமேற்கு மாநிலத்திலுள்ள பழங்குடியின மக்கள் வாழும் பகுதிகளில் தாங்கள் இஸ்லாமிய சட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள் என தலிபான் தீவிரவாதிகள் அறிவித்துள்ளார்கள்.

அத்துடன் அவர்கள் பெண்கள் சந்தைக்குச் செல்வதற்குத் தடை விதித்துள்ளார்கள். பெண்கள் மருத்துவமனைகளுக்கு மாத்திரம் ஆண்கள் துணையுடன் செல்லலாம் என்றும் அறிவித்துள்ளார்கள்.

இஸ்லாமிய சட்ட அமுலாக்கத்தை அவர்கள், மசூதிகளிலுள்ள ஒலி பெருக்கி கருவிகளினூடாக அறிவித்து வருகிறார்கள். மக்கள் தங்கள் பிரச்சினைகள், விவகாரங்கள் ஆகியவற்றை தலிபான்களின் இஸ்லாமிய நீதிமன்றங்களுக்கே கொண்டு வரவேண்டும். இவற்றிற்கு இஸ்லாமிய சட்டப்படி தீர்வு காணப்படும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வடமேற்கு மாநிலத்திலுள்ள மஷ்டி மூலா நகரிலும், பெரோஸ் கேல் நகரிலும் தலிபான்களின் இஸ்லாமிய நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இஸ்லாமிய அறிஞர்கள் நீதிபதிகளாகவும், அதிகாரிகளாவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

அன்பளிப்புச் சிட்டைகள் வங்கியால் கையளிப்பு

சாவகச்சேரி வர்த்தக வங்கிக் கிளையில் கடந்த ஒக்ரோபர் முதலாம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் பராயமடையாதவர்களுக்கான இசுறு சேமிப்புக் கணக்கு ஆரம்பித்தவர்களுக்கு அன்பளிப்புச் சிட்டைகள் வழங்கப்பட்டன.

கடந்த 16, 17 ஆகிய திகதிகளில் வங்கிக் கிளையில் 17 பேருக்கு 41 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான அன்புளிப்பு சிட்டைகளை கிளை முகாமையாளர் எஸ்.பி. குருபாதம் வழங்கினார். (1-207)

மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், டிசெ.31

வேலணை தென்னியந்தியத் திருச்சபை நடத்தும் முன்பள்ளி மாணவர்களின் மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு மேற்படி திருச்சபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி திருச்சபை நிர்வாகப் பொறுப்பதிகாரி ராஜநிமலன் அம்பலவாணர் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதமவிருந்தினர்களாக அமெரிக்கன் மிஷன் தென்னிந்திய திருச்சபை பேராயர் எஸ். தியாகராஜா, வேலணைப் பிரதேச செயலா மு.நந்தகோபாலன் ஆகியோர் கலந்துகொள்வர். (201)

பாராட்டி வாழ்த்துகிறோம்

இலங்கைப் போக்குவரத்துச் சபையில் எமக்கு சாரதிகளாக நியமனம் பெற்றுத்தந்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளரும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் யாழ்.மாவட்ட விசேட செயலணிச் செயலருமான கௌரவ K.N.டக்ளஸ் தேவானந்தா அவர்கட்கும் யாழ்.மாவட்ட அமைப்பாளர் சி.அ.உதயன் அவர்கட்கும் எமது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

புதிய சாரதிகள் இ.போ.ச. (வடக்கு)

தவத்திரு ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின் வாழும் கலை அறநிறுவனம் வழங்கும்

"குரு பூசை"

(பூசைகள், சத்சங்கம், யோகாசனம், பிரணாயாமம் இவைகள் சங்கமிக்கும் இனிய நிகழ்வு)

இடம்: கம்பன் கோட்டம், நல்லூர்.

திகதி: 01/01/2009 (வியாழன்) முதல் 12/01/2009 (திங்கள் வரை)

நேரம்: காலை 6.30 அல்லது – மாலை 3.30

குறிப்பு: வாழும் கலை அமைப்பின் வெளியீடுகளும் இங்கு பெறலாம்.

ஆன்மீக ஆர்வலர்கள் அனைவரும் வருக! அருளாசி பெறுக!!

வாழும்கலை அறநிறுவனம்

தொ.பே.: 0779434879, 0779749346

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்

கந்தப்பு பரஞ்சோதி

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டன் East Ham ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பு பரஞ்சோதி 24.12.2008 புதன்கிழமை அதிகாலை 5 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பு - வள்ளியம்மையின் பாசமிகு மகனும் கந்தப்பு - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் புஸ்பமலரின் அன்புக் கணவரும் ஜனனி, நேர்த்திகா, பிரதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற பத்மநாபன், ராமச்சந்திரன்(இலங்கை), புவனசுந்தரி(ஜேர்மனி), பாலசரஸ்வதி (இந்தியா), நித்தியானந்தன் (கனடா), பத்மினி தேவி (ஜேர்மனி), வைஜெயந்திமாலா (லண்டன் லூசியம்), பாஸ்கரன் (லண்டன் லூசியம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆறுமுகம் (லண்டன்), தனபாலசிங்கம் (லண்டன்), சாரதாதேவி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31.12.2008 புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் முற்பகல் 11 மணியளவில் North Thames Gas Sports Grounds, Southend Road, E62AA இல் நடை பெற்று பின்னர் City of London Cemetery Alders brook E12 5DQ இல் அடக்கம் செய்யப்படும்.

ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று பிற்பகல் 4மணிக்கு கரவெட்டியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்
0208 472 6782,
0208698 0618, 07950 497 558.

குலானை, துன்னாலை மேற்கு, கரவெட்டி.

உதயன்
தொலைபேசி 222 3837, [illegible] தொலைநகல்: 222 9944

நாள் குறிக்கும் அறிவிப்புகளால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிட்டாது

கடந்த 2007 நவம்பரில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கொண்டாடுவதுதான் அவரது கடைசிப் பிறந்த நாள் என்றும், அடுத்த பிறந்த நாள் கொண்டாட அவரை விட்டு வைக்க மாட்டோம் என்றும் 2007 நவம்பரில் சூளுரைத்திருந்தார் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், ஜனாதிபதிக்கு அடுத்து நாட்டின் பாதுகாப்பு விவகாரங்களில் அதிகம் செல்வாக்கு உடையவராகத் திகழுபவருமான கோத்த பாய ராஜபக்ஷ.

ஆனால், கடந்த நவம்பரில் பிரபாகரனின் அடுத்த பிறந்த நாளும் தாண்டிப் போய்விட்டது.

பிரபாகரனை உயிருடன் பிடிக்க முடியுமா என்பது வேறு விடயம். அதற்கும் இப்போது காலக்கெடு விதித்திருக்கிறார் இலங்கையின் பாதுகாப்புத்துறைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல.

அடுத்த நாற்பது நாள்களுக்குள் கிளிநொச்சியையும் கைப்பற்றி, பிரபாகரனையும் பிடித்து விடுவர் அரசுப் படையினர் என்று நாள் குறித்திருக்கின்றார் அவர்.

நாற்பது நாள்கள் என்பது அப்படி ஒன்றும் நீண்ட காலம் அல்ல. ஒன்றரை மாதத்திலும் குறைவானதே.

ஜோதிடர் நாள் குறித்தமை போல, எதிர்வரும் மத்திய மாகாண மற்றும் வடமேல் (வயம்ப) மாகாண சபைகளுக்கான தேர்தல் வாக்களிப்புக்கு முன்பாக இவை இரண்டும் ஒப்பேறிவிடும் என்று பகிரங்கமாக அறிவித்திருக்கின்றார் பாதுகாப்புப் பேச்சாளர்.

ஆனால் நாள்குறிக்கும் அவரது பேச்சுப் பற்றிய செய்தி பத்திரிகையில் அச்சாகி அந்த மை காய்வதற்கு இடையிலேயே கிளிநொச்சியைப் பிடிப்போம் என்ற அவரது சூளுரை தடுமாறத் தொடங்கிவிட்டது போலும்.

ஏனென்றால், இதுவரை வன்னியில் கிளிநொச்சியை வல்வளைப்புக்குள் கொண்டுவந்து, அதைக் கைப் பற்றுவதற்கு திடசங்கற்பம் கொண்டிருந்த அரசுப் படைகளின் கவனம் இப்போது முல்லைத்தீவுப் பக்கம் முழுமையாகத் திரும்பிவிட்டது என பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதுதான் யதார்த்தக் கள நிலைமை என்றால் கிளிநொச்சியை அடுத்த நாற்பது நாள்களுக்குள் அரசுப் படைகள் கைப்பற்றும் என்ற ரம்புக்வெலவின் அறிவிப்பு 'புஸ்வாணமாகி'விடும் என்பது இப்போதே தெளிவு.

விடுதலைப் புலிகளை அழிக்கவும், தமிழரின் விடுதலைப் போராட்டத்தை வேரடி மண்ணோடு நசுக்கிச் சாய்க்கவும் இப்படி நாள் குறித்த பல சிங்களத் தலைவர்களை இலங்கைத் தீவு கடந்த முப்பது ஆண்டுகளில் கண்டிருக்கின்றது.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா - லலித் அத்துலத் முதலி ஜோடி, ஜனாதிபதி பிரேமதாஸா - ரஞ்சன் விஜேரத்னா ஜோடி, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - ஜெனரல் ரதவத்தை ஜோடி என்ற தொடரில் இப்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ - அவரது சகோதரரான பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஜோடி என்ற தரப்பு யுத்தக் களம் என்ற கிரிக்கெட்டில் வாய் வீச்சுத் துடுப்பாட்டத்தையும் சேர்த்து நடத்துகின்றது. அதன் வெளிப் பாடாகவே இந்தக் காலக்கெடுப்பு விதிப்பு அறிவிப்புகள் வெளிவருகின்றன.

அறுபது ஆண்டுகளாக முழு இலங்கைத் தீவையுமே பற்றிப் பீடித்து உலுப்பி வரும் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு - சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்களுக்கு நியாயமும், நீதியும் வழங்கும் விதத்தினாலான - தீர்வு ஒன்றை வைப்பதற்கோ அல்லது அப்படி வைப்பதற்கான காலக்கெடுவை அறிவிப்பதற்கோ வக்கற்ற இந்த அரசு, புலிகளின் தலைவரை அழிப்பதற்கும் அவர்களின் கையில் இருக்கும் தமிழர் தாயகப் பிரதேசங்களைக் கைப்பற்றி, ஆக்கிரமித்து, மீண்டும் தமது கைகளுக்குக் கொண்டுவருவதற்கான செயற்பாடுகளுக்கும் மட்டும் காலக்கெடு விதித்து நாள் குறித்து அறிவிப்புகளை விடுக்கின்றது.

மிக சொற்ப எண்ணிக்கையினரான - சிறுபான்மையினரான - ஈழத் தமிழர்களின் ஆயுத பலத்தைச் சிதறடிப்பதன் மூலம், அவர்களின் பேரம் பேசும் வலுவை இல்லாமலாக்கிவிட்டு, தாம் போடும் 'பிச்சைத் தீர்வை' ஏற்று அடங்கிப் போவதைத் தவிர ஈழத் தமிழர்களுக்கு வேறு மார்க்கம் ஏதும் இல்லை என்ற நிலையை உருவாக்குவதே இன்றைய பௌத்த - சிங்களப் பேரினவாதப் போக்குடைய ஆட்சித் தலைமையின் ஒரே நோக்கமும், போக்குமாகும்.

அதன் காரணமாகவே இதோ பிரபாகரனைப் பிடிக்கிறோம், அதோ கிளிநொச்சியைப் பிடித்து விட்டோம் என்ற மாதிரியான - கற்பனை அறிவிப்புகளில் - மாயையில் - மூழ்கிக் கிடக்கின்றது கொழும்பு அரசு.

புலிகளை அல்லது பிரபாகரனை அழித்தால் இலங்கை இனப்பிரச்சினை தீர்ந்துவிடும் என்ற மாதிரியான கருத்துக்களை விழுங்கிக் கொண்டு, அவற்றின் அடிப்படையில் காய்களை நகர்த்தும் அரசுத் தரப்பின் போக்கு அபத்தத்துக்குரியது; எள்ளி நகையாடத்தக்கது.

இதனால் நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு வந்துவிடப் போவதில்லை.

வடக்கு மாகாண உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு நிர்வாகக் கடமைகளையும் வழங்கப் பணிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.31

வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு திட்டமிடல், கண்காணிப்பு அமுலாக்கல் கடமைகளுடன் நிர்வாகக் கடமைகளையும் வழங்கி இரண்டாம் நிலை நிறைவேற்று அதிகாரியாக தயார்ப்படுத்துமாறு உள்ளூராட்சி, நிவாரண மற்றும் புனர்வாழ்வு கூட்டுறவு, கிராம அபிவிருத்தி சமூக சேவைகள் அமைச்சின் வடமாகாண செயலாளர் தி.இராசநாயகம் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சனை கேட்டுள்ளார்.

பிரதேச சபை-நகரசபைகளுக்கான ''செயலாளர் நியமனம்'' எனும் தலைப்பில் அமைச்சின் செயலாளர் தி.இராசநாயகம் எழுதிய விரிவான கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஆளுநர் மருத்துவத்துறை போன்ற அத்தியாவசிய சேவைகளைச் சார்ந்த தான துறைகளுக்கு மட்டுமே மீள் நியமனம் வழங்கத் தீர்மானித்துள்ளார்.

விரைவில் ஓய்வு பெறப்போகும் செயலாளர்களை மீண்டும் நியமிக்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

தற்போது வடமாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி உதவியாளர்களை அமர்த்தி பணிகளை விரைவுபடுத்துவதைத் தவிர வேறு வழியில்லை. இவர்களுக்கு ஏற்கனவே பதவி நிலை தரத்திற்குரிய சேவைப் பிரமாண குறிப்பு தயாரிக்கப்பட்ட போதும் அமுல் படுத்தப்பட வில்லை. தற்போது உள்ளூராட்சி உதவியாளர் களை இத்தரத்தில் உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் சகல பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களும் தற்போதுள்ள உள்ளூராட்சி உதவியாளர்களிடமிருந்து விண்ணப்பம் கோரி செயலாளர்களாக நியமிக்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்வதுடன் இயன்றவரை இவர்களை இவர்களது கிராமத்திலோ அல்லது அயலிலோ சேவை செய்யும் வகையில் பொருத்தமான இடம் அரசாங்க நிர்வாக கொள்கைக்கிணங்க கொடுக்கப்பட வேண்டும்.

செயலாளர்கள் இவர்களுக்கு திட்டமிடல் கண்காணிப்பு அமுலாக்கல் கடமைகளுடன் நிர்வாக கடமைகளையும் வழங்கி தாம் ஓய்வுபெறும் போது இவர்கள் கடமையை பொறுப் பேற்கும் வகையில் இரண்டாம் நிலை நிறைவேற்று அதிகாரியாகத் தயார்ப்படுத்த வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மூலம் இக்கருத்தினை உள்வாங்கி நடைமுறைப்படுத்த வேண்டும்-என்றுள்ளது. (202)

காணி, வீடுகளை இழந்துள்ள சம்பூர் பிரதேசத்து மக்கள்!

திருகோணமலை, டிசெ.31

திருகோணமலை மாவட்ட சம்பூர் பிரதேசத்திலுள்ள சில குடும்பங்கள் அங்கு அமைந்துள்ள உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக ஆழிப்பேரலைக்குப் பின்னர் தமக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளையும் வீடுகளையும் இழந்துள்ளனர் எனத் தெரிவிக்கின்றனர்.

உயர்பாதுகாப்பு வலயம் அமைத்திருப்பதால் தமது இருப்பிடங்களை இழந்துள்ள சம்பூர் பிரதேச வாசிகளில் கடற்கரைச்சேனை மற்றும் சூடைக்குடா ஆகிய கிராமங்களைச் சேர்ந்த குடும்பங்களில் ஒரு பகுதியினர் ஏற்கனவே ஆழிப்பேரலை அனர்த்தத்துக்குப் பின்னரான கடலோரப் பாதுகாப்பு வலயம் காரணமாகத் தமது இருப்பிடங்களையும் காணிகளையும் இழந்திருக்கின்றனர்.

இக்குடும்பங்களுக்கு ஆழிப்பேரலை மீள் கட்டுமானத் திட்டத்தின் கீழ் வேறிடத்தில் காணிகளும் வீடுகளும் வழங்கப்பட்டிருந்தாலும், யுத்தத்திற்குப் பின்னரான உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக அதனையும் இவர்கள் இழக்க நேரிட்டிருக்கின்றனர் எனக் கூறப்படுகின்றது.

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் உள்ள அகதி முகாம்களில் தங்கியிருக்கும் இக்குடும்பங்கள் தமது எதிர்காலம் குறித்து நிச்சயமற்ற தன்மையுடனேயே காணப்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (சி)

யாழ். மரியன்னை ஆலயத்தில் இன்று நள்ளிரவு ஆராதனை நடைபெறாது

யாழ்ப்பாணம், டிசெ.31

யாழ். மரியன்னை பேராலயத்தில் புதுவருடப் பிறப்பின் நள்ளிரவு ஆராதனைகள் இன்று இடம்பெறமாட்டா. நாளை வியாழக்கிழமை காலை 5.45 மணிக்கு யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் புதுவருடத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

யாழ். ஆயர் இல்ல வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

இரண்டாவது திருப்பலி காலை 7.15 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.

குருநகர் சென்.செபஸ்ரியார் தேவாலயத்தில் நாளை காலை 6 மணிக்கு புதுவருட வழிபாடு இடம்பெறும். (1-202)

அராலி குடிதண்ணீர் விநியோகம் புதிய திட்டம் ஞாயிறு அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், டிசெ.31

அராலி குடிதண்ணீர் விநியோகத் திட்ட மேம்பாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஹற்றன் நஷனல் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் ஜே.ஆர்.பி.எம். பாய்வாவும் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேசும் சிறப்பு விருந்தினராக தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு அதிகார சபையின் உதவிப் பொது முகாமையாளர் தி.பாரதிதாசனும் கலந்து கொள்வர். (1-202)

நுளம்பு ஒழிப்பு பணி சாவகச்சேரியில் தீவிரம்

யாழ்ப்பாணம், டிசெ.31

சாவகச்சேரி நகரசபை எல்லைக் குட்பட்ட பகுதிகளில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட காணிகளில் சுகாதாரப் பகுதியினரால் நுளம்பு ஒழிப்பு புகையூட்டல் பணிகள் ஆரம்பிக்கப் படவுள்ளன.

சபை எல்லைக்குட்பட்ட குடியிருப்பாளர்கள் தமது குடியிருப்பு மற்றும் வெற்றுக் காணிகளுக்கு நுளம்பு ஒழிப்பு புகையூட்டல் மேற்கொள்ள விரும்பின் தத்தமது பகுதி சனசமூக நிலைய நிர்வாகிகளுடன் வருகை தருமாறு நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் அறிவித்துள்ளார்.

நாளை

மார்கழி 17	01.01.2009
	வியாழக்கிழமை
திதி:	பஞ்சமி
	பி.ப.01.33வரை
நட்சத்திரம்:	சதயம்
	பி.இ. 06.21 வரை
சுபநேரம்:	08.00 - 09.30
ராகுகாலம்:	02.00 - 03.00

எக்காளத்தொனி சபையின் வருட ஆராதனை நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.31

யாழ்.மாவட்டத்தில் உள்ள எக்காளத்தொனி சபைகளின் வருடாந்த ஆராதனையும் விழிப்பு ஜெப ஆராதனையும் இன்று புதன்கிழமை இரவு 7.30 மணிமுதல் நாளை வியாழக் கிழமை அதிகாலை 3 மணி வரை எக்காளத்தொனி தலைமைச் சபையில் நடைபெறவுள்ளன.

மேற்படி சபைகளில் உள்ள அனைத்து ஊழியர்கள், விசுவாசிகள், வாலிபர்கள், ஞாயிறு பாடசாலை மாணவர்கள் அனைவரையும் இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். விரும்பியவர்களும் இந்த ஆராதனையில் பங்குபற்றி இயேசுவின் விடுதலையையும், ஆசீர் வாதத்தையும் பெற்றுக் கொள்ள லாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (201-325)

தென்மராட்சியில் தையல் பயிற்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.31

தென்மராட்சி பிரதேச செயலக மகளிர் அபிவிருத்திப் பிரிவின் புதிய தையல் பயிற்சி வகுப்புகள் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் ஆரம்பித்து வைக்கப்படவிருக்கின்றன.

பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்ட 40 பயிற்சியாளர்களையும் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார். (1-207)

கொழும்பில் வர்த்தகரைக் கடத்தி கப்பம்பெற முயன்றவர் கைது

கொழும்பு, டிச.31

வர்த்தகரைக் கடத்தி 25 லட்சம் ரூபா கப்பம் கோரினார் எனக் கூறப்படும் ஒருவர் புறக்கோட்டை பொலிஸாரினால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சந்தேக நபர் கப்பத் தொகையை பெற்றுக் கொள்ளவரும் போதே மாறுவேடத்தில் இருந்த பொலிஸார் அவரை மடக்கிப் பிடித்தனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

குறித்த வர்த்தகர் நேற்று முன்தினம் தமது வர்த்தக நிலையத்திலிருந்து மதிய உணவிற்கு வீட்டிற்கு வந்து கொண்டிருந்த போதே கடத்திச் செல்லப்பட்டார்.

சந்தேக நபர் கைது செய்யப்பட்ட பின்னர் குறித்த வர்த்தகரும் விடுவிக்கப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர் பாதாள உலகக்குழுவைச் சேர்ந்தவர் என்றும் அவருடன் தொடர்புடைய மூன்று சந்தேகநபர்களை கைது செய்வதற்காக விசேட பொலிஸ் குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொங்கோ நாட்டின் தேவாலயத்துக்குள் 45 பேர் கண்டதுண்டமாக வெட்டிக்கொலை!

நத்தாருக்கு மறுநாள் கொடூரம்

கிங்ஸஸா, டிச.31

நத்தார் தினத்துக்கு மறுதினமான டிசம்பர் 26 ஆம் திகதி, கொங்கோ ஜனநாயகக் குடியரசிலுள்ள கத்தோலிக்க கிறிஸ்தவ தேவாலயமொன்றுக்குள் 45 சிவிலியன்கள் கண்ட துண்டமாக வெட்டிக் குரூரமாகப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள் என உகண்டா இராணுவம் தெரிவித்துள்ளது.

''இப்படுகொலைகளைக் கேள்வியுற்றதும், அத்தேவாலயத்துக்கு விரைந்தேன். அது ஒரு குரூரக் காட்சி. பெரும்பாலான பெண்களும், பிள்ளைகளும் துண்டு துண்டாக வெட்டி குரூரமாகப் படுகொலைசெய்யப்பட்டிருந்தமையைக் கண்டு அதிர்ச்சியுற்றேன்'' என இராணுவ அதிகாரி கிறிஸ் மெகிஸி குறிப்பிட்டார்.

''மனித நாகரிகத்துக்கு அப்பாற்பட்ட இந்த ஈனத்தனமான படுகொலைகள் தொடர்பாக, பிரபுவின் எதிர்ப்பு இராணுவம் என்னும் தீவிரவாத அமைப்பின் போராளிகள் மீது உகண்டா இராணுவம் பழி சுமத்தியுள்ளது. இப்போராளிகள் அரசுக்கு எதிராக ஆயுதப்போராட்டங்கள் நடத்தி வருகிறார்கள். அத்துடன் சிவிலியன் நிறுவனங்களையும் தகர்த்து வருகிறார்கள்'' என அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

''பெண்களினதும் பிள்ளைகளினதும் சடலங்கள் ஆழமான வெட்டுக்காயங்களுடன் தேவாலயத்துக்கு உள்ளும் புறமும் சிதறிக்கிடந்தன'' என மனிதநேய உதவி நிறுவனப் பணியாளரொருவர், அமைதிப்படை அதிகாரிகளிடம் விளக்கினார்.

''ஒரு கும்பல் ஆயுதங்களுடன் தேவாலயத்தை நோக்கி வருவதைக் கண்டு, அயலிலுள்ள பற்றைக்குள் நான் ஒளிந்துக்கொண்டேன். கோடரிகளும் மண் வெட்டிகளும் அக்கும்பலிடம் இருந்தன. தேவாலயத்துக்குள் கும்பல் நுழைந்ததும், அலறல்களும், அவலக் குரல்களும் ஓங்கி ஒலித்து அடங்கின'' என அபேல்லொங்கி என்பவர் ஏ.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

''அந்தக் கும்பலைச் சேர்ந்தவர்கள் பிரபுவின் எதிர்ப்பு இராணுவ தீவிரவாதப் போராளிகள் தான் என்பதை கண்டுக் கொண்டேன். அவர்களது தலைமுடி, பேசியமொழி, உடை ஆகியவற்றைக் கொண்டு இதனை நான் அனுமானித்தேன். அவர்களில் சிறுவர்களுமிருந்தார்கள்'' என்றும் அவர் கூறினார்.

இப்படுகொலைகள் தொடர்பாக, உகண்டா டெய்லி மொனிட்டர் செய்திப் பத்திரிகை, ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் ஆகியவை வெளியிட்ட செய்திகளால் உதவி நிறுவன அதிகாரிகள் அதிர்ச்சியடைந்தார்கள். எனினும், இவற்றை ஊர்ஜிதப்படுத்திக் கொள்வதற்கான முயற்சியிலும் ஈடுபட்டார்கள் .

இந்த அதிகாரிகள் சம்பவம் நிகழ்ந்த தேவாலயத்துக்கருகிலுள்ள டொருமா என்னுமிடத்துக்குச் சென்று, குடியிருப்பாளர்களைக் கண்டும் கேட்டும் இதனை உத்தரவாதப்படுத்திக் கொண்டார்கள். இந்த இடம் தென் சூடானிய எல்லையிலிருந்து 40 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் பிரபுவின் எதிர்ப்பு இராணுவத் தலைவர் ஜோசப் கொனி சமாதான உடன்படிக்கை யொன்றில் கைச்சாத்திட டிசம்பர் ஆரம்பத்தில் மறுத்து விட்டார். இதையடுத்து இதன் போராளிகளுக்கு எதிராக, உகண்டா, தென் சூடானிய, கொங்கோ படைகள் கூட்டாக அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

மனித குலத்துக்கு எதிரான போர்க் குற்றங்கள் தொடர்பாக, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தால் பிரபுவின் எதிர்ப்பு இராணுவத் தலைவர் ஜோசப் கொனி தேடப்பட்டு வருபவராவார். இவர் சில ஆண்டுகாலம் கொங்கோ குடியரசின் வட-கிழக்கு வனாந்தரப் பிராந்தியத்தில் தலைமறைவாகஇருந்து வந்துள்ளார்.

தேவாலயத்தில் இடம்பெற்ற படுகொலைகளுக்கும் தனது அமைப்புக்கும் சம்பந்தமில்லை என பிரபுவின் எதிர்ப்பு இராணுவப் பேச்சாளர் டேவிட் நிகோச் மட்சங்கா மறுதலித்துள்ளார். ''எங்கள் மீது பழி போடுவதற்காக உகண்டா இராணுவமே இக்கொலைகளைப் புரிந்திருக்கலாம்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவில் ஆற்றுக்கு அடியில் சுரங்கப்பாதை

பீஜிங், டிச. 31

சீனாவிலுள்ள வூகான் நகரின் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக ஆற்றுக்கு அடியில் ஒரு சுரங்கப்பாதை கட்டப்பட்டுள்ளது. அந்த நகரில் ஓடும் யாங்ட்ஸ் என்ற நதியின் அடியில் 3.63 கி.மீ. நீளத்துக்கு இந்தச் சுரங்கப்பாதை கட்டப்பட்டுள்ளது.

4 வழிப் பாதையான இது திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது. நகரின் கிழக்குக் கரையிலிருந்து ஹாங்கு வர்த்தகப் பகுதிக்கு சாலை வழியாகச் செல்ல 30 நிமிடங்கள் ஆகும். இப்போது இந்தச் சுரங்கப்பாதை வழியாகச் சென்றால், 7 நிமிடத்தில் கடந்துவிடலாம்.

சீன பொருளாதாரம் உலகின் 4 ஆவது மிகப் பெரிய பொருளாதாரம் ஆகும். சீனா கட்டுமான அடிப்படை வசதிகளைப் பெருக்கிக்கொள்வதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. மேலும் 2 இடங்களில் நதிக்கு அடியிலான சுரங்கப்பாதைகளை அமைக்கவும் அது திட்டமிட்டுள்ளது.

பங்களாதேஷ் பொதுத் தேர்தலில் முன்னாள் பிரதமர் ஹசீனா வெற்றி

டாக்கா, டிச. 31

பங்களாதேஷில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் தலைமையிலான கூட்டணி பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றி வெற்றி பெற்றுள்ளது. மொத்தமுள்ள 300 இடங்களில் ஷேக் ஹசீனாவின் தலைமையிலான கூட்டணிக்கு 250 இடங்கள் கிடைத்துள்ளன.

பங்களாதேஷில் கடந்த 7 ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்திற்குத் தேர்தல் நடைபெற்றது.

இந்தத் தேர்தலில் முன்னாள் பிரதமர்களான ஷேக் ஹசீனாவுக்கும் கலிதா ஷியாவுக்குமிடையே கடும் போட்டி நிலவியது.

ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் தலைமையிலான மகா கூட்டணி இந்தத் தேர்தலில் 250 இடங்களைப் பிடித்துள்ளது.

கலிதா ஷியா போட்டியிட்ட அனைத்து இடங்களிலும் வெற்றி பெற்றார். அவரது கூட்டணிக் கட்சியான ஜமாத் இஸ்லாமி கட்சியின் தலைவர் மோதிர் ரஹ்மான் நிஜாமி குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். எனினும், அவரது கட்சியைச் சேர்ந்த அனைத்து வேட்பாளர்களும் தோல்வியைத் தழுவினர்.

ஹசீனாவின் வெற்றி தெற்காசியப் பகுதியில் மதத்தின் பெயரால் பயங்கரவாத சக்திகளை மக்கள் ஏற்கவில்லை என்பதன் அறிகுறி என்று அரசியல் நோக்கர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். தேர்தலில் அமோக வெற்றி பெற்ற போதிலும் தொண்டர்களை அமைதி காக்குமாறு ஷேக் ஹசீனா கேட்டுக்கொண்டுள்ளார்.

அவரது கட்சி சார்பில் போட்டியிட்ட இந்து வேட்பாளர்கள் பலரும் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனிடையே இந்த தேர்தல் நியாயமாக நடைபெறவில்லை என்று கலிதா ஷியா தலைமையிலான கூட்டணி குற்றஞ்சாட்டியுள்ளது.

இதற்கு முன் கடந்த 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் கலிதா ஷியா தலைமையிலான கூட்டணி இரண்டில் மூன்று பங்கு இடங்களைப் பெற்றிருந்தது.

பங்களாதேஷில் நெருக்கடி நிலைகொண்டு வரப்பட்டு இராணுவத்தின் ஆதரவுடன் இடைக்கால அரசு நடைபெற்று வந்தது. தற்போது இந்தத் தேர்தல் மூலம் அங்கு மீண்டும் ஜனநாயக ஆட்சி மலர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதலுக்கு மத்திய கிழக்கு நாடுகள் கண்டனம்

அம்மான், டிச. 31

காஸா மீது இஸ்ரேல் தொடர்ந்து மேற்கொண்டுவரும் குண்டுத் தாக்குதல்களுக்கு கடும் ஆட்சேபனை தெரிவித்து, நேற்று செவ்வாய்க்கிழமை இரண்டாவது நாளாகவும் பல மத்திய கிழக்கு நாடுகளில் ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடத்தப்பட்டன. இவற்றில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டார்கள்.

ஜோர்தான், எகிப்து, சிரியா, லிபியா, ஈராக் ஆகிய நாடுகளில் இடம்பெற்ற இரண்டாவது தின ஆர்ப்பாட்டப் பேரணிகளில், அமெரிக்க இஸ்ரேலிய கொடிகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. இஸ்ரேலுக்கு எதிராக வலுவான நடவடிக்கைகளை எடுக்குமாறு பேரணியினர் தத்தம் நாட்டுத் தலைவர்களுக்கு அறைகூவல் விடுத்தனர்.

ஜோர்தானின் தலைநகரான அம்மானில் இரண்டாவது நாளாக மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதமர் நதீர் தாபியின் அலுவலகத்துக்குச் சென்று, கடிதமொன்றைக் கையளித்தார்கள் என ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்தது.

1994 ஆம் ஆண்டு ஜோர்தானுக்கும் இஸ்ரேலுக்குமிடையே கைச்சாத்தான உடன்படிக்கையைக் கைவிடுமாறும், ஜோர்தானிலுள்ள இஸ்ரேலிய தூதரகத்தை உடனடியாக மூடிவிடுமாறும் பேரணியினர் தாம் கையளித்தக் கடிதத்தில் பிரதமரைக் கோரியிருந்தனர் என அதிகாரபூர்வ வட்டாரமொன்று தெரிவித்தது.

அம்மானில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணிக்கு இஸ்லாமிய தொழிற்சங்கங்கள் கூட்டாக ஏற்பாடுகள் செய்திருந்தன. ஆர்ப்பாட்டக்காரர்கள் அமெரிக்காவிற்கும் இஸ்ரேலுக்கும் எதிரான கோஷங்களை எழுப்பினர். அத்துடன் அவ்விரு நாடுகளின் கொடிகளையும் தீயிட்டுக் கொளுத்தினர்.

எகிப்தின் தலைநகரான கெய்ரோவில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது. முஸ்லிம் சகோதரத்துவக் கட்சி இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது. மத்திய கெய்ரோ வீதிகளில் ஆர்ப்பாட்டப் பேரணி வலம் வந்தது. இதில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் உட்பட இதர பல முஸ்லிம் நாடுகளிலும், இஸ்ரேலுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நேற்று செவ்வாய்க்கிழமை பரவலாக நடைபெற்றன என்றும் ஊடகத் தகவல்கள் தெரிவித்தன.

உலக அரங்கில்

இஸ்ரேலின் தாக்குதல் தொடர்கிறது; காஸாவில் கட்டடங்கள் நிர்மூலம்!

டெல் அவிவ், டிச. 31

காஸா மீது நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை நான்காவது நாளாகவும் இஸ்ரேல் போர் ஜெட் விமானங்கள் சரமாரியான குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன. இக்குண்டுத் தாக்குதல்களில் ஹமாஸ் அரசின் பெருமளவிலான கட்டடங்கள், பாதுகாப்பு நிறுவனங்கள் நிர்மூலமாக்கப்பட்டன என ஊடகத் தகவல்கள் தெரிவித்தன.

நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல்களில் 10 பேர் வரை பலியாயினர். அநேகர் காயமடைந்தனர். உயிரிழப்புகளும் சேதங்களும் பெருமளவில் இருக்கலாம். எனினும், உடனடித் தகவல்கள் வெளியாகவில்லை என கரைப் பிராந்திய கழிமுக அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

செவ்வாய்க்கிழமை தாக்குதல்களில் ஐம்பது பேர்வரை காயமடைந்தனர். இவர்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். சிலர் அவயவங்களை இழந்துள்ளனர் என பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

அதேவேளை, காஸா எல்லையில் இஸ்ரேல் தனது துருப்புகளைக் குவித்துள்ளது. அத்துடன் அப்பகுதியை 'மூடப்பட்ட இராணுவ வலயம்' என்றும் பிரகடனப்படுத்தியுள்ளது. அவசியம் ஏற்படின் காஸாவுக்குள் தரைமார்க்கமான தாக்குதல்களை மேற்கொள்ள துருப்புகள் தயார் நிலையில்வைக்கப்பட்டுள்ளன என இஸ்ரேலிய பாதுகாப்புத் தலைமையதிகாரிதெரிவித்துள்ளார்.

காஸா மருத்துவமனைகளில் பெருந்தொகையானோர் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இடநெருக்கடிகள், போதிய மருந்து வகைகள் பற்றாக்குறை, டாக்டர்கள் பற்றாக்குறை ஆகியவற்றால் நோயாளர் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர் என செஞ்சிலுவைச் சங்கப் பிரமுகர் ஒருவர் களநிலையை விவரித்தார்.

அதேவேளை, மருத்துவ உதவிப் பொருட்களைக் கொண்ட ட்ரக்குகள், எகிப்திலிருந்து காஸாவுக்குள் செல்ல அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இதன்பொருட்டு எகிப்து அதன் நாட்டிலுள்ள கடவையை திறந்துவிட்டது.

சட்டவிரோத குடியேற்ற வாசிகள் 140 பேர் மோல்ட்டா கடற்கொந்தளிப்பில் அருந்தப்பு

மோல்ட்டா, டிச.31

மோல்ட்டா கடற்பிராந்தியத்தில் கடற்கொந்தளிப்பில் சிக்குண்டு மூழ்கவிருந்த படகில் இருந்த 140 சட்ட விரோத குடியேற்றவாசிகள் தக்க தருணத்தில் மீட்கப்பட்டார்கள். இவர்களில் 10 கர்ப்பவதிகளும் அடங்குவர் என அதிகாரிகள் பி.பி.ஸி. செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்கள்.

இந்தக் குடியேற்றவாசிகள் இப்படகில் இத்தாலியத் தீவான லம்பிடுஸாவை நோக்கிப் புறப்பட்டிருக்கலாம்.

மோல்ட்டா கடற்பிராந்தியத்திற்குள் பிரவேசித்ததும், எரிபொருள் தீர்ந்துவிட்ட நிலையில், கடற்கொந்தளிப்பில் இப்படகு சிக்கியுள்ளது என்றும் அவர்கள் கூறினார்கள்.

சட்ட விரோத குடியேற்றவாசிகளின் பிரவேசம் தொடர்பாக, இத்தாலிக்கும் லிபியாவுக்குமிடையே முறுகல் நிலை உருக்கொண்டுள்ளது. இச்சமயத்தில் படகு விபத்தில் மூழ்கவிருந்த இந்த சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் மோல்ட்டா கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளார்கள் என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இப்படகிலிருந்த குடியேற்றவாசிகள் உண்ண உணவின்றியும், குடிக்க தண்ணீரின்றியும் தவித்துள்ளார்கள். படகின் எரிபொருள் தீர்ந்தமை இத்தவிப்பை இரட்டிப்பாக்கியுள்ளது என மோல்ட்டா கடற்படை லெப்டினன்ட் கிளாடியோ சிக்னானினி தெரிவித்தார்.

சிசிலியிலுள்ள இத்தாலிய கரைப் பிராந்திய காவற்படையினர் இப்படகு தத்தளிப்பதைக் கண்டுள்ளனர். எனினும், மோல்ட்டாவுக்கு அண்மையில் இருந்தபடியால், மோல்ட்டா கடற்படையினரால் பயணிகள் மீட்கப்பட்டு விட்டனர் என்றும் அவர் விளக்கினார்.

இவ்வாண்டு ஆபிரிக்காவிலிருந்து வரும் சட்ட விரோதக் குடியேற்றவாசிகளின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது.

இத்தாலியத் தீவான லம்பிடூஸாவை வெள்ளிக்கிழமை மாத்திரம் 1,500 பேர் வந்தடைந்துள்ளனர். ஞாயிற்றுக்கிழமை, மேலும் 819 பேர் வந்துள்ளனர். இத்தீவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள குடியேற்றவாசிகளுக்கான தடுப்பு முகாம் சிறியது. 850 பேர் வரையே தங்கலாம். எண்ணிக்கை அதிகரிப்பால் பாரிய பிரச்சினை எழுந்துள்ளது என ஓர் இத்தாலிய அதிகாரி கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2008 கழியும் ஆண்டினை நீனைக்கவைக்கும் 2008 நிகழ்வுகள் இங்கே பதிவுகளாக...

ஜனவரி

ஜன-01
-நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் படுகொலை.
ஜன-02
- புலிகளுடனான போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகிக் கொள்ள அரசு முடிவு.
ஜன-08
- ஜா-எல வீதியோரக் குண்டு வெடிப்பில் தேச நிர்மாண அமைச்சர் டி.எம் தஸநாயக்கா பலி!
ஜன-10
- போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கத் தாம் தயார் எனப் புலிகள் அறிவிப்பு.
ஜன-15
- ஒப்பந்தத்தைக் கடைப்பிடிக்குமாறு அரசிடம் வலியுறுத்த வேண்டும். சர்வதேச சமூகத்திடம் அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன்.
ஜன-16
-மொனறாகலையில் பயணிகள் பஸ் மீது கிளைமோர் தாக்குதல். 29 அப்பாவிப் பொதுமக்கள் பலி!

ஜன-18
- மொனறாகலை தனமல்வியவில் பத்துப் பேர் சுட்டுப் படுகொலை.
ஜன-23
- இடைக்காலத் தீர்வுத் திட்ட யோசனை ஜனாதிபதியிடம் கையளிப்பு.
ஜன-28
- பலாலி படைத்தளத்தின் மீது விடுதலைப்புலிகள் ஷெல் தாக்குதல்! படையினர் பதிலடி.
ஜன-29
- மடுமாதா திருப்பதிக்குச் சமீபமாக கிளைமோர் தாக்குதலில் 17பேர் பலி!
ஜன-31
- திருநெல்வேலிச் சந்தையடியில் குண்டுவெடிப்பு! நால்வர் பலி!!

பெப்ரவரி

பெப்-02
- தம்புள்ளவில் பஸ்குண்டு வெடிப்பு! 20 பேர் பலி; 63 பேர் காயம்!!
பெப்-03
- கோட்டை ரயில் நிலையத்தில் குண்டு வெடித்து 12 பேர் பலி!
பெப்-04
05 இராணுவத்தினர், 2 பெண்கள் உட்பட 13 பேர் மணலாறு கிளைமோரில் பலி!, மாகான நிர்வாக முறைமையே நடைமுறைச் சாத்தியமான தீர்வு!- சுதந்திரதின உரையில் ஜனாதிபதி.
பெப்-09
- முன்னாள் அமைச்சர் ஸ்ரீபதி சூரியாராய்ச்சி கல்கமுவவில் வாகன விபத்தில் பலியானார்!
பெப்-12
-தள்ளாடி இராணுவ முகாம் மீது புலிகள் கடும் ஆட்லறித் தாக்குதல் 6 படையினர் பலி; 18பேர் காயம்.
பெப்-17
-தனி நாடாகியது கொசோவோ.
பெப்-22
- கிராஞ்சியில் விமானக்குண்டு வீச்சு! 3 குழந்தைகள் உட்பட 8 பேர் பலி!!
பெப்-26
- மஹிந்த- ரணில் அலரிமாளிகையில் சந்திப்பு.

மார்ச்

மார்ச்-03
- முல்லைத்தீவுக் கடலில் 13நாள்களாகக் குடிதண்ணீர், உணவின்றி தத்தளித்த பங்களாதேஷ், மியன்மார் பிரஜைகள் 71 பேர் மீட்பு; 20 பேர் சாவு.
மார்ச்-05
- கிழக்குத் தேர்தலைப் புறக்கணிக்க தமிழரிடம் கூட்டமைப்புக் கோரிக்கை.
மார்ச்-06
-யாழ்.மாவட்ட எம்.பி.சிவநேசன் கிளைமோர் தாக்குதலில் பலியானார்.
மார்ச்-09
- கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்.
மார்ச்-10
-வலி.வடக்கில் முதலில் 2, 680 குடும்பங்களை மீளக்குடியேற்ற உயர் நீதிமன்றம் தீர்ப்பு.
- மட்டு. மாநகரசபையை 11 உறுப்பினர்களுடன் அரசு- பிள்ளை யான் கூட்டணி கைப்பற்றியது.
மார்ச்-14
- ஈரானின் பொதுத் தேர்தல்
மார்ச்-16
நாடாளுமன்ற உறுப்பினர் அனுராபண்டார நாயக்க காலமானார்.
மார்ச்-19
- பிரபல விஞ்ஞானி ஆதர்.சி.கிளார்க் காலமானார்.
- நடிகர் ரகுவரன் காலமானார்.
மார்ச்-21
- பன்முகப் புலமையாளர் சச்சிதானந்தன் காலமானார்.
மார்ச்-22
-நாயாறில் கடற்படையினரின் டோறா படகு முழ்கிப்பு!

ஏப்ரல்

ஏப்-02
- கிழக்கு மாகாணத் தேர்தலை தமிழ்க் கூட்டமைப்புப் புறக்கணிப்பு.
ஏப்-06
- அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே குண்டுத் தாக்குதலில் பலி
ஏப்-08
- இரண்டாக உடைந்தது ஜே.வி.பி!
ஏப்-21
- அருட்தந்தை கருணாரட்ணம் கிளைமோர் தாக்குதலில் பலி!
ஏப்-25
- பிலியந்தல பஸ் நிலையத்தில் குண்டுவெடிப்பு; 24 பயணிகள் பலி! 70 பேர் காயம்
ஏப்-27
- மணலாறு இராணுவ முன்னரங்கப் பகுதி மீது புலிகளின் விமா னங்கள் அதிரடித் தாக்குதல்!
ஏப்-28
- ஈரான் ஜனாதிபதி இலங்கை விஜயம்.

மே

மே-10
- கிழக்கு மாகனசபைத் தேர்தல், ஆயுதங்களுடன் திருமலையில் தரித்து நின்ற படையினரின் 'இன் விசிபிள்' கப்பல் மூழ்கடிப்பு!
மே-12
-சீனாவில் பாரிய பூகம்பப் பேரனர்த்தம்! 10,000 பேர் பலி!!
மே-16
-கொழும்பு கோட்டையில் தற்கொலைத் தாக்குதல் பொலிஸார் உட்பட 10 பேர் பலி!, கிழக்கு முதலமைச்சராக பிள்ளையான் நியமனம்.
மே-20
-விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி பிரகேடியர் பால்ராஜ் மாரடைப்பால் மரணம்.
- ஐ.நா.மனித உரிமைக் கவுன்ஸில் தேர்தலில் இலங்கை தோல்வி.
மே-23
-முறிகண்டி, மல்லாவி கிளைமோர் தாக்குதல்களில் 18 அப்பாவிகள் பலி!
மே-26
-தெஹிவளையில் ரயில் குண்டு வெடிப்பில் 9 பேர் பலி!
மே-28
-சக்தி தொலைக்காட்சி ஊடகவியலாளர் தேவாவும் மற்றொருவரும் கல்லுண்டாய் வீதியில் வெட்டிக் கொலை!
- சிறுத்தீவுக் கடற்படைத் தளம் மீது கடற்புலிகள் அதிரடித் தாக்குதல்!

ஜூன்

ஜூன்-01
-தெற்கில் பெரு வெள்ளத்தால் 1,30,000 பேர் இடம்பெயர்வு!
ஜூன்-06
-கட்டுப்பெத்தவில் பஸ் மீது கிளைமோர் தாக்குதல்! 21 பயணிகள் பலி; 70 பேர்காயம்!!
ஜூன்-13
-யாழ்.போதனா வைத்தியசாலையில் தொலை மருத்துவசேவை ஆரம்பம்.
ஜூன்-15
-சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இறையடியெய்தினார்.
ஜூன்-16
-தற்கொலைத் குண்டுத் தாக்குதலில் வவுனியாவில் 12 பொலிஸார் பலி!
ஜூன்-21
-உயர்மட்ட இந்தியக் குழுவினர் கொழும்புக்குத் திடீர் விஜயம்!
ஜூன்-29
-துணுக்காய் உதவி அரச அதிபர் கிளைமோரில் உயிரிழப்பு.

ஜூலை

ஜூலை-01
-ஜனாதிபதி பயணிக்கும் ஹெலி அணி மீது அம்பாறை உல்லையில் வைத்துத் தாக்குதல்.
ஜூலை-03
-கருனா இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார்.
ஜூலை-12
-கைத்தொலைபேசிப் பாவனை விதிகளை கடுமையாக இறுக்கியது அரசு.
ஜூலை-16
-மட்டக்களப்பில் மனிதப் புதைகுழி! கினறு வெட்டக் கிளம்பின எச்சங்கள்.
ஜூலை-20
-மன்னாரில் இலுப்பைக் கடலை இராணுவத்திடம் என அரசுஅறிவிப்பு.
ஜூலை-22
-சார்க் மாநாட்டுக் காலத்தில் புலிகள் போர் நிறுத்தம் என அறிவிப்பு.
- மடுமாதாவின் திருச் சொரூபம் மன்னார் ஆயரின் இல்லத்துக்கு.
ஜூலை-24
-வவுனிக்குளம் தம்வசம் என இராணுவம் அறிவிப்பு.
ஜூலை-29
-அரசமைப்புக் கவுன்ஸில் நிறுவாததை ஆட்சேபித்து ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு.

ஓகஸ்ட்

ஓகஸ்-02
-சார்க் உச்சிமாநாடு கண்டியில் ஆரம்பம்.
ஓகஸ்-08
-ஒலிம்பிக் போட்டிகள் சீனாவில் ஆரம்பம்
ஓகஸ்-09
-மடுஅன்னையின் திருச்சொரூபம்மடுத்திருத்தலத்திற்குஎடுத்துச்செல்லப்பட்டது.
ஓகஸ்-18
-பதவியைத் துறந்தார் பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப்.
ஓகஸ்-23
-வடமத்திய, சப்பிரகமுவ மாகாண சபைத் தேர்தல்.
ஓகஸ்-26
-திருமலை கடற்படைத் தளம் மீது புலிகள் விமானத் தாக்குதல்!

செப்ரெம்பர்

செப்-02
-மல்லாவி நகரம் முழுமையாக படையினர் வசம்.
செப்-06
-பாகிஸ்தான் புதிய ஜனதிபதியாக சர்தாரி அமோக வெற்றிபெற்றார்.
செப்-09
-வவுனியா படைத்தலைமையகம் மீது புலிகள் 3 வழி அதிரடித் தாக்குதல்கள்!
செப்-11
-நாகசுர கானமழை பொழிந்த கானமூர்த்தி காலமானார்.
செப்-12
-தொண்டு நிறுவனங்களை வெளியேறவிடாமல் வன்னியில் மக்கள் முற்றுகைப் போராட்டம்!
செப்-14
-கொழும்பில் தற்காலிகமாகத் தங்கும் தமிழர்கள் வெளியேற வேண்டும். பாதுகாப்புச் செயலர் கோத்தபாய அறிவிப்பு.
செப்-15
-ஐ.நா.தொண்டு அமைப்புகள் வன்னியிலிருந்து வெளியேறின.
செப்-21
-கொழும்பில் மாபெரும் தமிழர் பதிவு.
செப்-30
- சாமுண்டாதேவி ஆலயத்தில் நவராத்திரிக்குச் சென்ற பக்தர்கள் நெரிசலில் சிக்கி 177 பேர் மரணம்.

ஒக்ரோபர்

ஒக்-01
- கிளிநொச்சி நகரச் சூழலில் அகோர விமானத் தாக்குதல்கள்!
- புலிகளின் காவல்துறை தலைமையகம் மீது கிளிநொச்சியில் விமானங்கள் குண்டு வீச்சு.
ஒக்-05
- ஈழத்தமிழர்களைக் காப்பாற்ற விரைந்து செயற்பட வேண்டும். இந்திய மத்திய அரசுக்கு கருணாநிதி அபாய அறிவிப்பு.
ஒக்-06
- அனுராதபுரத்தில் தற்கொலைத் தாக்குதல்; ஜானக பெரேரா உட்பட 28பேர் பலி!
ஒக்-07
- கருணா அரச தரப்பு எம்.பி யானார்.
ஒக்-08
- தமிழகத்தவரின் தார்மீக ஆதரவு அரசியல் ஆதரவாக மாறட்டும்! விடுதலைப் புலிகள் அறிக்கை.
ஒக்-09
- அமைச்சர் மைத்திரிபால சிறிசேனாவின் வாகன அணியின் மீது தற்கொலைத் தாக்குதல்!
ஒக்-14
- இலங்கையில் போரைநிறுத்தக் கோரி இந்திய அரசுக்கு 2 வார காலக்கெடு.
ஒக்-16
- யுத்தம் நிறுத்தப்பட மாட்டாது; கருணாநிதிக்கு மஹிந்த பதில்!
ஒக்-18
- இந்தியாவின் கவலை குறித்து நாம் மிகுந்த சிரத்தை கொள்கிறோம். மன்மோகனைத் தொலைபேசியில் அழைத்து மஹிந்த விளக்கம்
ஒக்-22
- காங்கேசன் துறைமுகத்தில் 2 கப்பல்கள் மீது தாக்குதல்!
ஒக்-24
- ஈழத்தமிழர் படுகொலையைக் கண்டித்து சென்னையில் மனித சங்கிலிப் போராட்டம்.
ஒக்-26
- தமிழக நாடாளுமன்ற உறுப்பினர் பதவி விலகும் முடிவைத் தற்காலிக மாக ஒத்தி வைத்தார் கலைஞர் கருணாநிதி?
ஒக்-28
- தள்ளாடியிலும் கொழும்பிலும் புலிகள் விமானத் தாக்குதல்கள்!
ஒக்-31
- ஈழத்தமிழர்களுக்கு ஆதரவு ; தமிழகத்தில் கடை அடைப்பு.

நவம்பர்

நவ-01
-நாகர் கோவிலில் கடும் கடற்சமர்! டோறா,ஹுவர் முழ்கடிப்பு!!
நவ-05
-அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா! தேர்தலில் அமோக வெற்றி!!
நவ-08
-போர்நிறுத்தம் தேவை என்ற எமது நிலையில் மாற்றம் இல்லை அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன்.
நவ-15
- பூநகரி படையினர் வசமானது. சங்குப்பிட்டிவரை முன்னேற்றம்.
நவ-25
-குடாநாட்டில் சகல பகுதிகளிலும் அடைமழை; வெள்ளப் பெருக்கு; பல குடும்பங்கள் இடம்பெயர்வு.
நவ-26
-மும்பையில் தீவிரவாதிகள் ஒன்பது இடங்களில் தாக்குதல், துப்பாக்கிச் சூடு. குண்டு வெடிப்பில் 101 பேர் பலி!
நவ-27
-இந்தியப் பேரரசுடன் உறவுகளைப் புதுப்பிக்க பிரபாகரன் அழைப்பு மாவீரர்தின உரையில் நேசக்கரம் நீட்டிச் செய்தி.

டிசெம்பர்

டிசெ-02
-இந்திய நிவாரணப் பொருள்கள் வன்னியைச் சென்றடைந்தன.
டிசெ-05
-நான்கு தமிழ் எம்.பிக்கள் நாட்டைவிட்டு வெளியேறாமல் தடை விதிக்கக் கோரி மனு.
டிசெ-07
-கூட்டமைப்பு எம்.பி.அரியநேந்திரனை வெளிநாடு செல்ல விடாது தடுத்தது சி.ஐ.டி.!
டிசெ-10
- கிளிநொச்சியில் இரு முனைகளில் மோதல் 90 துருப்புகள் பலி; 180பேர் படுகாயம்.
டிசெ-19
-சீமான், கௌத்தூர்மணி, மணியரசன் கைது!
டிசெ-20
-புலிகள் அதிரடித் தாக்குதல் இரணைமடு முன்னரங்கு மீட்பு!
டிசெ-23
-பொருளாதார மையங்களை புலிகள் இலக்கு வைக்கலாம்? 'ரொய்ட்டர்' பேட்டியில் நடேசன்.
டிசெ-28
-வத்தளையில் தற்கொலைத் தாக்குதல். படை அதிகாரி, 8 ஊர்காவலர்கள் பலி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ-மெயில் உங்கள் பணத்தையும் கொள்ளை அடிக்கும் கவனம்...!

மின்னஞ்சலின் (ஈ-மெயிலின்) சேவையும் அதனுடைய தேவையும் இன்றைய நவீன உலகில் எங்கும் வியாபித்துவிட்டது.

யாழ்.குடாநாட்டிலும் மின்னஞ்சலை நம்பியிருப்போரின் எண்ணிக்கை பெருகியவாறே உள்ளது. இந்நிலையில் மின்னஞ்சலிலுள்ள தொழில்நுட்ப வசதியைப் பயன்படுத்தி மோசடி செய்யும் முயற்சி ஒன்றில் யாழ்ப்பாணத்தவர் ஒருவரும் சிக்கி மீண்டுள்ளார். அவ்வாறான மின்னஞ்சல் மோசடிகளில் உதயன் வாசகர்கள் மாட்டிக்கொள்ளாமல் தப்பித்துக்கொள்வதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக இக்கட்டுரை பிரசுரமாகிறது.

விஞ்ஞானம் வளர்ந்து தந்த அறிவு தொழில்நுட்பம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் என்றால் மிகையாகாது. ஈ வேகத்தில் இருந்த இடத்திலிருந்து உலகிலுள்ள அனைவருடனும் தொடர்பு பட அப்படி ஒரு இணைப்பு இணையத்தளமூடாக. இந்த வசதி அனைவருக்கும் அவசியமானதொன்றாகிவிட்டது. அரைவாசி வெளித்தொடர்புகளும் இணையத்தளமூடாகவும், ஈ-மெயிலின் ஊடாகவும் நடைபெறுகின்றன. நல்ல தொழில்நுட்பமென்றாலும் அதனைப் பயன்படுத்தித் திருட்டுக்களும் நடக்கின்றன. அநேகமான இடங்களில் தலையிடியாகவும் மாறிவிடுகின்றன. திருடியவன் நிச்சயமாக மூளைசாலி. திருட்டு கொடுத்தவன் உண்மையிலே அப்பாவி. யாழ்ப்பாணத்தானுக்கும் ஒருவன் ''டிமிக்கி'' கொடுத்திருக்கிறான்.

எனது நண்பன் ஜெயத்திற்குத் தகவல் தொடர்பாடலில் கைகொடுத்திருப்பது 'ஏமாற்றம்'.கொம் மட்டும்தான். 1995களிலிருந்து இந்த பொறிமுறைக்கூடாகவே தனது ஈமெயில் தகவல் பரிமாற்றங்களை செய்து வருகிறார். ஆசிரியனாக இருப்பதால் அநேகமான மாணவர்களுக்கு இவருடன் தொடர்பு உண்டு. காலையில்

இது ஓர் உண்மைச் சம்பவம்; ஆனால் பெயர்கள் உண்மையானவை அல்ல.

ஈ-மெயில் பார்த்து அதிலுள்ள கடிதங்களுக்குப் பதில் கொடுத்து விட்டுத்தான் அன்றைய வேலை ஆரம்பமாகும். அலுவலக, தனிப்பட்ட, சிபார்சு கேட்டுவரும் கடிதங்களனைத்தும் இதில் உள்ளடங்கும்.

திடீரென்று ஒருநாள் ''ஈ-மெயில்'' ஒன்று ஜெயத்தின் ஈ-மெயில் பெட்டிக்குள் இருந்தது. வேலை அவசரம் இவருக்கு. அதற்கிடையில் வந்த செய்தியும் ஜெயத்தை அவசரப்படுத்தியது. செய்தி இதுதான். தொடர்ந்துவரும் தகவல் தொடர்பாடல் நெருக்கடி காரணமாக 'ஏமாற்றம்'.கொம் இன் முகவரிகளை மீள ஒழுங்கமைக்கும் பணி நடைபெற இருப்பதால் அடுத்த 24 மணி நேரத்தினுள் உமது ஏமாற்றம்.கொம்மின் முகவரி (ID), பிறந்த திகதி மற்றும் சங்கேதக் குறி (Password)இனை Reply mailஇல் தட்டச்சு செய்து உடன் அனுப்புமாறு கேட்டிருந்தது. முன்னரும் இதுபோல ஏமாற்றம்.கொம் மீள ஒழுங்கமைத்த நிகழ்வுகள் நடந்தாலும் வேலை அவசரத்தாலும் எதையுமே கவனிக்காமல் ஜெயம் விவரமனைத்தையும் பதிலில் கொடுத்துவிட்டார். இது அனைத்தும் காலையில் நடந்தது.

அன்று இரவு 12 மணிக்கு பெல்ஜியத்தில் படிக்கும் மாணவன் தீபனிடமிருந்து அவசர தொலைபேசி அழைப்பு எனக்கு வந்தது. லாந்தர் விளக்கில் இரவு நேர விட்டில் பூச்சியாகிவிட்டதால் அவசர அழைப்பை உடன் எடுத்தேன். தீபனிடமிருந்து வந்த கேள்வி என்னை யோசிக்க வைத்தது. ஜெயம் சேர் இப்போது எங்கிருக்கிறார்? யாழ்ப்பாணத்தில்தான். காலையில் கூட நான் கண்டேன் என்றேன். தீபன் விவரமாக விளக்கினான்.

ஜெயம் பயன்படுத்தும் 'ஏமாற்றம்' ஈமெயிலில் இருந்து தனக்கொரு கடிதம் வந்திருக்கின்றதென்றார். என்ன என நான் வினவியபோது ஜெயம் அனுப்பிய கடிதத்தில் இப்படி இருந்தாம். தான் நைஜீரியாவிலுள்ள ஆய்வு மையத்திற்கு வருகை தந்ததாகவும் வந்த இடத்தில் தான் இருந்த சுற்றுலா விடுதியில் தனது பேர்ஸ், ரிக்கற், பாஸ் போட், பணம் உட்பட அனைத்தையுமே தொலைத்து விட்டதாகவும் சுற்றுலா விடுதியில் தங்கியதற்கான விடுதிச் செலவும், ரிக்கற்றுக்கான பணமுமாக 1750 டொலர்கள் உடன் அனுப்பும்படியும், தொலைபேசி வசதி திடீரென விடுதியில் நிறுத்தப்பட்டதனால் ஈமெயிலில் மட்டும் தொடர்பு கொள்ளுவதாகவும் இந்தப் பணத்தை விரைந்து வெஸ்ரேன் யூனியனினூடாக அனுப்பும்படியும் கோரியிருந்தது. இதுபோல கடிதம் வேறொருவருக்கும் கிடைத்ததாகவும் அவர்கள் இதுபற்றி எங்களிடம் விசாரிக்க முனைந்ததாகவும் குறிப்பிட்டார். திடீரென ''பக்'' என்றது.

ஜெயத்தை காலையில் கண்டேனே. ஏனிப்பிடி எழுதினார். என்னையும் இது குழப்பிவிட்டது. ஜெயம் இங்கிருக்கும் விவரத்தைச் சொல்லி அந்த ஈமெயிலை எனக்கு Forward பண்ணச் சொன்னேன். எதுவுமே புரியாமல் மிகுதி நேரத்தில் நித்திரையானேன்.

அடுத்தநாள் காலை 8.15க்கு வேலைக்குப் போனேன். அங்கே ஜெயத்தைக்கண்டு முதல் நாளிரவு தீபனுடன் கதைத்த விடயத்தைச் சொன்னேன். ஜெயம் திகைத்து விட்டான். ஒன்றுமே புரியவில்லை.

ஜெயத்தை பார்த்தேன். கணனியுடன் தகராறுபட்டுக் கொண்டிருந்தான். என்னவெனக் கேட்டேன். இவ்வளவு நேரமும் முயற்சி செய்கிறேன். எனது 'ஏமாற்றம்' மெயில் திறக்கவே முடியவில்லை என்றான்.

அப்போதுதான் ஒன்று புரிந்தது. ஏதோ நடந்திருக்கிறது. எதிர்பார்க்காத அதிர்ச்சி இது.

நான் எனது Mail boxஐத் திறந்தேன். தீபனின் கடிதம் வந்திருந்தது. முதல்நாள் இரவு தெரிவித்த அவ்வளவும் ஜெயம் அனுப்பிய மாதிரி இருந்த கடிதம் அனைத்தையும் வாசித்து ஆச்சரியப்பட்டேன்.

இது இப்படி இருக்க இன்னும் சில கடிதங்களும் வந்திருந்தன. வெளிநாட்டிலிருந்து ஜெயத்தின் நண்பர் ஒருவர் வந்த தகவல் சரியா எனக்கேட்டு ராஜனுக்கு அனுப்பிய கடிதம் ஒன்று. இன்னுமொருவர் அவுஸ்திரேலியாவிலிருந்தும் விசாரித்து எழுதியிருக்கிறார். ஜெயத்தின் Boxஇலிருந்த கடிதங்களை தெரிந்தெடுத்து தனித்தனியாக இந்த திருட்டுப் பேர்வழி அனுப்பியிருக்கிறான்.

ஜெயத்தின் கையெழுத்துடனான தகவலில் இருந்த தொலைபேசி இலக்கங்களில், பக்ஸ் இலக்கங்களில் ஏன் செல்லிட தொலைபேசியின் இலக்கத்தில் கூட சிறு மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தான்.

மாற்றப்பட்ட தொலைபேசி இலக்கத்திலிருந்தவருக்கு அன்று நாள் முழுக்க அது ஜெயத்தின் இலக்கமென நினைத்து அவனின் நண்பர்கள், மாணவர்களுமென Call எடுத்ததால் அவர் கடுப்பாகியிருக்கிறார்.

இன்னொரு பக்கத்தில் வெளிநாட்டு நண்பர் ஒருவருக்கும் இதேமாதிரி ஒரு கடிதம் சென்றிருக்கிறது. அவர் தகவலைச் சரி செய்யும் முகமாக தன்னைச் செல்லமாக அழைக்கும் பெயரைக் குறிப்பிடும்படி கேட்டிருக்கிறார். பதில் வரவில்லை. இங்கே, ஜெயம் செய்வதறியாது துடித்துக் கொண்டிருந்தான். இறுதியில் அந்தத் திருட்டுப் பேர்வழியின் விதியை மதிவென்றது. ஏமாற்றம் மெயில் ஆரம்பிக்கும்போது கேட்கும் சங்கேத வினாவை எழுப்பி விடையளித்த போது ஜெயத்தின் [illegible] box திறந்தது. [illegible] தொடர்பாடல்களும் அம்பலமாகின. உடனேயே 'ஏமாற்றம்'.கொம்மிற்கான சங்கேதவரியை மாற்றினான். அதிலே பல கடிதங்கள் அழிக்கப்பட்டு இருந்தன.



போதாதென்று இன்னும் அனுப்பச் சொல்லியும் கேட்டிருக்கிறான்.

தலையிடி ஜெயத்தை விட்டு அகல வேயில்லை. திருடன் அறிவியல் திருடன். ஜெயத்தின் ஈமெயில் விலாசம் போல ஒரு சிறிய x ஐ அதனுடன் சேர்த்து தனக்கென ஜெயத்தினது மாதிரி ஈமெயில் விலாசத்தை உருவாக்கி ஜெயம் மாதிரி தொடர்பாடல் செய்கிறான்.

விஞ்ஞானம் வளர்ந்தது அஞ்ஞானம் கைக்கொள்ளவா? எந்த மாதிரி இப்படித்

அதன்மீது அசையா நம்பிக்கை வைத்திருந்த ஒருவருக்கு ஏற்பட்ட அவஸ்தையோ, அவஸ்தை...!

வெளிநாட்டில் வதியும் பல மாணவர்கள் உண்மையா எனகேட்டு எழுதியிருந்தார்கள். ஜெயத்திற்கு அன்று முழுவதும் அனைவருக்கும் விவரத்தைத் தெரிவிக்கும் பதில் கொடுப்பதே வேலையாகி இருந்தது.

தனது பழைய 'ஏமாற்றம்'.கொம் மீளவும் தனது கட்டுப்பாட்டிற்குள் வந்ததையிட்டு ஜெயம் அடைந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை.

யாரோ ஒரு மாணவி ஜெயத்தின் நிலையையெண்ணி உதவி செய்ய வெஸ்ரேண் மணி ரான்ஸ்பர் விவரத்தைக் கேட்டுப் பின் 1750 ஸ்ரேலிங்கை (இலங்கை மதிப்பில் 250000 ரூபா) திருட்டுப்பேர்வழி குறித்தனுப்பிய இடத்திற்கு அனுப்பிவிட்டார். திருடனுக்கு அடித்தது இலாபம். பிறகு அதுவும் திருட்டு எதற்கும் கைவண்ணம் அவசியம்.

ஜெயம் களைத்துப் போனான். இன்னொரு மாணவன் தனக்குக் கிடைத்த கடிதத்தின் மூலமாக அறிந்தவுடன் திருட்டுப்பேர்வழியைத் தொடர்ந்து சென்று பிடித்து விட்டான். இந்த திருட்டுக்குப் பயன்படுத்திய இலக்கத்தை மாற்ற நினைத்தும் முடியவில்லையே.

கு.மிகுந்தன்

திருடன் இருப்பது சீனாவில். அதுவும் கொங்கொங்கில். இடத்தை தெரிந்து ஆகியது பெரிதாக ஒன்றுமில்லை. இருந்தாலும் ஏனையவருக்கு இதனைத் தெரிவிப்பதன் மூலம் இவ்வகைத் திருட்டுக்கள் ஏனையவரில் நடைபெறாதிருக்க கவனமாயிருப்போம். விழிப்பாயிருங்கள். ✱ ✱ ✱ ✱ ✱

வாசகர் திருமுகம்

இரவுநேர மின்வெட்டைக் குறைத்து மாணவர்களுக்கு உதவுக

மல்லாகத்தில் காணப்படும் எனது வீட்டில் அனைத்து மின்குமிழ்களும் CFL (சக்திச் சிக்கன) மின்குமிழ்கள் தான். எம்போன்ற ஏனையவர்களும் மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்தவில்லையோ, என்னவோ மின்வெட்டு அமுல்படுத்தப்படுகிறது. இது பெரும்பாலும் இரவுநேரங்களிலேயே அமுல்படுத்தப்படுகிறது. இதன்மூலம் மாணவர்களாகிய எமது கல்வி பாதிக்கப்படுவதை எவருமே கண்டுகொள்வதாகத் தெரியவில்லை. திடீர் திடீர் என மின்சாரம் தடைப்படுவதால் எமது கல்வி சீராக முன்னெடுக்கப்படுவது சிரமமாகிறது. நாம் மிகவும் மன உளைச்சலுக்கு உள்ளாக்கப்படுகிறோம். நாளைய நாட்டின் தலைவர்களாக விளங்க எமக்கு உதவும் கல்வியைச் சிறப்பாக நாம் முன்னெடுக்க உதவுமாறு மின்சார சபையினரை மாணவர்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். மின்சாரத்தை முழுமையாக விநியோகிக்கமுடியாவிட்டால் அதிகாலை, நள்ளிரவு போன்ற நேரங்களில் மின்வெட்டை பிரயோகிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அமுல்படுத்துவதன்மூலம் எத்துறை சார்ந்தோருக்கும் தீமை ஏற்பட வாய்ப்பில்லை. எனவே இரவுநேர மின்வெட்டை இயன்றவரை தவிர்த்து மாணவராகிய எமது கல்வியைச் சிறந்த முறையில் முன்னெடுக்க ஒத்துழைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மல்லாகம் மத்தி. **வி.திவாகரன்.**

கைதாகி, காணாமல் போனவர்களில் தங்கியிருந்தவர்கள் படும் துன்பங்களைக் கவனிப்பார் இல்லையா?

1996ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்டு காணாமல்போன 700க்கு மேற்பட்டவர்களின் நிலை தொடர்பாக விவரம் 12 வருடங்கள் கழிந்த நிலையிலும் முடிவின்றி தொடர்கின்ற நிலையில் காணாமல் போனவர்களின் குடும்பங்களின் அதாவது விதவைகள் - அநாதையாக்கப்பட்டவர்கள் - பிறர் உழைப்பில் தங்கியிருந்து இன்று வாழ்க்கை நடத்துவதற்கு துன்பப்படுகின்றவர்களின் அவலநிலையைத் துடைப்பதற்கு யாரும் முன்வரமாட்டார்களா?

குடாநாட்டின் அபிவிருத்தியும் மீள்கட்டமைப்பும் அவசியம்தான். ஆனால் அதற்கு மேலாக இன்று கவனிக்கப்படவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் தினம் தினம் சீவிக்கமுடியாது செத்து மடிந்து கொண்டிருக்கும் இக்குடும்பங்களின் வறுமை நிலையைப் போக்கி உதவ யாரும் முன்வருவதாகத் தெரியவில்லை. கடந்த 12 வருடங்களாகத் தமது பிள்ளைகள், கணவன்மார், சகோதரர்கள் திரும்பிவருவார்கள் என்ற நம்பிக்கையுடன் வாழ்ந்து இன்று எதுவுமே நடப்பதற்கு இல்லை என்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் குடும்பங்களை யார் காப்பாற்றுவார்? கரையேற்றுவார்?

இறைவனும் இரங்காத நிலையில் இவர்கள் விடயத்தில் பெரிய மனம் வைத்து அதிகாரிகள், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள், அரசியல் தலைவர்கள் போன்றோர் [illegible] என்று எதிர்பார்க்கின்றோம்.

காணாமல் போனவரின் சார்பான உறவு
த.விஜயகுமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலில் தலையிருந்தாலும்
சாதிக்கத் தூடிக்கும் சிறுவன்

இரண்ட பசும் புல்வெளி மைதானம். விறுவிறுப்பான 'ரக்பி' ஆட்டம். அடர் கறுப்புக்கண்ணாடி அணிந்த அந்தச் சிறுவன் பரபரவென்று ஓடினான். தனது அணிக்காக அடுத்தடுத்து சுறுசுறுப்பாக 'ஸ்கோர்' செய்கிறான். பார்வையாளர்கள், சக மாணவர்கள் உற்சாகக் கூச்சல் எழுப்புகிறார்கள். தங்களை அறியாமல் வழியும் கண்ணீரைத் துடைத்துக் கொள்கின்றனர் அந்தச் சிறுவனின் பெற்றோர்.

காரணம் இருக்கிறது. சாம்விஷார்ட் என்ற அந்தச் சிறுவனுக்கு ஏறக்குறைய பார்வை தெரியாது. 12 வயதாகும் சாம் இங்கிலாந்து சாமர் செட்டில் உள்ள ஒரு பாடசாலையில் படிக்கிறான். ஒரு விசித்திரமான வியாதியால் பாதிக்கப்பட்டிருக்கிறான். 'கோன்டிஸ்ட்ரோபி' என்பது அந்த வியாதியின் பெயர். இதன் காரணமாக சாமின் விழிகள் எப்போதும் ஆடிக்கொண்டே இருக்கும். எந்த வர்ணத்தையும் அவனால் பார்க்க முடியாது. மசமசப்பாகத் தெரியும். வெளிச்சத்தைப் பார்த்தால் தெரியாது. எப்போதும் கனத்த கறுப்புக்கண்ணாடி அணிந்துகொண்டே இருக்கவேண்டும்.

இதையெல்லாம் தாண்டி தனது பள்ளி அணிக்கே கப்டனாகச் சாதித்திருக்கிறான் சாம். அதில் அவன் பெற்றோர் ஆண்டி-மெலிசாவுக்குப் பெரும் சந்தோஷம். ''சாம் பற்றி நாங்கள் ரொம்ப பெருமைப்படுகிறோம்'' என்கிறார்கள் பூரிப்புடன்.

சாம் முதன்முதலில் ரக்பி பந்தைத் தொட்டது ஆறு வயதில். அப்போது அப்பா, அண்ணன் டாம் ஆகியோருடன் தோட்டத்தில் விளையாட்டாக ரக்பி விளையாடுவான். அப்படித்தான் அவனுக்கு இவ்விளையாட்டில் ஆர்வம் ஏற்பட்டது. சாமின் திறமையை அறிந்த அவனது பாடசாலைப் பயிற்சியாளர் பால் லோவட் அவனுக்கு முறையாகப் பயிற்சி அளிக்கத் தொடங்கினார்.

ஆனாலும் சாமின் பெற்றோருக்கு அவனை ரக்பி விளையாட அனுமதிப்பதா என்ற தயக்கம் இருந்தது. அவனது பார்வைக் குறைபாடு பற்றி எண்ணித்தான் அவர்கள் கவலைப்பட்டனர். ஆனால் சாம் தயங்கவில்லை; யோசிக்கவில்லை. விளையாட்டில் தீவிரமாக இருந்தான்.

சாம் படித்த பாடசாலையில்தான் அவனது அண்ணன் டாமும் படித்தான். பாடசாலை ரக்பி அணியில் அண்ணன் இடம்பிடிக்க அவன் கூடவே சென்று பயிற்சி பெற்றான் சாம். அப்படியே அணியில் இடம் பிடித்து தனது சிறப்பான ஆட்டத்தால் கப்டனாகவும் ஆகிவிட்டான். இவனது தலைமையின்கீழ் ஒரு போட்டித்தொடரில் வெற்றியும் ஒரு தொடரில் இரண்டாம் இடமும் பெற்றது பாடசாலை அணி. இதுவரை 11 வயதுக்கு உட்பட்டோருக்கான அணியில் விளையாடிய சாம் வயது கூடுவதால் இனி மேல்நிலைப் போட்டிகளில் விளையாடுவது கடுமையாக இருக்கும். அதற்காகத் தனது கண்ணாடி இடையூறு என்று கருதுவதால் 'கான்டாக்ட்வென்ஸ்' அணிய முடிவெடுத்திருக்கிறான் சாம். பிரபல ஸ்காட்லான்ட் ரக்பி வீரரான சீன் பொமென்ட் போல புகழ்பெற வேண்டும் என்பது சாம் விஷார்ட்டின் விருப்பம். தனது தன்னம்பிக்கை உறுதியால் சாம் அதைச் சாதிப்பான் என்கிறார்கள் அவனது வீட்டிலும் அவனது பாடசாலை வட்டாரத்திலும். ★

அண்டவெளி மையத்தில் இராட்சத கருந்துவாரம்

அண்டவெளியின் மையத்தில் இராட்சத கருந்துவாரம் ஒன்று இருப்பதைக் கண்டறிந்துள்ளதாக ஜேர்மனிய விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

பால்வெளியின் மையத்தில் 28 நட்சத்திரங்களால் சூழப்பட்ட பகுதியில் மேற்படி கருந்துவாரத்தை அவதானித்ததாக இந்த ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

சிலியிலுள்ள ஐரோப்பிய தெற்கு விண்வெளி அவதான நிலையத்திலுள்ள விண்வெளித் தொலைக்காட்சியைப் பயன்படுத்தி கண்டறியப்பட்ட இந்தக் கருந்துவாரம் தொடர்பான தகவல்கள், ''த அஸ்ரோபிஸிகல்'' விண்வெளி விஞ்ஞான வெளியீட்டில் பிரசுரமாகியுள்ளன.

கருந்துவாரமானது எமது சூரியனைவிட 4 மில்லியன் மடங்கு பருமனானது என மதிப்பிடப்பட்டுள்ளது. அதீத ஈர்ப்புத் தன்மைச் சக்தியைக் கொண்ட வஸ்துக்களை உள்ளடக்கிய இந்த கருந்துவாரமானது தன்னைச் சுற்றியுள்ளவற்றை உள்ளீர்க்கும் வலிமை கொண்டுள்ளது என்பதால் அபாயம் மிக்கதாக விஞ்ஞானிகளால் கருதப்படுகின்றது.

இக்கருந்துவாரம் தன்னை அண்மித்துள்ளவற்றை உள்ளீர்ப்பதன் மூலம் போதிய அடர்த்தியைப் பெறுகையில், பெரும் சக்தி வெளிப்பாட்டுத் தாக்கங்கள் இடம்பெற்று நட்சத்திரமாக உருமாற்றம் அடைவதாக ஆய்வை மேற்கொண்ட ஜேர்மனிய 'மக்ஸ் பிளான்க்' விண்வெளி ஆய்வுகூட ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இந்தக் கருந்துவாரம் பூமியிலிருந்து 27000 ஒளியாண்டுகள் தொலைவில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 16 வருட ஆய்வையடுத்தே இந்தக் கருந்துவாரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ★

வா தூது போகிறேன்

எம்.பிரஸவன்.

சுரைந்து மாதங்கள் என்னை
கருவினிலே காத்தவளே!
உன் உதிரத்தைப் பாலாக்கி
உணவதைக் கொடுத்தவளே!
உனக்காக எழுதுகிறேன் என்
உதிரத்தால் ஒரு கவிதை
நீ செய்யும் சேவைக்கு
இவ் உலகம் போதாது
உன்னைவிட இவ் உலகில்
ஏது செய்ய உறவேது!
உன மடிப்பஞ்சணையை
காணிக்கையாய்
தினம் தந்த உனக்காக
என் மன ஏட்டில் உன்னை மாட்டி
என்றாலும் போற்றுகிறேன்
உயர் குணங்கள் நீ கொண்டு
உள்ளத்தில் அன்பு கொண்டு
உலகையே ஆட்சி செய்யும்
என் உயிர்மிக்க தாயே!
வாழ்த்துகிறேன்
உன்னை வயார..!

காத்திலிங்கம்
உதயகலா,
தொண்டைமானாறு

குடைகள் எப்பொழுது பாவனைக்கு வந்தன...?

ரம்யன்

மழை இலேசாகத் தூறிக்கொண்டிருந்தது. இரண்டு இளம் பெண்கள் மழையில் நனைந்தபடி அவசரமாக நடந்து வந்து ஓர் இடத்தில் நின்றார்கள். ஏற் கனவே மழைக்காக அவ்விடத்தில் நின்றிருந்த மூன்று இளைஞர்கள் அப் பெண்களைப் பார்த்து கேலி செய்தார்கள். ''பாவம் மேக் அப் பவுடர் எல்லாம் கழுவிப் போய்விட்டது. மழைவரும் என்று தெரியாதா? குடையைக் கொண்டு வந்திருக்கலாமே'' என்று அவர்கள் கிண்டல் செய்தார்கள். அதேவேளை அந்த இடத்தில் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் நின்றிருந்ததை அவர்கள் கவனிக்கவில்லை போலும். அவர்களில் ஒருவர் பொலிஸ் சார்ஜன்ட். அவர் சிரித்துக் கொண்டே அவ்வாலிபர்களை அணுகி - ''இந்தப் பிள்ளைகள் நனைகிறார்கள் என்று கவலைப்பட்டால் போதாது - உதவி செய்யவேண்டும் - எங்கே பொக்கட்டில் வைத்திருக்கும் பணத்தை எடுங்கள்'' என்றார். செய்வதறியாத வாலிபர்கள் மூவரும் தம் பொக்கட்டுகளில் இருந்த பணத்தை எடுத்து கொடுத்தார்கள். சார்ஜன்ட் அப்பணத்தைக்கொண்டு கடையிலேயே இரண்டு குடைகளை வாங்கி அப்பெண்களிடம் கொடுத்து போகச் சொன்னார். ''கவலைப்பட்டால் போதாது உதவி செய்யவேண்டும். தெரிந்துகொள்ளுங்கள்'' என்று அப்பையன்களுக்கு அறிவுரை கூறிவிட்டு பொலிஸார் புறப்பட்டனர்.

சில காலத்துக்கு முன் தமிழ்ப் பிரதேசத்தில் இடம்பெற்ற இச்சம்பவம் மழைக்காலத்தில் குடையின் அவசியத்தை எடுத்துக் காட்டுகிறது அல்லவா?

ஆனால் ஆரம்ப காலத்தில் குடைகள் மழைக்காகப் பெரும்பாலும் பயன்படுத்தப்படவில்லை. வெயில் காலத்தில் நிழலுக்காகவே குடையை முதலில் பயன்படுத்தி இருக்கிறார்கள். குடையை முதன்முதல் யார் கண்டுபிடித்தார்கள் என்பது எவருக்கும் தெரியாதுள்ளது. ஆனால் புராதன காலத்திலிருந்தே குடை பாவனையில் இருந்து வந்துள்ளது. அநேகமாக சீனர்கள்தான் கி.மு. 11ஆம் நூற்றாண்டளவில் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பது தெரிய வந்துள்ளது. எகிப்து, பாபிலோன் நாடுகளில் நிழலுக்காகக் குடைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. குடைப் பாவனையானது கௌரவத்துக்காகவும் அதிகாரத்தை வெளிப்படுத்துவதற்காகவும் முற்காலத்தில் மேற் கொள்ளப்பட்டுள்ளது. தூர கிழக்கு நாடுகளில் அரச குடும்பத்தவர்களும் உயர் குடும்பத்தவர்களும் மட்டுமே குடைகளைப் பாவிக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஐரோப்பாவில் கிரேக்கர்களே முதலில் குடைகளை நிழலுக்காகப் பயன்படுத்தியுள்ளனர். பின்னர் ரோமானியர்கள் தாம் மழைக்காக குடைகளை முதன்முதல் பாவித்தார்கள் என்று தெரிகின்றது.

மத்திய காலத்தில் குடை பாவனை பழக்கத்திலிருந்து மறைந்து விட்டதாகவும் பின்னர் 16ஆம் நூற்றாண்டளவில் இத்தாலியில் அது மீண்டும் புழக்கத்துக்கு வந்துள்ளது என்றும் தெரிகிறது. 18ஆம் நூற்றாண்டில் ஐரோப்பா முழுவதிலும் குடைகள் பாவனைக்கு வந்துவிட்டன. குடைகள் காலப்போக்கில் அதிகம் மாற்றமடையாது போனாலும் 20 ஆம் நூற்றாண்டில்தான் பெண்களுக்கான குடைகள் பல மாதிரிகளிலும் வண்ணங்களிலும் உற்பத்தி செய்யப்படலாயின. ✱

நிஜமே வெல்லும்

கனவுகளுக்காக நான்
வாழ்ந்த காலங்களில்
என் முயற்சிகளும்
கனவாகச் சென்றன
நிஜங்களுக்காக
என் வாழ்வு
பயணிக்கும் போது
என் முயற்சிகளும்
நிஜங்களாக
ஊஞ்சலாடுகின்றன.

வல்வைச் சுமன், வல்வெட்டித்துறை.

சிறந்த தலைமைத்துவம்

உலகில் உள்ள மிகப் பெரிய பல்பொருள் அங்காடிகளில் ஒன்று லண்டனின் 'செல்ஃபிரிட்ஜ்' ஆகும். அந்த அங்காடியின் மாபெரும் வெற்றியின் இரகசியம் என்ன? 'நான் என் சகாக்களுடன் ஓர் எஜமானன் போல நடந்து கொள்வதில்லை; ஒரு தலைவனைப் போல நடந்து கொள்கிறேன். இதுதான் வெற்றியின் இரகசியம்' என்கிறார் அதன் உரிமையாளர் செல்ஃபிரிட்ஜ். 'எஜமானுக்கும் தலைவனுக்கும் அப்படி என்ன வித்தியாசம் உள்ளது? என்று கேட்டுவிட்டால் போதும் உடனே ஒவ்வொன்றாய்ச் சொல்லி விரலை மடக்குகிறார் அவர்.

எஜமான் வேலை வாங்குவார்; தலைவர் பயிற்சி அளிப்பார்.

எஜமானுக்கு அடிப்படை தனது அதிகாரம்; தலைவனுக்கு அடிப்படை நல்லெண்ணம்.

எஜமான் பயத்தை ஏற்படுத்துவார்; தலைவன் உற்சாகத்தை ஏற்படுத்துவார்.

எஜமான் எதற்கும் 'நான்' என்பார்; தலைவன் 'நாங்கள்' என்பார்.

எஜமான் தவறுக்குப் பொறுப்பாளி யார் என்று கண்டுபிடிப்பதிலேயே குறியாய் இருப்பார்; ஆனால் தலைவனோ தவறைக் கண்டுபிடிப்பார்.

எஜமான் 'வேலை செய்!' என்று உத்தரவு போடுவார்; தலைவன் 'நாம் எல்லோரும் சேர்ந்து வேலை செய்வோம், வாருங்கள்' என்று மிகவும் பரிவோடு அழைப்பார். ✱

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
19.08.1943

மறைவு
29.12.2000

அமரர் குமரேசு சதாசிவம்

திதி: சதுர்த்தி (31.12.2008)

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தும்பளை மேற்கு, பருத்தித்துறை. (30788) குடும்பத்தினர்.

உடுவில் கல்விக் கோட்டத்தில் இடம்பெற்ற கல்வித்தின நிகழ்வில் மாகாண மட்டத்தில் இடம்பெற்ற ஆங்கில நாடகப் போட்டியில் கீழ் பிரிவு, மத்தியபிரிவு, மேல் பிரிவு ஆகியவற்றில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவிகள் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர்.

கௌரவிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினர்ராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலை உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் மாணவர்களைப் பாராட்டிக் கௌரவித்தார்.

வெற்றிபெற்ற மாணவர்கள் உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சத்தியசீலன், உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.குபேரநாதனுடன் எடுத்துக்கொண்ட படம். (படம்: நேசன்)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறந்தது
10.10.1932

மறைந்தது
01.12.2008

அமரர் செல்லையா வேலாயுதபிள்ளை

(ஓய்வுபெற்ற பிராந்திய முகாமையாளர் - ஆனையிறவு உப்பளம்)

கனிவான முகமும் அன்பான பேச்சும்
நிதானமான பொறுமையான செயல்களும்
நிமிர்ந்த நடையும் சிந்தனையைச் செயலாக்கும்
திறமையும் எல்லோரையும் மதிக்கின்ற
மனப்பாங்கும் மறைந்து இன்றோடு
முப்பத்தொரு நாள்கள் ஆனதப்பா!
உங்கள் ஆத்மா கும்பழாவளையான்
திருப்பாதத்தில் சாந்திபெற வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி!

'திருவதிகை', அளவெட்டி. (81268) உங்கள் நினைவுகளுடன்: மகள், மருமகன், பேரன்மார்.

குருநகர் பிரதேசத்தில் குப்பைகள் அகற்றப்பட்டன

வண்ணை, டிசெ.31

குருநகர் பிரதேச வீதி ஓரங்களில் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக தேங்கிக் கிடந்த குப்பைகளை கடந்த திங்கட் கிழமை யாழ்.மாநகர சபை ஊழியர்கள் வாகனங்களில் எடுத்துச் சென்று அகற்றி உள்ளனர்.

'நிஷா' புயலால் சேதமடைந்த மரங்களின் எச்சங்கள் கடந்த ஒருமாத காலமாக வீதி ஓரங்களில் கிடந்து போக்கு வரத்திற்கு அசௌகரியம் ஏற்படுத்தின. அதேவேளை நுளம்பு போன்ற நோய்க் காவிகளின் பெருக்கத்திற்கும் காரணமாக இருந்து வந்தன.

குறிப்பாக உத்தரியமாதா ஆலயத்தின் வாசல் பகுதியிலும், கார்மேல் மண்டபத்தின் ஓரங்களிலும் பெருமளவான குப்பைகள் சேர்ந்திருந்தன.

புதுவருடக் கொண்டாட்டங்கள் நெருங்குகையில் வீதிகள் குப்பை, கூழங்களால் நிரம்பி வழிவதைத்தான் காண நேருமோ என மக்கள் சிந்தித்துக் கொண்டிருந்த வேளையில்குப்பை, கூழங்கள் அகற்றப் பட்டதை அடுத்து வீதிகள் புதுமெருகுடன் விளங்குகின்றன. (202-160)

பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடையவழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே, என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச் சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள், எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக் காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்னும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன்.

ஓ! பரிசுத்த ஆவியே!
உமக்கு நன்றி.

(81312) - ஓர் அடியாள்.

'சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம்'
என்னும்
நூல் வெளியீட்டு விழா

காலம்: 02.01.2009 பி.ப.2.30 மணிக்கு
இடம்: நல்லை ஆதீன மண்டபம்
தலைமை: கலாநிதி க.குணராசா

நிகழ்ச்சி நிரல்

மங்கல விளக்கேற்றல்
தமிழ்த்தாய் வாழ்த்து
ஆசியுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் (நல்லை ஆதீன முதல்வர்)
வாழ்த்துரை: செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் (தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்)
தலைமையுரை: கலாநிதி க.குணராசா
வெளியீட்டுரை: கலாநிதி சுபேதினி ரமேஷ் (தலைவர், மொழியியல் மற்றும் ஆங்கிலத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
முதற் பிரதி வழங்கல்:
வழங்குபவர்: கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் (தொகுப்பாளர்)
பெறுபவர்: திரு.ச.இரவீந்திரா (முதன்மை முகாமையாளர், வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம்)
மதிப்பீட்டுரை: பேராசிரியர் கலாநிதி கலைவாணி இராமநாதன் (இந்து நாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
சிறப்புப் பிரதி வழங்கல்
ஏற்புரை: கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
நன்றியுரை: செல்வி செல்வஅம்பிகை நடராஜா M.Phil. (தொகுப்பாளர்)

இவ்விழாவிலே பங்குபற்றிச் சிறப்புச் செய்யுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(81151) தொகுப்பாளர்கள்.

COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250
Branch : #07, Kanpollai Lane, Kodikamam Rd, Nelliyadi

O/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதிய பிரிவுகள்
மாபெருந்கட்டணக்கழிவுடன் ஆரம்பமாகின்றது

மாபெரும் புலமைப்பரிசில்திட்டம் – 2008 80%OFF

நிலையியற்றிருநூறு...

Diploma in Microsoft Office 3 Months 1500/=	Diploma in Desktop Publishing 4 Months ~~10000~~ 2000/=	Diploma in Web Page Designing 3 Months ~~10750~~ 2150/=
Diploma in Graphic Designing 4 Months ~~10750~~ 2150/=	Diploma in Hardware Engineering 3 Months ~~10000~~ 2000/=	Diploma in Auto CAD 3 Months ~~10000~~ 2000/=
Diploma in Accounting Package 3 Months ~~10750~~ 2150/=	Diploma in Computer Science 4 Months ~~10750~~ 2150/=	Honors Diploma in Computer Science 3 Months ~~13000~~ 2600/=

50% Off Advance Courses

Dip. in. Multimedia	2750
Dip. in. Video Editing	3250
Dip. in. Networking	5000

Computer Express கரும்பர் தூரிகாவி வகுப்புகள் நடாத்தப்படும் சான்றுத் தரவுப்பத்திரங்களுடன் வழங்கப்படும் செய்முறைப்பயிற்சி

January 15ம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளவும்.

யாழ்நகரில் ஆரம்பம்	நெல்லியடியில் ஆரம்பம்
Batch I: 03/01/2009 -10AM	Batch I: 01/01/2009 -09AM
Batch II: 04/01/2009 -10AM	Batch II: 03/01/2009 -10AM
Batch III: 05/01/2009 -11AM	Batch III: 04/01/2009 -10AM
Batch IV: 06/01/2009 -09AM	Batch IV: 06/01/2009 -09AM

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வழிகாட்டலும் ஆலோசனையும் உடன் தேவை

இன்று தமது பிள்ளைகளை எம் மொழிமூல உயர் (A/L) வகுப்பிற்குச் சேர்ப்பது, சேர்வது எனத் தடுமாறும் பெற்றோருக்கும் எம் பிள்ளைகளுக்கும் மிக மிக அவசியமானதும் அவசரமானதும் மேற்படி விடயமாகும்.

காலத்திற்குக் காலம் கல்வியுலகின் மாற்றங்களால் பரீட்சிக்கப்பட்டுப் பாதிப்படைவதும், பயன்பெறுவதும் எம் மாணவர் சமுதாயமே. இதற்கு ஒரு நல்ல உதாரணம் 1970களில் அறிமுகப்படுத்தப்பட்டு காற்றோடு கரைந்துபோன N.C.G.E. பாடத்திட்ட அமுலாக்கலாகும். இன்று ஆங்கிலமொழி மூலத்தில் தோற்றிய பிள்ளைகள் A/L தெரிவிற்கு மொழிமூலத்தில் தடுமாறுகின்றனர். குறிப்பாக, கணித, உயிரியற் பிரிவினர் ஆங்கிலமொழி மூலம் தம் இலக்கிற்கு உதவாது எனவும் கடின மானது எனவும் தாமாகவே முடிவெடுத்து தமிழ்மொழி மூலத்தைத் தேர்ந்துவிட்டனர். சிலர் இன்னும் மதில்மேற் பூனைகளாகத் தடுமாறுகின்றனர். காரணம் இரு மொழி மூலத்தினருக்கும் தேர்வுமுறை, வினாமுறை Z புள்ளி ஒன்றே. மொழிப் பயன்பாட்டினால் ஆங்கிலமொழி மூலத்தில் O/Lஇல் விடையளித்த பிள்ளைகள் பட்ட பாடு படித்தவர் புரிவர். தமிழிற் கேட்கப்பட்ட அதே கேள்வியை ஆங்கிலத்தில் கேட்ட விதம் மொழிப் பிரயோகம் பெரிதும் பாதிப்படையச் செய்துள்ளது. எனவே உச்சப்புள்ளி பெறுதல், வினாவைப் புரிதலும் மொழியிலும் தங்கியுள்ளமை சகலரும் அறிவர். இதனால் ஆங்கிலமொழி மூலத் தெரிவு தவிர்க்கப்படுவது தவிர்க்க முடியாதது ஆகின்றது அல்லவா? O/L இல் கூட ஆங்கிலமொழி மூலத்தினருக்கு 'A' குறையும் வாய்ப்பு உண்டு.

ரியூட்டரிகள் அனுமதி, ஆங்கிலமொழி மூலத்தினரைக் கோரி நிற்கும் நேரத்தில் பாடசாலைகள் உடன் விழிப்புணர்வூட்ட

வேண்டிய தேவை தெரிகிறது. இது எவரையும் குறைகூறுதற்கன்று. யதார்த்தம் புரிந்து, தடுமாறும் எம் தமிழ் மாணவர் உலகிற்குத் தகுந்த வழிகாட்ட கல்வியியலா ளர்களையும் கடமைப்பட்டோரையும் கோரி நிற்கின்றோம்.

அன்னைதாஸன், உரும்பிராய்.

நகரத்தில் நகர வேண்டிய நரகம்

சுமார் ஒரு மாதத்திற்கு முன் நிகழ்ந்த புயல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தாவரங்களின் எச்சங்கள் குறிப்பாக வாழை மரக் குற்றிகள் இன்றும் யாழ்.நகரின் வீதிகள் பல வற்றில் அகற்றப்படாது காட்சி அளிக்கின்றன. குறிப்பாகப் பல்கலைக்கழகத்திற்கு முன்பான இராமநாதன் வீதி, இராசாவின் தோட்ட வீதி என்பவற்றில் குப்பைகள் அதிக அளவில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகத்திற்கு முன்பாக சுமார் 4 அடி உயரத்திற்கு செடிகள் வளர்ந்து காணப்படுகின்றன. இக்குப்பைகள் சிதைவடைந்து இலையான்கள் பெருகி வயிற்றோட்டம், நெருப்புக்காய்ச்சல் நோய்கள் பரவ ஏதுவாகும். நுளம்புகள் பெருகின் டெங்கு, சிக்குன்குனியா போன்ற நோய்கள் ஏற்படும். செடிகள் பற்றைகளில் இருந்து தைபசு நோய் ஏற்படலாம்.

எனவே இக்குப்பைகளை அகற்றுவது உள்ளூராட்சித் திணைக்களத் தின் கடமை என்று கூறிவிட்டு மூக்கை மூடிக் கொண்டு அவ்வழியால் செல்வது மனிதனுக்கு உகந்த செயலல்ல. இக்குப்பைகளைத் தெருவில் போட்டவர்களும் கல்வி கற்றவர்கள், பணம் படைத்தவர்கள் அவர்களது சுயவட்டமானது நான், எனது என்பது தமது வீட்டு மதிலுக்குள் மட்டும் அமையாது சமூகத்தினையும் சிந்திக்கவேண்டும். அவர்கள் தங்கள் பகுதியில் உள்ள குப்பைகளை பணம் கொடுத்து டிராக்டர்மூலம் குப்பைகள் பறிக்கப்படும் இடத்துக்கு அனுப்ப முயற்சிக்கவேண்டும். ஏனெனில் தற்போதைய வேலைப்பளுவில் உள்ளூராட்சித் திணைக்கள ஊழியர்களுக்கு அவற்றை அகற்ற இன்னும் 3 மாதங்களாவது தேவை. எனவே அதுவரைக்கும் அவற்றை தமது வீட்டுக்கு வெளியே தெருவில் சிதைவடைய விடுவது நல்லதல்ல. இதனை பலர் கூட்டாக மேற்கொள்ளலாம். தெருக்கழிவுகளை அகற்ற தனிப்பட்ட ஊதியம் வேண்டும். அமைப்புக்கள் உருவாக்கப்படல் அவசியம்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பெரும்பாலான வீடுகளில் அதன் உரிமையாளர்கள் வசிப்பதில்லை. இதனால் அவ்வீடுகளின் மதில்களுக்கு வெளியே உள்ள புற்கள், செடிகளை அங்கு வசிப்பவர்கள் சுத்தம் செய்வதில்லை. இந்த மனப்பாங்கு மாறவேண்டும். மேலும் பொது இடங்களில் குப்பைகள் செடிகள் காணப்படும் போது அங்கு செல்பவர்கள் சிரமதானம் மூலம் அவற்றைச் சுத்தம் செய்யலாம். நாம் எமதுஎதிர்காலச் சந்ததிக்கு சிறந்த முன் மாதிரியாக அமைய வேண்டும். அதற்கு நோயற்ற வாழ்விற்கு சூழல் சுகத்தினை மேம்படுத்த வேண்டும்.

Dr.சி.யமுனானந்தா.

சாவ.நகரசபை மாணவர்களுக்கு நடத்திய தேசிய வாசிப்பு மாதப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.31

சாவகச்சேரி நகர சபையினர் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி மாணவர்களிடையே நடத்திய விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் ஆகிய போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ள தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வில் வழங்கப்படவுள்ளன என நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் அறிவித்துள்ளார்.

போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

விஞ்ஞானம்

யோ.துஜிதா (மட்டுவில் கமலாசனி வித்தி.), கு.றஜிதா (மட்டுவில் கமலாசனி வித்தி.), யோ.சார்மிளி (மட்டுவில் சந்திர மௌலிச வித்தி.).

கணிதம்

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த 12 பாடசாலைகளில் தரம் 11 வகுப்பைச் சேர்ந்த மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் அதிகூடிய சம புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:

சு.பகீரதன் (மீசாலை வீரசிங்கம் ம.வி.), கே.சஞ்ஜீவன் (மீசாலை வீரசிங்கம் ம.வி.), யோ.துஜிதா (மட்டுவில் கமலாசனி வித்தி.).

பாடசாலை ரீதியாக முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விவரம் வருமாறு:

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி: கோ.திருமாறன், வீ.ஜனிசன், க.வேல்ராஜ்.

சாவகச்சேரி மகளிர் கல்லூரி: ச.அபிதா, தி.அஜந்தா, ஜெ.தர்சிகா.

மீசாலை வீரசிங்கம் ம.வி.: சு.பகீரதன், கே.சஞ்ஜீவன், இ.றஜீவன், பா.நிலாஜினி.

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.: வ.பாமினி, க.யசீதா, அ.சங்கீதா.

மீசாலை விக்னேஸ்வரா வித்தி: சி.நிரோஜினி, இ.எழில்பிரகாஸ், ப.நேருசி.

அல்லாரை அ.த.க. பாடசாலை: ச.யலசாரன், வே.சர்மினி, ஆ.உஷந்தினி.

மட்டுவில் கமலாசனி வித்தி: யோ.துஜிதா, கோ.சர்மிளா, மா.நதியா.

மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை: செ.தயாளன், ச.சஞ்ஜீவன், தெ.டர்சிகா.

கைதடி - நுணாவில் அ.த.க. பாடசாலை: சு.சயந்தன், சி.சிந்துஜன், இ.இந்துஜா.

மட்டுவில் சந்திரமௌலீச வித்தி.: இ.அஜிதா, ப.பிரதீபன், சோ.சுரேஜா.

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தி.: த.டெலக்ஸிகா, சி.கம்சிகா, வ.ரஜிந்தா.

சரசாலை ஸ்ரீகணேச வித்தி.: இ.மிதுனா, வீ.காந்தரூபி, இ.லாவண்யா.

ஆங்கிலம்

குழுநிலைப் போட்டி: சாவகச்சேரி இந்து ஆரம்ப பாட., நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தி., சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

படம் வரைதல்

தரம் 3: இ.சிந்துஜன் (கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தி.), இ.யதுசன் (சாவகச்சேரி இந்து ஆரம்ப பாட.), இ.சஜீதா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி).

தரம் 4: க.அச்சுதன் (கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தி.), ப.கஸ்தூரி (சாவகச்சேரி இந்து ஆரம்ப பாட.), ப.சஜீபன் (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), ம.கௌதமி (நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தி.).

தரம் 5: க.தயானுகா (கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தி.), இ.யோகினி (சாவகச்சேரி இந்து ஆரம்ப பாட.).

உறுப்பெழுத்து

தரம் 6: கு.கௌசிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), யோ.வதனா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி).

தரம் 7: ஆ.டக்ஸியானி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி).

தரம் 8: இ.தேனுஜன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), த.அருட்பிரியா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி).

தரம் 9: சி.அபிராமி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி).

தரம் 10: சி.ஹம்சவதனா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), அ.அமுதினி (மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தி.).

தரம் 12: தே.அபிகா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி).

தரம் 13: நா.லக்ஸிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

வாசிப்பு

தரம் 6: சி.கார்த்திகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), க.கஸ்மி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி).

தரம் 7: ம.தாரணி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சூ.துலக்ஸி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), த.நிசாந்தினி (நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தி.)

தரம் 8: த.தர்சிகா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), சி.கிறீடி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

(202-207)

கைதடிச் சங்கம் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.31

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கைதடி மத்திக் கிளை புனரமைக்கப்பட்டுள்ளது.

சுமார் ஆறு லட்சம் ரூபா செலவில் நவீன முறையில் புனரமைக்கப்பட்ட கிளைக் கட்டடத்தை அண்மையில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரபாகரன் திறந்துவைத்தார். சங்கத் தலைவர் சி.பூபால சிங்கம் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

(202-207)

சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ. சங்கத்தின் ஒய்வுபெற்ற பணியாளர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.31

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றி இளைப்பாறிய ஐந்து பணியாளர்களும் பணியாளர் சங்கத்தினரால் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர்.

ஒவ்வொரு பணியாளருக்கும் தலா ஒரு பவுண் தங்கச்சங்கிலி வழங்கப்பட்டது.

பணியாளர் சங்கத் தலைவர் வெ.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வில் தென்மராட்சிக் கொத்தணி பொதுமுகாமையாளர் அருள் நேசன், கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளர் சி.தர்மகுலசிங்கம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

இளைப்பாறிய சங்கக் காசாளர் வ.கிருஷ்ணசாமி, கிளைமுகாமையாளர்களான கு.சிவஞானம், ச.சந்தியாப்பிள்ளை, ச.கைலாயபிள்ளை, கிளை விற்பனையாளர் இ.சண்முகம் ஆகியோரே கௌரவிக்கப்பட்டவர்களாவர்.

(202-207)

இரண்டாயிரத்தி ஒன்பதே சென்றுவிடு

மறந்த நாள்கள் மனதில் இல்லை
அறுந்த தாலி கணக்கில் இல்லை
இரவு வந்தால் உறக்கம் இல்லை
இருந்த உறவின் தொடர்பு இல்லை
மனித உயிர்க்கோ மதிப்பு இல்லை
கதறியபோதிலும் கனிவு இல்லை
அருகிய பொழுது இரவினில் இல்லை
தீருட்டு நடப்பதைத் தடுப்பார் இல்லை
வருந்தி உழைப்பது வாழ்வுக்கு இல்லை
அருந்திய உணவில் அறுசுவை இல்லை
பருகிடும் பாலோ தாயிடம் இல்லை
உருகிட தந்தை உயிருடன் இல்லை
நெருடிய நினைவால் நிம்மதி இல்லை
வாழும் வாழ்வில் அர்த்தம் இல்லை
இங்குள கதைகள் சினிமாவில் இல்லை
வளம் கொழிக்கும் நிலத்தில் பயிரில்லை
கடலில் இறங்க தொழிலோ இல்லை
உடலில் வலுவிருக்க உழைப்பும் இல்லை
பயணம் தொடர்ந்திட பாதையும் இல்லை
சமாதான வாழ்வுக்கு சாதகம் இல்லை
அமெரிக்க அரசின் அனுபவமும் இல்லை
அழிந்த தேசங்கள் அடங்கியதில்லை
ஒழிந்த ஜப்பான் முடங்கியதில்லை
கும்பிட்ட தெய்வம் கேட்கவும் இல்லை
இல்லாமை தந்த ஆண்டே இறுதியில்
'நிஷா' வெள்ளம் போல் வழிந்தோடி
இல்லாமல் சென்றுவிடு – இன்றுடன்
புத்தாண்டு மலர வழிவிட்டு நின்றுவிடு.

ச.நடராஜா
யாழ்.இலங்கை வங்கி.

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய 3ஆம் இடத்திற்கான கலப்பு வலைப்பந்தாட்டப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உடற்கல்வி அணியும் மோதிக்கொள்வதை முதலிரு படங்களிலும் காணலாம்.
போட்டியில் மோதிக்கொண்ட இரு அணிகளின் வீர, வீராங்கனைகளை மூன்றாவது படத்தில் காணலாம்.

(படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவருடக் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.31

மக்கள் வங்கி மானிப்பாய் கிளையின் புதுவருடக் கொண்டாட்டம் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கிளை முகாமையாளர் க.சிறிதரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மானிப்பாய் [illegible],தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் க.[illegible]ற்குணலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

வாடிக்கையாளர்களுக்கு ஊக்குவிப்புப் பரிசில் வழங்கப்படவுள்ளன என முகாமையாளர் தெரிவித்தார். (202)

போரில் நாம் வெற்றிகளைக் குவித்தால் உதவிகளை வழங்க வெளிநாடுகள் தேடிவரும்

போராளிகள் கௌரவிப்பு நிகழ்வில் கேணல் பானு உரை

கிளிநொச்சி,டிசெ.31

சிங்கள அரசு வெளிநாடுகளின் உதவிகளைப் பெற்றுக்கொண்டு போரை நடத்துகின்றது. நாம் வெளிநாடுகளில் வாழும் எமது மக்களின் பலத்தில் போராடுகின்றோம். எமது பலத்தை நாம் நிரூபிக்கின்ற போது என்ன உதவி வேண்டும் என்று வெளிநாடுகள் எம்மிடம் கேட்கும் நிலை வரும் என்று தளபதி கேணல் பானு தெரிவித்துள்ளார்.

மன்னார் களமுனைகளில் மிகச் சிறப்பாகச் செயற்பட்ட போராளிகளுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் வாழ்த்தை உள்ளடக்கியதான சமர் ஆய்வுப் பிரிவின் சான்றிதழ்கள் வழங்கி மதிப்பளிக்கும் நிகழ்வில் சிறப்புரையாற்றும்போதே கேணல் பானு இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தனது சிறப்புரையில் தெரிவித்தவை வருமாறு:

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் போர் மூலோபாயங்களுக்குச் செயல் வடிவம் கொடுப்பதற்கு நாம் ஒன்று திரண்டு உழைக்க வேண்டும்.

நாம் எமது நிலங்களை எதிரியின் வல்வளைப்பு வலிந்த தாக்குதல் போரில் இழந்திருக்கின்றோம். ஆனால் நாம் எமது பலத்தை இழக்கவில்லை. நாம் போரில் வெற்றி பெறுவது உறுதி.

2009ஆம் ஆண்டை தனது ''படையினரின் ஆண்டு'' எனப் பிரகடனப்படுத்தியுள்ளார் மகிந்த ராஜபக்ஷ. அவரது படையினருக்கான ஆண்டை நாம் அவர்களது ''அழிவு ஆண்டு '' என மாற்றுவோம்.

எமது மக்கள் சிறிலங்கா படைத் தாக்குதல் மற்றும் வல்வளைப்புக்களால் இடம் பெயர்ந்து பெரும் துயரை அனுபவித்து வருகின்றனர். மிக மோசமான அவலத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அவர்கள் நம்பிக்கையுடன் இருக்கின்றனர். இறுதி வெற்றியாருக்கு என்பதை நாம் பார்க்கலாம்.

சிங்கள அரசு வெளிநாடுகளின் உதவிகளைப் பெற்றுக் கொண்டு போரை நடத்துகின்றது. நாம் எமது மக்களின் பலத்தில் நிற்கின்றோம். நாம் பலத்தை நிரூபிக்கின்ற போது வெளிநாடுகள் தாமாகவே என்ன உதவி வேண்டும் என்று கேட்கும் நிலை வரும்.

நாம் எமது மக்களுக்கு எதிரி தரும் அவலங்களைத் திருப்பிக்கொடுக்க வேண்டும். இன்று சிறிலங்கா பெரும் நெருக்கடிக்குள் இருக்கின்றது. அது பெரும் பொருண்மிய நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது. இன்னும் பெரும் பொருண்மிய உடைவு அவர்களுக்கு ஏற்படவுள்ளது. உறுதியாக நாம் வெல்லுவோம் - எனவும் கேணல் பானு தெரிவித்துள்ளார்.

சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையத்தில் அண்மையில் நடந்த இலவச மருத்துவ முகாமில் நுவரெலியா அரச வைத்தியசாலை குழந்தை வைத்திய நிபுணர் க.சிவகுமார் கலந்து கொண்டு மருத்துவ சிகிச்சை அளிப்பதையும் அதில் கலந்து கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களையும் படத்தில் காணலாம்.

வன்னியில் கடல் உணவுகளுக்கு நாளை முதல் விலை நிர்ணயம்

கிளிநொச்சி,டிசெ.31

மக்களின் பொருளாதாரச் சுமைகளைக் குறைக்கும் நோக்குடன் வன்னியில் கடலுணவுகளுக்கு விற்பனை விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. நாளை முதலாம் திகதி முதல் இது அமுலுக்கு வருகின்றது.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சமாசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே இந்த விலை நிர்ணயம் குறித்து அறிவிக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சமாச பொது முகாமையாளரால் வெளியிடப்பட்ட கடலுணவுகளின் விலை நிர்ணயத்தில் பெரிய மீன்களான பாரை, சுறா, அறக்குளா என்பனவற்றை தொழிலாளர்களிடம் இருந்து 250 ரூபாவிற்கு கொள்வனவு செய்து சமாசம் வியாபாரிகளுக்கு இவற்றை 275 ரூபாவிற்கு வழங்கும். அவற்றைக் கொள்வனவு செய்யும் வியாபாரிகள் 350 ரூபாவிற்கு மேல் விற்கமுடியாது.

சின்ன மீன்கள், றால்கள் என்பவற்றை 200 ரூபாவிற்கு மேல் சந்தைகளில் வியாபாரிகள் விற்க முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கட்டுப்பாடுகளை மீறுபவர்கள் பற்றிய தகவல்களை வழங்கினால் குறிப்பிட்ட வியாபாரிகள் தொடர்ந்து வியாபாரத்தில் ஈடுபடமுடியாதவாறு சட்ட நடவடிக்கையெடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (202)

பெற்றோருக்கு சவாலாக மாறியுள்ள தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை

வலயக் கல்விப் பணிப்பாளர் கூறுகின்றார்

சித்தங்கேணி,டிசெ.31

இன்று புலமைப்பரிசில் பரீட்சையானது பெற்றோர்களுக்கு பெரும் சவாலாக மாறியுள்ளது. பிள்ளை புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாவிட்டால் பிரபல பாடசாலையில் அனுமதி கிடைக்காது மற்றும் தாம் வெளியில் தலைகாட்ட முடியாது என்கின்ற அளவுக்குக் கௌரவப் பிரச்சினையாகவும் மாறியுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்

சங்கானை கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் தேசிய ரீதியில் தமிழ்மொழி மூலம் முதலாம் இடம்பெற்ற மாணவனையும் பாராட்டி வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தால் நடத்தப்பட்ட பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே கல்விப் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்த மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்று பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர் ஆகியோர் எவ்வளவு முயற்சி எடுத்தார்களோ அந்த முயற்சியை தொடர்ந்தும் எடுக்க வேண்டும். சோர்ந்து விடாது இன்னும் கல்வியில் முன்னேற தொடர்ந்து உந்து சக்தியாக இருக்க வேண்டும்.

மாணவர்கள் சாதனை படைக்கக் கூடிய நிபுணர்களாகுவதற்கு முயற்சிக்க வேண்டும். அதற்காக அவர்கள் பல்துறை ஆளுமை வளர்ச்சியில் இப்போதிருந்தே ஈடுபட வேண்டும். இணைபாட விதான நிகழ்ச்சிகள் தற்போது பாடசாலைகளில் நடைபெறுகின்றன. இவற்றினூடாக தமது பல்துறை ஆளு மையை வளர்க்க வேண்டும்.

விஞ்ஞானியும் முன்னாள் இந்திய ஜனாதிபதியுமான அப்துல்கலாம் கூறுவதைப் போல ''உங்கள் கையில்தான் நாளை இந்த உலகம்'' எனவே ஓர் இலக்குடன் உங்கள் கல்வியை முன்னெடுப்பீர்களானால் நிச்சயம் வெற்றி கிட்டும். அதன்மூலம் பெற்றோருக்கும் நீங்கள் சார்ந்த கிராமத்துக்கும் கற்ற பாடசாலைக்கும் மட்டுமல்லாது இந்த நாட்டிற்கும் பெருமை சேர்க்கக் கூடியவர்களாக எல்லா உயர்வும் பெறவேண்டும் - என்றார்.

இப்பரிசளிப்பு விழாவில் வலி.மேற்கு பிரதேச செயலர் திருமதி தே.பாபு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.(202)

இரணைமடுத் தாக்குதலின்போது டாங்கியைப் பயன்படுத்திய புலிகள்

கிளிநொச்சி,டிசெ.31

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இரணைமடு பகுதியில் கடந்த 20ஆம் திகதி சிறிலங்கா படையினரின் முன்னரண் பகுதிகள் மீதான தாக்குதலின்போது தமிழீழ விடுதலைப் புலிகள் டாங்கியைப் பயன்படுத்தியுள்ளனர் என கொழும்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இரணைமடுப் பகுதியில் கடந்த 20ஆம் திகதி விடுதலைப் புலிகள் நடத்திய வலிந்த தாக்குதலின்போது ரி -55 ரக டாங்கியை பயன்படுத்தியுள்ளனர்.

இரணைமடுவின் வடக்குப் பகுதியில் 57 - 4 ஆவது பிரிகேட்டின் இரு பற்றாலியன்கள் நிலைகொண்டிருந்தன. இவர்களின் பாதுகாப்பு நிலைகள் மீது விடுதலைப் புலிகளின் சிறப்பு அணிகள் வலிந்த தாக்குதலை நடத்தினர்.

இத்தாக்குதலின்போது பாதுகாப்பு அரண்களை தகர்ப்பதற்கு டாங்கியை அவர்கள் பயன்படுத்தியதுடன் சூட்டாதரவுகளை வழங்கும் பொருட்டு கடற்புலிகள் இரணைமடு நீரேரியில் தாக்குதல் விசைப்படகுகளையும் பயன்படுத்தியிருந்தனர்.

இதன்போது விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் ஏழு படகுகளை பயன்படுத்தியிருந்தனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்க சபை பாலர் பாடசாலையின் கலை விழா மற்றும் பரிசளிப்பு விழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.
சிறுவர்களின் பான்ட் வாத்திய அணிவகுப்புடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதை முதலாவது படத்தில் காணலாம்.
'அம்மனும் அடியார்களும்' என்னும் குழு [illegible] காணலாம்.
நிகழ்வின் சிறப்பு விருந்தினரான யாழ்.பல்[illegible] விரிவுரையாளர் கலாநிதி நா.சிவயோகன் மாணவர் ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதை மூன்றாவது படத்தில் காணலாம்.

(படங்கள் : சுந்தா)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்.குடாநாட்டில் 45 திட்டங்களை "நிகொட்" அடுத்தாண்டு முன்னெடுக்கும்

பிரதித்திட்டப் பணிப்பாளர் தகவல்

நல்லூர், டிசெ.31

யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்திக் கருத்திட்டங்களில் 49 திட்டங்கள் 2009 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப் படும். இத் திட்டங்களுக்கென 450.229 மில்லியன் ரூபா செலவிடப்படும் என நிக்கொட் திட்டத்தின் யாழ்.மாவட்ட பிரதித்திட்டப் பணிப்பாளர் என்.எஸ்.ஆர். சிவரூபன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு:

யாழ்.மாவட்ட அபிவிருத்திக்கான நிக்கொட் நிறுவனத்தின் 72 கருத்திட்டங் களில் 23 திட்டங்கள் ரூபா 264.971 மில்லியன் ரூபா செலவில் பூர்த்தி செய் யப்பட்டுள்ளன. நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை, சங்கானை, சண்டிலிப் பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் 10 உவர்நீர்த்தடுப்பு அணைகள் மீளமைக் கப்பட்டுள்ளன.

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஐந்து மாடி நோயாளர் விடுதிக் கட்டிடத் தின் மூன்றாவது மாடியைப் பூர்த்தியாக்க நிக்கொட் II திட்டத்தின் கீழ் 95.4 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டட வேலைகள் துரிதமாக இடம் பெற்று வருகிறன.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை யில் நிர்வாகத் தொகுதி, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் மருந்துக் களஞ்சியம், வைத்திய நிபுணருக்கான விடுதிக்கட்டடம் ஆகியவையும்

சுனாமி மற்றும் போர் காரணமாகப் பாதிப்புற்ற 424 குடும்பங்களது வீடுகள் தெரிவுசெய்யப்பட்டு அதில் 278 குடும்பங் களுக்கான வீடமைப்பு வேலை கள் பூர்த்தி செய்யப் பட்டுள்ளன.

கோண்டாவில் இந்து மகாவித்தியால யத்தில் 11.7 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இருமாடிக் கட்டடம் பூர்த்தி செய்யப்பட்டு அதிபரிடம் கையளிக் கப்பட்டுள்ளது- என்றார். (202-111)

ஜி.சீ.ஈ.சாதாரண தர, உயர்தர மாணவர்களுக்கென நூலக வசதியை நல்லூர் பிரதேச சபை ஏற்படுத்தியுள்ளது

நல்லூர், டிசெ.31

ஜி.சீ.ஈ.சாதாரண தரம், உயர்தரம் என் பவற்றில் கற்கும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான திட்டமாக நூலக வசதியை நல்லூர் பிரதேச சபை மேற்கொள்ளவுள் ளது.

நல்லூர், கொக்குவில், கோண்டாவில் ஆகிய நூலகங்களில் பாடநூல்களையும் துணை நூல்களையும் வைத்துள்ளதாக நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் எம்.சாந்தசீலன் தெரிவித்தார்.

மாணவர்கள் தமக்குத் தேவையான நூல்களை பிரதேச சபையின் பொது நூலகங்களில் படித்துத் தேவையான குறிப்புக்களை எடுத்துக் கொள்ள முடியும். தேவையான பாடநூல்களின்றி மாண வர்கள் சிரமப்பட வேண்டியதில்லை- எனவும் செயலாளர் தெரிவித்தார்.

மாணவர்களுக்குத் தேவையான பல நூல்கள் கல்வியங்காட்டில் இடம்பெற்ற நடமாடும் சேவையின் போது காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (202-111)

மரக்கறி வகைகளின் சந்தை விலைகள் (நேற்றையது)

குடாநாட்டின் பிரதான சந்தைகள்

மரக்கறி வகைகள் 1-கி.கிராம்	யாழ்ப் பாணம்	திருநெல்வேலி	நெல்லியடி	சாவகச்சேரி
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	-	600	400	600
உருளைக்கிழங்கு	480	400	600	400
ப.மிளகாய்	1400	1000	1000	1000
தக்காளி	800	350	300	250
அவரை	-	-	-	-
மரவள்ளி	80	60	70	70
கோவா	120	120	140	140
கரட்	200	180	200	200
பூசணி	80	80	90	120
புடோல்	200	120	120	-
வாழைக்காய்	120	100	100	100
பீற்றூட்	-	-	-	-
சி.வெங்காயம்	130	100	100	120
பெ. வெங்காயம்	-	-	200	-
பாகற்காய்	400	280	300	300
வெண்டிக்காய்	200	160	200	140
கருணைக்கிழங்கு	80	40	60	140
பயிற்றங்காய்	250	80	200	140
லீட்ஸ்	300	240	250	-
தேங்காய் (ஒன்று)	30-40	30	30	30

(உதவி: HNBASSURANCE)

நல்லூர்ப் பிரதேச சபை கல்வியங்காட்டில் நடத்திய நடமாடும் சேவையின்போது இலவச மருத்துவ பரிசோதனை, ஆதனவரிக்கான பதிவுகள் இடம்பெறுவதைப் படங்களில் காணலாம். (படங்கள்:லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலமர்வு

யாழ்ப்பாணம், டிசெ.31

2009 ஆம் ஆண்டில் தரம் 5இல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கல்வி மறுசீரமைப்பு தொடர்பான செய லமர்வு வடமராட்சி வலயத்தில் எதிர் வரும் வெள்ளி, சனிக்கிழமைகளில் நடைபெறவுள்ளது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத் தில் உள்ள ஆசிரியர் வள நிலையத்தில் காலை 8.30 மணிக்கு செயலமர்வு நடை பெறும் என வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தெரிவித்தார். (202-119)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் இலவச மருத்துவ முகாமில் ஆயிரம் பேருக்கு சிகிச்சை

யாழ்ப்பாணம், டிசெ.31

சர்வதேச லயன்ஸ் கழகத்தினால் பிரக டனப்படுத்தப்பட்ட நீரிழிவு நோய் தடுப்பு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் பாடசாலைகள், கிராமங்கள் ஆகியவற்றில் நடத்திய மருத்துவ பரிசோதனை முகாம் களில் ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்கு சிகிச்சையளிக்கப்பட்டது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச் சேரி டிறிபேக் கல்லூரி, நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம், அல்லாரை அ.த.க.பாடசாலை, கல்வயல் ஸ்ரீ சண் முகானந்தா வித்தியாலயம், மட்டுவில் கமலாசினி வித்தியாலயம், சங்கத்தானை சாரதா சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் நவம்பர் மாதத்தில் நடத் தப்பட்ட பரிசோதனை முகாம்களில் சிகிச் சையளிக்கப்பட்டது.

பரிசோதனையில் கலந்து கொண்டவர் களில் 50 பேருக்கு நீரிழிவு நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதி காரிப் பணிமனை உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் பரிசோதனைகள் நடத் தப்பட்டன. பரிசோதனைக்குரிய அட்டையை பிராந்திய தலைவர் லயன் வி.ஸ்ரீபிரகாஸ் கழகத்துக்கு வழங்கியதாகத் தெரிவிக்கப் பட்டது. (202-207)

நிவாரணப் பொருள்களையும் திருடும் போக்கு...!

நவாலி, டிசெ.31

குடாநாட்டில் தற்போது நிவாரணப் பொருள்களைத் திருடும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

சில தினங்களுக்கு முன்னர் நவாலியி லுள்ள ப.நோ.கூ.சங்க கிளையொன்றில் உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படும் நிவாரணப் பொருள்களை பெற்ற நவாலியைச் சேர்ந்த வயோதிப மாது ஒருவர் அப்பொருள்களை உரப்பையில் பாரிய மூட்டையாகக் கட்டித் தூக்கி செல்ல முடியாமையினால் அருகாமையிலிருந்த கடையொன்றில் வைத்து விட்டு தனது மகள் வருவார் கொடுத்து விடுமாறு கடை உரிமையாளரிடம் கூறிச் சென்றுள்ளார்.

இதனை அவதானித்த நபரொருவர் சில நிமிடங்களின் பின் வந்து அம்மா வைத்து விட்டுச் சென்ற நிவாரணப் பொருள்களை எடுக்கின்றேன் என கூறிய போது சந்தேகம் கொண்ட கடைக்காரர் அம்மாவை கூட்டி வருமாறு கூறியுள்ளார்.

உடன அந்த நபர் தப்பியோடி மாயமாக மறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின் றது.

இதேபோன்ற சம்பவம் ஆனைக்கோட்டை பகுதியிலும் அண்மையில் இடம் பெற்றுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (100)

சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், டிசெ.31

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் அலயத்தில் வருடாந்த பெருந்திரு விழா நாளை வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்தின் தேர்த்திருவிழா எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து மறுநாள் சனிக்கி ழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திரு விழா நடைபெறவுள்ளது. (201)

* * *

சுழிபுரம், டிசெ.31

பண்ணாகம் விசவத்தனை முருக மூர்த்தி ஆலயத்தில் நாளை வியாழக் கிழமை பிற்பகல் 3.30 மணிமுதல் திருவா தவூரர் புராண படனம் தினமும் நடைபெற்று விசேட பூசைகளுடன் நிறைவு பெறவுள் ளது. திருவெம்பாவை நடைபெறும் பத்துத் தினங்களும் ஒவ்வொருவர் உபய மாக நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக் கது. (201-28)

* * *

யாழ்ப்பாணம், டிசெ.31

வட்டுக்கோட்டை-தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங் கேஸ்வரர் ஆலயத்தில் திருவெம்பாவை நாளை வியாழக்கிழமை காலை 5 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது. அதனைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா வரும் நிகழ்வும் இடம் பெறும். திருவெம்பாவை பூசை நடை பெறும் நாள்களில் தினமும் திருவாதவூ ரடிகள் புராணப் படிப்பும் இடம்பெற வுள்ளது. (201)

சீருடை விநியோகம்

நவாலி, டிசெ.31

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் இன்று புதன்கிழமை இலவச சீருடை விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

அனைத்து வகுப்பாசிரியர்களையும், மாணவர்களையும் காலை 8.30 மணிக்கு சமுகமளிக்குமாறு பாடசாலை அதிபர் எஸ்.ஜெயவீரசிங்கம் கேட்டுள்ளார்.

அத்துடன் ஆரம்பப் பிரிவு மாணவர் களின் பெற்றோரும் வருகை தந்து சீரு டையை பெற்றுச் செல்லுமாறு கேட்கப் பட்டுள்ளனர். (202-100)

மாலைநேர யோகாசன வகுப்புகள்

யாழ்ப்பாணம், டிசெ.31

ஸ்ரீ சிவகுருநாத குருபீட வேதாந்த மடத்தினரின் மாலைநேர புதிய யோகா சன வகுப்புகள் எதிர்வரும் சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு மேற்படி குருபீட தியான மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்த மாலைநேர புதிய யோகாசன வகுப்புகளில் வயது வேறுபாடின்றி ஆண், பெண் அனைவரும் கலந்து கொள் ளலாம். (201)

சுன்னாகம் றோட்டரக் கழகத்தினால் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் விளையாட்டு மைதானம் சிரமதான அடிப்படையில் துப்பரவு செய்யப்பட்டுள்ளது.
சிரமதானப் பணியில் ஈடுபட்டுள்ள சுன்னாகம் றோட்டரக்கழக உறுப்பினர் களைப் படத்தில் காணலாம்.

(படம்: நேசன்)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

சொலெக்ஸ் பல் மூக்குக் கண்ணாடியகம்

விலைக் கழிவுடன் புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட
நவீன டிசைன்களில் மூக்குக் கண்ணாடி பிறேம் வகைகளும்,
பல கலர்கள் கொண்ட மூக்குக் கண்ணாடிகளும்,
கணனிப் பாவனையாளர்களுக்கு ஏற்ற
ஒளித்தெறிப்புக் கண்ணாடிகளும் (Multi Coated Lens)
நவீன Sun Glass வகைகளும்

இலவச கண்பரிசோதனை

விலைக்கழிவு 05.01.2009 வரை

கொம்பியூட்டர் முறையில் கண்பரிசோதனை செய்து உடன் கண்ணாடி வழங்கப்படும். ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சங்கும் பற்கள் கட்டவும் மிதப்பும் பற்களுக்கு கிளிப் போடவும் நாடவேண்டிய இடம்

516, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 7631

FREE EYE TESTING
(COMPUTERISED)

516, Hospital Road
Jaffna.
021 222 7631

பாராட்டி வாழ்த்துகின்றோம்

தீவகக் கல்வி வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றி இன்று (31.12.2008)இல் ஓய்வுபெறும்

திரு.முத்துத்தம்பி சிவபாதம்

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சேவை விவரம்

பனிச்சங்கேணி அ.த.க.பாடசாலை
08.02.1972 - 09.02.1972
கறுவாக்கேணி அ.த.க.பாடசாலை
10.02.1972 - 29.02.1977
பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலை
01.03.1977 - 31.12.1978
யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தி.
01.01.1979 - 30.04.1982
யா/புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விநாயகர் வித்தி.
01.05.1982 - 09.10.1984
யாழ்.வண்ணை நாவலர் ம.வி.
10.10.1984 - 31.12.1990
யாழ்.வண்ணை நாவலர் ம.வி. (பிரதி அதிபர்)
01.01.1991 - 31.12.1992
யாழ்.வலயம் ஆசிரிய ஆலோசகர் (ஆரம்பக் கல்வி)
01.01.1993 -05.06.2003
தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக் கல்வி) 06.06.2003 - 31.12.2008

இவர் தனது சேவையிலிருந்து ஓய்வுபெறும் காலத்திலும் நோய் நொடியின்றி குடும்பத்தாருடன் நீடுழி வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆரம்பக் கல்விப் பிரிவு
தீவகக் கல்வி வலயம், தீவகம்.

(81319)

அரசாங்க கேள்வி அறிவித்தல்

பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம் விடுதிகளை நிலமட்டத்துடன் உடைத்து எடுத்துச் செல்லல்

கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பிரதேச வைத்தியசாலைகளிலுள்ள விடுதிகளை முழுமையாக நிலமட்டத்துடன் உடைத்து எடுத்துச் செல்வதற்கு தேறிய பெறுமதியில் கேள்விகள் கோரப்படுகின்றன. உரிய கேள்விப் படிவங்களை ரூபா 250 கேள்விப் பத்திரப்பணமாகவும் (மீளளிக்க முடியாதது) அட்டவணையில் காட்டிய தொகையை கேள்விப் பிணையாகவும் செலுத்தி 12.01.2009 திங்கட் கிழமை பிற்பகல் 3 மணிவரை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகளை 15.01.2009 வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முன் உரிய கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விகள் உடன் திறந்து ஆராயப்படும். சித்தி பெறும் கேள்விதாரர் உடன் கேள்வித் தொகையை செலுத்துவதுடன் கேள்வி நிபந்தனையில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் கட்டடப்பொருள்களை முழுமையாக உடைத்து அகற்றி எடுத்துச் செல்லப்படுதல் வேண்டும். கேள்வி திறக்கப்படும் போது கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதி கலந்து கொள்ளமுடியும்.

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

அட்டவணை

கேள்வி விடயம்	பிணைப்பணம்
1. வைத்திய அதிகாரி விடுதி, பிரதேச வைத்தியசாலை வல்வெட்டித்துறை (விடுதியை நிலமட்டத்துடன் முழுமையாக உடைத்து எடுத்துச் செல்லல்)	50000.00
2. மருத்துவ மாது விடுதி, பிரதேச வைத்தியசாலை சங்கானை (விடுதியை நிலமட்டத்துடன் முழுமையாக உடைத்து எடுத்துச் செல்லல்)	50000.00

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,
பிராந்தியப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள்,
யாழ்ப்பாணம்.

30.12.2008

திறைசேரியிடம் இருந்த

107 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம்

கொழும்பு,டிசெ.31

திறைசேரி கட்டுப்பாட்டில் இருக்கும் 107 எரிபொருள் நிரப்பு நிலையங்களை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கீழ் கொண்டு வரவுள்ளதாகவும் அது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் விரைவில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அமைச்சர் பௌசி தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன தொழிற் சங்கப் பிரதிநிதிகளை நேற்று முன்தினம் சந்தித்த அமைச்சர் பௌசி அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை திறைசேரி வசமுள்ள சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேச் நிறுவனத்தின் மூன்றில் ஒரு பங்குகளை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உடைமையாக்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கல்வி உதவி

யாழ்ப்பாணம்,டிசெ.31

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டின்கீழ் வாழும் மாணவியின் கல்விச் செலவுக்கென மாதாந்தம் ஆயிரம் ரூபாவை வழங்கி வருகின்றனர்.

ஜி.சீ.ஈ.சாதாரணதர வகுப்பில் கற்கும் இந்த மாணவிக்கு அண்மையில் கழக அலுவலகத்தில் பிராந்தியத் தலைவர் லயன் வி. ஸ்ரீபிரகாஸ் உரிய தொகையை வழங்கினார். (202-207)

மரம் நடுகை

சுழிபுரம்,டிசெ.31

வழக்கம்பரையில் நிஷா புயலால் பல பயன்தரு மரங்கள் அழிவுற்றன. அதனை நிவர்த்தி செய்யும் நோக்கில் மரங்கள் நடப்பட்டுவருகின்றன.

(202-28)

பணிப்பாளர் சபை தெரிவு

பண்டத்தரிப்பு,டிசெ.31

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கென புதிய பணிப்பாளர் சபை தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையில் க.சிவகுமார், வே.காங்கேசன், ச.இராமலிங்கம், த.சிங்கி அரியரட்ணம், ம.சிவசுப்பிரமணியம், க.நடராசா, நா.இராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(202-130)

மரண அறிவித்தல்கள்

திருமதி கமலாவதி காசிப்பிள்ளை (இராசையா)

(New Barnet - U.K)

அரியாலை, வில்வந்தெரு ஒழுங்கையைச் சேர்ந்த கமலாவதி (29.12.2008) திங்கட்கிழமை லண்டனில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் புஸ்பலதா (லண்டன்), தேவலதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற யோகீஸ்வரன் சிற்றம்பலம் அவர்களின் அன்பு மாமியும் பரஞ்சோதி (கனடா), சதானந்தன் (இளைப்பாறிய தபாலதிபர்) ஆகியோரின் சகோதரியும் வாணி, கோபி, லஷ்மி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2008) புதன்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

73, சந்தனமாதா கோயில் ஒழுங்கை,
அரியாலை, பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
த.சதானந்தன் (சகோதரன்).

முருகேசு கந்தையா

மாகியம்பதி, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கந்தையா கடந்த (26.12.2008) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திரு.திருமதி முருகேசு தம்பதியரின் அன்பு மகனும் சோதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் நாகதேவா, மகாதேவா (அமெரிக்கா), நாகதேவி, இந்திராதேவி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (31.12.2008) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொட்டுப்பனை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

(81318)

தகவல்:
குடும்பத்தினர்.

கார்த்திகேசு மகாலிங்கம்

(இளைப்பாறிய பொறியியலாளர்)

சங்கரத்தை, வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவரும் பேர்த் அவுஸ்திரேலியாவில் வசித்தவருமாகிய கார்த்திகேசு மகாலிங்கம் 29.12.2008 திங்கட்கிழமை அவுஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கார்த்திகேசு தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு.திருமதி சிவசுப்பிரமணியம் தம்பதியரின் அன்பு மருமகனும் இந்திராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், சண்முகநாதன், அருமைநாதன் மற்றும் திருமதி சேனாதிராசா பாக்கியம், பரமநாதன், பஞ்சலிங்கம், நாகலிங்கம், நவரத்தினம், திருமதி ஜெயரஞ்சிதன் செல்வலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

(81320)

குடும்பத்தினர்.
060 2213491

சேனாதிராஜா தயாளன்

(இலங்கை மின்சாரசபை ஊழியர் சுன்னாகம்)

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, ஆட்டுப்பட்டித் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட சேனாதிராஜா தயாளன் 28.12.2008 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சேனாதிராஜா - கனகலட் சுமி தம்பதியரின் அன்பு மகனும் காசிநாதன் - சகுந்தலாதேவி தம்பதியரின் மருமகனும் சுகந்தியின் அன்புக் கணவரும் தயாசுகாளன், மிதிலா; சுஜீலா ஆகியோரின் பாசமிகு தந்தையும் தயசீலன், தயாளினி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (31.12.2008) புதன்கிழமை பி.ப. 3 மணியளவில் பொரளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை சகலரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
(0773618122,0602070572)

(சி/556402)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இந்தியா தனது நிலைப்பாட்டைக் கூறி ஒதுங்கிநின்றால் நாம் அழிவதற்கும் தயார்

கோவையில் சிவாஜிலிங்கம் எம்.பி. ஆவேசம்

இலங்கையில் போரை நிறுத்த வேண்டுமென நினைத்தால், வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, கொழும்பு செல்ல வேண்டும் என்ற அவசியமில்லை. மாறாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இந்தியாவுக்கு அழைத்து நிர்ப்பந்தித்தாலே போதும் - என்று தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஒருவேளை, இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி ஒதுங்கிநின்றால் நாங்கள் அழிவதற்கும் தயாராகவுள்ளோம் - என்றும் அவர் உணர்வு பொங்கக் குமுறினார்.

இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல் என்ற தலைப்பில் தூத்துக்குடியில் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் மாநகராட்சி திருமண மண்டபத்தில் கருத்தரங்கம் ஒன்று நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு ஈழ நிலைவரங்கள் பற்றியும் இந்தியாவின் அணுகுமுறை பற்றியும் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் பேசியவை வருமாறு-

போரை நிறுத்த மத்திய அரசு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இந்தியாவுக்கு அழைத்து நிர்ப்பந்திக்க வேண்டும். இந்தியா நினைத்தால் இலங்கைப் பிரச்சினையை ஐ.நாவுக்குக் கொண்டுசென்று தீர்வு காண முடியும்.

ஒருவேளை, இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த ஒதுங்கிநின்றால் நாங்கள் அழிவதற்கும் தயாராகவுள்ளோம் - என்றார்.

மக்கள் உரிமைக்குழுவின் அமைப்பாளர் சட்டத்தரணி இ.அதிசயக்குமார் இக்கருத்தரங்குக்குத் தலைமையேற்றார்.

பெரியார் திராவிடர்கழகத் தலைமைக்கழக உறுப்பினர் பால்.பிரபாகரன் , ஆதித்தமிழர் பேரவை இரா.வே.மனோகர், மீனவர் கூட்டமைப்பின் தமிழ்மாந்தன் , தமிழர் தேசிய இயக்க உறுப்பினர் சு.க.மகாதேவன் , ம.தி.மு.க சட்டத்தரணி நக்கீரன் ஆகியோர் கலந்துகொண்டு ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக உரையாற்றினர்.

பல்வேறு அமைப்புக்களும், தமிழுணர் வாளர்களும், பெண்களும் திரளாக கலந்து கொண்டனர்.

இந்திய செய்திகள்

கருத்தரங்கில் கலந்து கொண்ட பெண்கள்...

ஈழத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்குமாம்

இப்போதும் நம்புகிறார் இளங்கோவன்

கோவை, டிச. 31

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு உரிய நேரத்தில்நடவடிக்கை எடுக்கும். அவர்களின் நலனைப் பாதுகாப்பதில் மத்திய அரசு காத்திரமாகவுள்ளது - என்று மத்திய இணையமைச்சர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவனின் பேச்சில் சுருதி குறைந்து வருகிறது என்றும் அவரைக் கையாள்வது பற்றி தமிழக அரசுதான் முடிவு செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

கோவையில் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் பேட்டியளித்தபோதே அவர் இவற்றைக் கூறினார்.

அங்கு மேலும் அவர் கூறியவை வருமாறு-

இலங்கைத் தமிழர் நலனைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியாக உள்ளது. இப் பிரச்சினையில் உரிய நேரத்தில் மத்திய அரசு தேவையானநடவடிக்கையைஎடுக்கும்.

தீவிரவாதிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தமிழக முதல்வர் எச்சரித்துள்ளமை வரவேற்புக்குரியது. அத்தோடு, ஆதரித்துப் பேசியவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சத்தியமூர்த்தி பவன் தாக்கப்பட்ட சம்பவம் சி.பி.சி.ஐ.டி. பொலிஸுக்கு மாற்றப்பட்டு விசாரணை தொடங்கியுள்ளது. விசாரணை அறிக்கை வந்த பிறகுதான் யார் குற்றவாளி என்பது தெரியும். இச் சம்பவத்தில் தனக்குத் தொடர்பில்லை என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் கூறியுள்ளார். அவரது பேச்சில் சுருதி குறைந்து வருகிறது. அவரைக் கையாள்வது பற்றி தமிழக அரசுதான் முடிவு செய்ய வேண்டும்.

விடுதலைப் புலிகளை ஆதரிப்பவர்களோடு காங்கிரஸ் கூட்டணி அமைக்காது. புலிகளை ஆதரிக்கும் போக்கை திருமாவளவன் தொடர்ந்தால், அவரைப் புறக்கணிப்போம் - என்றார்.

இந்தியா புலிகள் மீதான தடையை நீக்கி தனித் தமிழீழத்தை அங்கீகரிக்க வேண்டும்

மீனவர் விடுதலை வேங்கைகள் தீர்மானம்

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்திய அரசு உடனடியாக நீக்க வேண்டும். தமிழக மீனவர் மீதான இலங்கைச் சிங்களக் கடற்படையின் தாக்குதல்கள் நிரந்தரமாக நிறுத்தப்படுவதற்கு தனித்தமிழீழம்தான் தீர்வு போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி கடலூரில் கடந்த 28ஆம் திகதி நடந்த மீனவர் விடுதலை வேங்கைகள் அமைப்பின் மீனவர் எழுச்சி நாள் விழாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அமைப்பின் தலைவர் இரா.மங்கையர் செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் மீனவர் சங்கப் பொறுப்பாளர்கள் உட்பட பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் திரண்டிருந்தனர்.

"இந்தியத் துணைக்கண்டத்தின் முதல் கம்யூனிஸ்ட் சிங்காரவேலரின் பிறந்தநாளன்று தமிழீழ ஆதரவு மாநாடு நடத்தவிருப்பதை, இரா. மங்கையர் செல்வன் தெரிவித்தபோது, திரண்டிருந்த மக்கள் கரவொலி எழுப்பி ஆதரவு தெரிவித்தனர்.

இந்தக் கூட்டத்தில் -

இலங்கைச் சிங்களக் கடற்படை இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து தமிழக மீனவர்கள் மீது தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகிறது. நமது தொப்புள்கொடி உறவான ஈழத் தமிழர்கள் மீது சிங்கள அரசு ஈவிரக்கமின்றி குண்டு வீசிப் படுகொலை செய்து வருகிறது. தமிழக மீனவர்களையும், ஈழத் தமிழர்களையும் ஈவிரக்கமின்றி அத்துமீறிப் படுகொலை செய்யும் சிங்கள அரசுக்கு ஆயுத உதவி, நிதியுதவி, போர்ப்பயிற்சி அளிப்பதை உடனே நிறுத்த வேண்டும் என்று இந்தியப் பேரரசை இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

தமிழின தேசிய மக்களின் விருப்பத்தை மதித்து, தமிழீழத்திற்கு ஏற்பிசைவு அளிக்க வேண்டும் என்றும், தமிழக மீனவர் மீதான சிங்களக் கடற்படைத் தாக்குதல் நிரந்தரமாக நிறுத்தப்படுவதற்கு தனித்தமிழீழம்தான் தீர்வு என்பதையும் இந்தியப் பேரரசுக்கு இக்கூட்டம் சுட்டிக் காட்டுகிறது.

தமிழீழ மக்களின் ஒருமித்த ஆதரவைப் பெற்றுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை உடனே நீக்கவேண்டும் என்று இந்தியப் பேரரசை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது போன்ற பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

போரை நிறுத்த முயற்சி எடுக்காது தமிழகம் வரும் மன்மோகனுக்கு எதிராகக் கறுப்புக்கொடிப் போர்!

பெரியார் திராவிடர் கழகம் அறிவிப்பு

சென்னை, டிச. 31

இலங்கையில் பற்றி எரியும் போரைத் தடுத்துநிறுத்த எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் ஜனவரி 8 ஆம் திகதி தமிழகம் வரும் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு எதிர்ப்புத் தெரிவித்து பெரியார் திராவிடர் கழகம் கறுப்புக் கொடிப் போராட்டத்தை நடத்தவுள்ளது.

இதுகுறித்து இக்கட்சியின் பொதுச் செயலர் ஊடகங்களுக்கு அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

சிங்கள இராணுவம் ஈழத் தமிழர்கள் மீது நடத்தும் இனப் படுகொலைக்கு எதிராகவும், தமிழக மீனவர்களை கண்மூடித்தனமாக சுட்டுக் கொல்வதைக் கண்டித்தும் தமிழகம் கட்சிகளைக் கடந்து ஒருமித்த கண்டனக் குரலைத் தெரிவித்து வருகின்றது.

தமிழக முதல்வர் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்திலும் மத்திய அரசு உடனே போரை நிறுத்த இலங்கை அரசை வலியுறுத்த வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியது.

சென்னையில் கொட்டும் மழையில் இலட்சக்கணக்கான தமிழர்கள் மனிதச் சங்கிலியாக அணிவகுத்து சிங்கள இராணுவத்தின் இனப் படுகொலைக்கு எதிரான தங்கள் எதிர்ப்பை வலிமையாக வெளிப்படுத்தினர்.

இறுதியாக தமிழக முதல்வர் தலைமையில் அனைத்துக் கட்சிக் குழு டில்லியில் பிரதமரை நேரில் சந்தித்து வலியுறுத்திய பின்னரும், இலங்கையில் நடைபெறும் போரை நிறுத்தவும், தமிழக மீனவர்கள் சிங்கள கடற்படையால் சுட்டுக் கொல்லப்படுவதைத் தடுக்கவும் மன்மோகன் சிங் எந்த இணக்கமான முடிவும் எடுக்கவில்லை.

இந்த நிலையில், ஒட்டுமொத்த தமிழக மக்களின் உணர்வுகளை மதிக்காமல் பிரதமர் மன்மோகன் சிங், தமிழகம் வருவது தமிழக மக்களை அவமதிக்கும் செயலாகும்.

ஆகவே, வருகின்ற 8.1.2009 அன்று சென்னைக்கு வரவிருக்கும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தமிழக மக்களின் எதிர்ப்பைக் காட்ட கறுப்புக் கொடி காட்டும் போராட்டத்தைப் பெரியார் திராவிடர் கழகம் நடத்துகிறது - என்றுள்ளது.

நீச்சல் உடையில் அசத்தினார் நமீதா கண்களை மூடினர் படக் குழுவினர்!!

தெலுங்கில் தயாரிக்கப்படும் 'பில்லா' படத்தின் படப்பிடிப்புக்காக கவர்ச்சிக்கன்னி நமீதா நீச்சல் உடை அணிந்து வந்த போது படப்பிடிப்புக்குழுவினர்தமது கண்களை மூடிக் கொண்டனர்.

அஜீத்குமார், நயன்தாரா, நமீதா நடித்து, விஷ்ணுவர்தன் இயக்கத்தில் வெளிவந்த 'பில்லா' படம், இப்போது தெலுங்கில் அதே பெயரில் தயாராகி வருகிறது. இந்தப் படத்தை குணசேகர் இயக்குகிறார்.

அஜீத்குமார் நடித்த வேடத்தில் பிரபாஸும், நயன்தாரா நடித்த வேடத்தில் அனுஷ்காவும் நடிக்கின்றனர். நமீதா நடித்த வேடத்தில் அவரே நடிக்கிறார்.

இந்தப் படத்தின் படப்பிடிப்பு மலேசியாவில் நடந்தது. அதையடுத்து விசாகப்பட்டினத்தில் இப்போது படப்பிடிப்பு நடைபெறுகிறது.

நமீதா நீச்சல் உடையில் தோன்றும் காட்சிகள் அங்கு படமாகி வருகின்றன. அவர் நீச்சல் உடையில் வரும் காட்சிகள் மட்டும் தொடர்ந்து 5 நாள்கள் படமாக்கப்பட்டன.

நீச்சல் உடையில் நமீதா வருவதை படப்பிடிப்புக் குழுவினரே பார்த்து ரசிக்க ஆரம்பித்தார்கள். நீச்சல் உடையில் அவர் கவர்ச்சியாக நடந்து வருவதையும், நாற்காலியில் கால் மீது கால் போட்டபடி உட்கார்ந்திருப்பதையும், கண் கொட்டாமல் பார்த்தார்கள்.

இதை கவனித்த நமீதா, படப்பிடிப்பு குழுவினர் வேடிக்கை பார்ப்பதைத் தவிர்ப்பதற்காக, நீச்சல் உடை அணிந்து கொண்டு கமராவை நோக்கி வரும்போதெல்லாம், "அண்ணா, எல்லோரும் கண்ணை மூடிக்கொள்ளுங்கள்" என்று தெலுங்கில் தமாசாக சொன்னார். உடனே படப்பிடிப்புக் குழுவினர் அனைவரும் ஒரு நிமிடம் கண்களை மூடிக்கொண்டார்கள். நமீதாவின் சங்கோஜத்தை புரிந்து கொண்டு அவரை வேடிக்கை பார்ப்பதைத் தவிர்த்தார்கள்.

நமீதாசம்பந்தப்பட்ட நீச்சல் உடை காட்சிகளை படமாக்கி முடித்தபிறகு [illegible] யில் தோன்றும் காட்சிகளை படமாக்கினர்.

எல்லையில் எதையும் சமாளிக்க இந்திய விமானப் படை தயார்!

தாம்பரம் கொமாண்டர் அசோக் லால் உறுதி

சென்னை, டிச. 31

எல்லையில் எதையும் சமாளிக்க இந்திய விமானப் படை தயாராக உள்ளது - தாம்பரம் விமானப்படை கொமாண்டர் அசோக் லால் இவ்வாறு கூறியுள்ளார்.

தாம்பரம் விமானப்படை பயிற்சி மையத்தில் கொமாண்டராக இருந்த தருண் குமார் வர்மா, பதவிக் காலம் முடிந்து, டில்லிக்கு மாற்றப்பட்டுள்ளார். புதிய கொமாண்டராக வாயு சேனா விருது பெற்ற அசோக் லால் நேற்றுமுன்தினம் பொறுப்பேற்றார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு -

தாம்பரம் விமானப்படைப் பயிற்சி மையம் [illegible] பாடுபடுவேன். வரும் காலத்தில் [illegible] கொண்டு பயிற்சி அளிக்கப்படும். சிறந்த விமானிகளை உருவாக்க கல்லூரிகளுக்கே சென்று மாணவர்களை தேர்வு செய்கிறோம். சென்னை 30 பொறியாளர்களைத் தேர்வு செய்து, அடுத்தகட்டப் பயிற்சிக்கு பெங்களூர் அனுப்பியுள்ளோம் - என்றார்.

எல்லையில் பதற்றம் நிலவுகிறதே என்று கேட்டதற்கு, அங்கு நிலைமை கட்டுக்குள் இருக்கிறது. எதையும் சமாளிக்க விமானப்படை தயாராக உள்ளது என்று பதில் அளித்தார்.

முன்னதாக தருண் குமார் வர்மா பேசுகையில் -

தாம்பரம் விமானப்படை பயிற்சி மையம் நவீனமயமாக்கப்பட்டுள்ளது. பயிற்சி கட்டுமானப் பணி சிறப்பாக உள்ளது. கடந்த ஆண்டு விபத்து இல்லா பயிற்சி அளித்ததற்கும், சிறந்த மருத்துவ சேவைக்கும் தாம்பரம் மையம் விருது பெற்றுள்ளது - என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ். அத்தியடி பிள்ளையார் கோயில் கஜமுகாசுரன் போர்த்திருவிழா

01.01.2009 (வியாழன்) மாலை 4.30 மணிக்கு நடைபெறும்.

விநாயகர் சஷ்டி திருவிழா

02.01.2009 (வெள்ளி) மாலை 4.30க்கும் பஞ்சமுக அர்ச்சனையும் தொடர்ந்து பஞ்சமுக விநாயகப் பெருமான் வெளி வீதி உலாவும் இடம்பெறும்.

-கோயில் நிர்வாகசபை-

நடந்து முடிந்த O/L - 2008 ஆங்கிலம்

புதிய பாடத்திட்டம்

வினாக்கள் விடைகளுடன் கிடைக்கும் இடங்கள்

பூபாலசிங்கம் - யாழ்.நகர்

ஆர்கா - கன்னாகம்.	பாக்கியா - கொக்குவில்.	நாயகபாலன் - மானிப்பாய்.
மொடேன் - நெல்லியடி.	செல்லாச்சி - பருத்தித்துறை.	பொதிகை கிராபிக்ஸ் - சாவகச்சேரி.
		கற்சுமி கல்வி நிறுவனம் - நாவலர் வீதி.

புதிய வகுப்பிற்கான புதிய அனுமதிகள்

இவ் ஆண்டில் அனுமதி பெறும் இறுதிச் சந்தர்ப்பம்

English Medium Grade 10 Class Commences January 05th

இன்றுமுதல் ஜனவரி 10 வரை

The Express Institute Irupalai, Kopay. -அதிபர்

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி சுபிதா ஹரிஹரசக்தி அவர்களின் அன்பு மாமியார்

அமரர் க.திலகவதி

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

மா/ கழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை. ஆசிரியர் கழகம்.

மரண அறிவித்தல்

சபாபதிப்பிள்ளை இராஜரட்ணம்

கொக்குவில் மேற்கைப்பிறப்பிடமாகவும் அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை இராஜரட்ணம் 29.12.2008 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - சௌந்தரம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகமணி - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி, செவ்வரட்ணம் மற்றும் விஜயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நாகேஸ்வரி, விஜயரட்ணம், சரஸ்வதி, மகேஸ்வரி, செல்வரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், அனித்தா(லண்டன்), அனுராஜ் (லண்டன்), சரண்யா (மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் லக்சுமி காந்தனின் அன்பு மாமனும் கிருஷாந்தின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(31.12.2008) புதன்கிழமை மாலை 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, [illegible]வுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் இந்து மயானத்துக்கு [illegible]த்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

42/1, அத்தியடி புது வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
இ.இராஜேஸ்வரி (மனைவி).

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான...

DMI வழங்கும் அங்கீகரிக்கப்பட்ட கணினி டிப்ளோமா சான்றிதழ்கான கற்கைநெறிகள்.

- Diploma in Microsoft Office
- Diploma in PC Application
- Adv. Dip. in Hardware & Networking
- Dip. in Pre-Press Desktop Publishing
- Dip.in Web Designing & Development
- Dip. in Video Production & Multimedia
- Dip. in Computerized Accounting #Quick Books # Accpack # MYOB JOIN WITH LEADERS IN ACCOUNTS

Tally Accounting Training

புதிய பிரிவுகள் ஆரம்பம் 1/1/2009, 2/1/2009, 5/1/2009 @ 10.00 a.m. 03.00 p.m.

100%

இலவச பாடநூல் மற்றும் இலகு தவணைக் கட்டணவசதி.

முழுமையானதும் தரமானதுமான கணினிக் கல்வி.

DMI COMPUTER EDUCATION

NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (Near The Science Hall)

போதைப்பொருளுடன் இலங்கைப் பெண் குவைத்தில் கைது

கொழும்பு, டிசெ.31

குவைத் நாட்டில் சட்ட விரோதப் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டார் எனக் கூறப்படும் இலங்கையைச் சேர்ந்த வீட்டுப் பணிப்பெண் உள்ளிட்ட இருவர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பங்களாதேஷைச் சேர்ந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரும், இலங்கையைச் சேர்ந்த வீட்டுப் பணிப் பெண் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் என்று குவைத் நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருவேறு இடங்களில் சட்ட விரோதமான முறையில் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட குறித்த நபர் களைக் கைது செய்ததாக அந்நாட்டுப் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட இலங்கை வீட்டுப் பணிப்பெண் 100 போதைப்பொருள் வில்லைகளை வைத்திருந்தார் என்றும், விசாரணைகளைத் தொடர்ந்து மேலும் 900 வில்லைகள் கண்டுபிடிக்கப்பட்டன எனவும் அந்நாட்டுப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

(அ-சி)

தவறிவிட்டது

கே.கே.எஸ் றோட், கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலைச் சேர்ந்த வரதராசன் நவநீதம் ஆகிய எனது அ.அட்டை இல: 920290540V 29.12.2008 யாழ்ப்பாணத்தில் தொலைந்துவிட்டது.

கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய விலாசத்தில் ஒப்படைக்கவும்.

தவறி விட்டது

சுதாபவனம், தாவடி தெற்கு என்னும் முகவரியுடைய நாகராசா அம்பிகைபாகன் என்பவரது வாகன அனுமதிப்பத்திரங்கள் அடங்கிய கைப்பை 20.12.2008 அன்று யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 021 222 7612 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தவறிவிட்டது

ஏழாலை மேற்கு, ஏழாலை என்னும் முகவரியுடைய சிவப்பிரகாசம் பிரேமகாந்தன் என்பவரது தே.அ. அட்டை (701450760V), விசேட அ.அட்டை, சாரதி அனுமதி அட்டை என்பன அடங்கிய பேர்ஸ் (பணம் ஏதும் இல்லை) 27.12.2008 கடந்த சனிக்கிழமை யாழ். நகரை அண்டிய பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'பிருந்தா மில்ஸ்' இல.18, றக்கா வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (தொ.பே. 021 222 9201, 0779912304)

தவறிவிட்டது

பாவற்குளம், வவுனியா என்னும் முகவரியுடைய சந்திரபாலா விஜயலக்ஷ்மி என்பவருடைய தே.அ.அ(605841740V) கடந்த 27.12.2008 அன்று யாழ் நகருக்கும் நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து லக்ஸ்மி காகி தாதிகள் இல. 2, நவீனசந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தவறிவிட்டது

முருங்கையப்புலம், அளவெட்டி மேற்கு, அளவெட்டி எனும் முகவரியுடைய கணேசு தயாபரன் என்பவரது தே.அ. அட்டை (683514470V), விசேட அடையாள அட்டை (0907011179) என்பன 16.12.2008 அன்று கும்பழாவளைப் பிள்ளையார் கோயிலுக்கும் டச் றோட்டுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அளவெட்டி தபாலகத்தில் ஒப்படைத்துதவவும்.

வளர்ப்பு நாய்களுக்கு இலக்கத் தகடுகள்

யாழ்ப்பாணம், டிசெ.31

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கான 2009 ஆம் ஆண்டுக்கான இலக்கத் தகடுகள் நகரசபை அலுவலகத்தில் விநியோகிக்கப்பட்டு வருவதாக நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் அறிவித்துள்ளார்.

(அ-207)

மரண அறிவித்தல்கள்

திருமதி மீனாம்பிகை நவரட்ணம்

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் விதானையார் வீதி, சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்த வருமாகிய திருமதி மீனாம்பிகை நவரட்ணம் (29.12.2008) திங்கட்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் நவரட்ணம் (ஓய்வுபெற்ற நில அளவையாளர், லண்டன்) அவர்களின் அன்பு மனைவியும் மாலினி (கனடா), Dr.லக்ஸ்மன் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற பத்மினி (பொறியியலாளர்) மற்றும் Dr.நளினி (லண்டன்), ரஜினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் அரவிந்தன் (கனடா), Dr.உமையாள் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற பகீரதன் மற்றும் மணிவண்ணன் (லண்டன்), மகேஸ்வரா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.01.2009 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.சண்முகசுந்தரம் - மைத்துனர்
(செயலாளர், யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபை)
இல.5, சீனியர் வீதி, யாழ்ப்பாணம்.

லண்டன் தொலைபேசி இல.
00442084299497

திருமதி சாமிநாதர் றோசம்மா

குளமங்கால், மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சாமிநாதர் றோசம்மா 29.12.2008 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செகதோர் அன்னேஸ் அம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சாமிநாதரின் அன்பு மனைவியும், வெஸ்லிகியூமர், விக்டர் டிமெல், ஆகியோரின் பாசமிகு தாயாரும், டொறின் அஞ்சலா, ஆன்மேரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற பாக்கியம், அற்புதமேரி மற்றும் ஞானம்மா(கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், றொசான், சாம்டிலான், ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (31.12.2008) புதன்கிழமை காலை 10மணிக்கு குளமங்கால் புனித பிரான்ஸிஸ் சவேரியர் ஆலயத்தில் இடம்பெற்று பின்னர் பூதவுடல் குளமங்கால் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குளமங்கால், மல்லாகம்.

தகவல்
குடும்பத்தினர்.

கந்தையா சுப்பிரமணியம்

(முன்னாள் கணக்குப்பிள்ளை)

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், 81, கலாசாலை வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட V.K.சுப்பிரமணியம் நேற்று (30.12.2008) செவ்வாய்க்கிழமை காலை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - ஆச்சிப்பிளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பொன்னம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற பூரணாம்பிகையின் அன்புக் கணவரும், செல்வமலர், உதயராணி (பிரான்ஸ்), பிரேமராணி, இன்பராஜன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகரத்தினம், ரகுபதி இந்திரன்(பிரான்ஸ்), ஞானரெத்தினம், சுமதி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜரூபன், அஜந்தா, தனுஷன், ரசிந்தன், விசிந்தன், உதயபாலன், சயந்தன், சாரூகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.81, பால்பண்ணை வீதி, திருநெல்வேலி.

தகவல்
குடும்பத்தினர்.

வல்லிபுரம் காசிப்பிள்ளை

(சின்னத்தம்பி ஆசாரியார்)

இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் காசிப்பிள்ளை (சின்னன்னை) நேற்று (30.12.2008) செவ்வாய்க்கிழமை காலை காலமாகி விட்டார்.

அன்னார் சோதியம்மாவின் அன்புக் கணவரும் பத்மநாதன், சத்திபதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் அற்புதராசா (ராசா), நற்குணதேவி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12. 2008) புதன்கிழமை காலை 10 மணியளவில் வெள்ளை றோட்டில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் வல்லை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.அற்புதராசா
(ராசா பட்டடை).

இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களாதேஷ் ஆட்டத்தில் முரளி அபாரம்; வெற்றி இலக்கை நோக்கி இலங்கை அணி

இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கிடை மில் நடைபெற்றுவரும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இரண்டாவது இன்னிங்ஸில் இலங்கை அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்த னவின் அபாரமான அதிரடிச் சதத்துடன் அந்த அணி வலு வான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றி ருக்கிறது.

பங்களாதேஷின் முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களை வீழ்த்திய இலங்கையின் சுழல் நட்சத்திரம் முத்தையா முரளிதரன் இரண் டாவது இன்னிங்ஸ்ஸிலும் தமது விக்கெட் வேட்டையைத் தொடங்கியிருக்கிறார். நேற்றைய நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில் பங்களா தேஷ் 5 விக் கெட்டுக்களை இழந்து 254 ஓட்டங் களைப் பெற்றிருந்தது. இதில் 3 விக்கெட்டுக் களை முரளிதரன் வீழ்த்தினார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 293 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பதிலளித்து ஆடிய பங்களாதேஷ் அணி 178 ஓட்டங்களுக்குள் சுருண்டது. எனவே 115 ஓட்டங்கள் முன்னிலை வகித்த இலங்கை அணி மீண்டும் களமிறங்கி இரண்டாவது இன்னிங் ஸில் 6 விக்கெட்டுக்களை இழந்து 405 ஓட்டங் களை எடுத்ததோடு ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது. வன்டோர்(6), வர்ணபுர(8) ஆகி யோர் வந்த வேகத்திலேயே ஆட்ட மிழக்க சங்கக்கார (67), மஹேல ஜெயவர்த்தன (166), சமரவீர(62), டில்ஷான் (47) ஆகியோர் சிறப்பாகத் துடுப் பெடுத்தாடி அணியை வலுப்படுத்தினர்.

வெற்றி பெறுவதற்கு இன்னும் 520 ஓட்டங் கள் தேவை என்ற கடின இலக்குடன் களமிறங் கிய பங்களாதேஷ் அணி நேற்றைய ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 254 ஓட் டங்களைப் பெற்றது.

ஆட்டத்தின் ஐந்தாம் நாளான இன்று இன் னும் 266 ஓட்டங்களை எடுத்தால் பங்களாதேஷ் அணி வெற்றிபெறலாம். அதற்குள் அந்த அணி ஆட்டமிழந்தால் வெற்றி இலங்கை அணியின் கையில் கிட்டும்.

அதிகமாகப் பேசுவதிலேயே ஆஸி. வீரர்கள் தீவிர கவனம்

கிண்டலடிக்கிறார் ஹர்பஜன்

புதுடெல்லி, டிச.31

அவுஸ்திரேலிய அணி வீரர்கள் போட்டியை விட பேசுவதிலேயே அதிக கவனம் செலுத்துகின்றனர் என இந்திய வீரர் ஹர் பஜன்சிங் கூறியிருக்கி றார்.

உலக சம்பியன் அவுஸ் திரேலிய கிரிக்கெட் அணி சமீப காலமாக பின்ன டைவை சந்தித்து வருகி றது. இந்தியாவுடன்டெஸ்ட் தொடரை இழந்த அவுஸ் திரேலியா, அடுத்ததாக சொந்த மண்ணில் தென் னாபிரிக்காவுடன் தொடரை இழக்கும் சூழலில் இருக் கிறது. இதனால் அந்த அணி யின் முதல் இடத்திற்கும் ஆபத்து உருவாகியுள்ளது. இந்த நிலையில் பேச்சை குறைத்தால், நன்றாக விளையாடலாம் என்று அவுஸ்திரேலியாவுக்கு இந்திய சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் அறிவுரை கூறியிருக்கிறார். இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

'தற்போது எந்த அணியாலும் அவுஸ்திரே லியாவை வீழ்த்த முடியும். அவர்கள் எந்த அணி யையும் விட பலமானவர்களோ அல்லது உல கமகா சக்திகளோ கிடையாது. உலகில் உள்ள எல்லா அணிகளும் தற்போது சிறப்பாக விளையாடி வருவதும், அவுஸ்திரேலியாவுக்கு நெருக்கடி கொடுத்து வருவதையும் பார்ப்பதற்கு நன்றாக உள்ளது. இப்போது உள்ள மற்ற அணிகள் எல்லாம் ஆட்டத்தில் முழுக் கவனத்தையும் செலுத்தி வரும் வேளையில், அவுஸ்திரேலிய வீரர்கள் நிறையப் பேசுவதிலேயே கவனம் செலுத்துகிறார்கள்' என்றார்.

கிரிக்கெட் பின்னணியைக் கொண்ட படமான 'விக்டரி' படத்தின் பாடல் வெளியீட்டு விழா மும்பையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நடந்தது. இதில் கலந்துகொண்ட ஹர்பஜன்சிங் பேசுகையில், 'நான் மிகச்சிறந்த நடிகர். நான் கொலி வூட்டில் இறங்கி நடிக்க ஆரம்பித்தால், எனது நடிப்பானது கஜினி மற்றும் ரஜினி போன்ற எல்லாலோரையும் உங்களை மறக்க வைத்து விடும். அஜீத் பால் சிங் விரும்பினால், இந்த படத் தின் 2ஆவது பாகத்தில் ஹீரோவாக நடிக்க விரும்புகிறேன்' என்றார்.

பிரட்லிக்கு சிறிது ஓய்வு தேவை

முன்னாள் ஆஸி. வீரர் ஆலோசனை

அவுஸ்திரேலிய அணியின் முன்னணி வேகப் பந்து வீச்சாளரான பிரட்லீ தனது கிரிக்கெட் வாழ்க் கையைத் தக்க வைக்க வேண்டுமானால் அவர் சிறிது காலம் ஓய்வு எடுப்பது நல்லது என்று முன் னாள் அணித்தலைவர் பில் லாரி ஆலோசனை தெரிவித்து இருக்கிறார்.

மேலும், பிரட்லீ சமீபகாலத்தில் விக்கெட் எடுக்கத் தினறி வருகிறார் என்றும், அபாயகர மான பந்து வீச்சாளரான அவரது எடை அதிகமாக குறைந்ததும் அவரது பந்து வீச்சின் வேகம் குறைந்தது என்றும் பில் குறிப்பிட்டு இருக்கிறார்.

"பிரட்லீ தற்போது மிகவும் மெலிந்து காணப் படுகிறார். அவரது எடை மிகவும் குறைந்து விட்டது. வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட அவர் சிறிது காலம் ஓய்வு எடுப்பது நல்லது" என்று லாரி கூறியதை மேற்கோள்காட்டி தி ஹெரால்டு என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தவிர, பிரட்லீ தொடர்ந்து பந்து வீசுவது அவருக்கு நல்லதல்ல. ஆஸ்திரேலிய அணியிலும் அவர் நிராகரிக்கப்பட்டு விடுவார் என்றும் பில் எச்சரித்துள்ளார். லீயின் உடல் நலத்தைக் கருதித் தேர்வுக் குழுவினர் அவருக்கு ஓய்வுகொடுக்க வேண்டும். அவர் மீண்டும் பழைய நிலைக்கு திரும்பி பலம் பெறும் வரை அவரை அடுத்த டெஸ் டிலோ அல்லது நியூ சௌத்வேல்ஸ் அணியிலோ அல்லது வேறு எந்த அணியிலோ ஆட அனுமதிக்கக் கூடாது என்றும் லாரி தெரிவித்து இருக்கிறார்.

அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையே தற்போது 2ஆவது டெஸ்ட் போட்டி நடந்து வருகிறது. இதில் காலில் காயம் அடைந்ததால் பிரட்லீ தற்காலிக ஓய்வில் இருக்கிறார். இந்தத் தொடரில் அவர் 200 ஓட்டங் களைக் கொடுத்து ஒரு விக்கெட்டை மட்டுமே எடுத்திருக்கிறார்.

இங்கிலாந்து அணிக்கு எதிரான ஆஷஸ் தொடரில் பிரட்லீ உடற்தகுதியுடன் இடம்பெற வேண்டுமானால் தற்போது தென்னாபிரிக்காவிற்கு எதிரான மீதமுள்ள போட்டிகளில் இருந்து லீக்கு ஓய்வுகொடுக்க வேண்டும் என்றும் லாரி ஆலோ சனை தெரிவித்து இருக்கிறார்.

தென்னாபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையே தற்போது நடந்து வரும் டெஸ்ட் தொடரில் பிரட்லீ களைப்புடன் சோர் வடைந்து காணப்படுகிறார். எனவே அவர் மீண்டும் புத்துணர்ச்சி பெற சிறிது காலம் ஓய்வுகொடுக்க வேண்டும் என்றும் பில் கூறியிருக்கிறார்.

மேலும் பிரட்லீ தற்போது சிரமத்தில் இருக் கிறார். இருந்த போதிலும் அவர் சமாளித்து பந்து வீசுகிறார். ஆனால் அவரது உடற்தகுதி அவருக்கு ஒத்துழைக்கவில்லை. இதுதான் தற்போது அவருக்கு உள்ள பிரச்சினையாகும் என்றும் லாரி குறிப்பிட்டு இருக்கிறார்.

இதுதவிர பிரட்லீயின் பந்து வீச்சில் அவரது பழைய நிலையை காணமுடியவில்லை. உடல் ரீதியாக அவர் பாதிக்கப்பட்டு இருக்கிறார். அவரால் சிறப்பாகப் பந்துவீச முடியவில்லை என்பதை எதிரணியினர் நன்கு உணர்ந்து வைத்து இருக்கிறார்கள் என்றும் பில் லாரி தெரிவித்து இருக்கிறார்

இரண்டாவது இன்னிங்ஸிலும் ஆஸியை வீழ்த்தி தொடரைச் சுவைத்தது தென்னாபிரிக்கா

அவுஸ்திரேலிய மற்றும் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிகளுக்கு இடையில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னா பிரிக்க அணி 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியீட்டியது. இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரை தென்னாபிரிக்க அணி 2- 0 என்ற கணக்கில் இப்போதே சுவீகரித்துவிட்டது. தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சாளர் ஸ்ரெய்ன் இரு இன்னிங்ஸ்களிலும் அவுஸ் திரேலியாவின் தலா 5 விக்கெட்டுக்களை வீழ்த்தி தமது அணி வெற்றி பெறுவதற்கு உறுதுணையாக இருந்தார்.

முதல் இன்னிங்ஸில் அவுஸ்திரேலியா 394 ஓட்டங்களையும் தென்னாபிரிக்க அணி 495 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டன. இரண் டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணி 247 ஓட்டங்களுக்குள் சுருண்டது. அந்த அணி சார்பாக அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் மாத்திரமே முதல் இன்னிங்ஸில் 101 ஓட்டங்க ளையும் இரண்டாவது இன்னிங்ஸில் 99 ஓட்டங்களையும் எடுத்தார். ஏனையோர் மிகவும் சொற்ப ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தனர். வெற்றிபெறுவதற்கு 182 ஓட்டங்களே தேவை என்ற இலகுவான இலக் குடன் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி, ஒரு விக்கெட்டை மாத் திரமே இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.



ஆட்ட நாயகனாக தென்னாபிரிக்க வீரர் ஸ்ரெய்ன் தெரிவு செய்யப்பட்டார்.

(சி)

ஒரு நாள் போட்டி தரவரிசையில் டோனி தொடர்ந்து முதலிடம்

துபாய், டிச.31

சர்வதேசக் கிரிக்கெட் கவுன்ஸில் (ஐ.சி.சி.), ஆண்டின் கடைசி ஒரு நாள் போட்டி வீரர்களின் தரவரிசைப் பட்டியலை நேற்றுமுன்தினம் வெளி யிட்டது. இதில் துடுப்பாட்டத் தரவரிசையில் இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் மகேந்திரசிங் டோனி தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார். அவர் 779 புள்ளிகளுடன் முதலாவது வீரராக விளங்குகிறார். அவரை விட 3 புள்ளிகள் பின்தங்கி உள்ள அவுஸ்திரேலியாவின் மைக் ஹஸி 2ஆவது இடத்தில் இருக்கிறார். டோனி தவிர, முதல் 10 வரிசையில் மற்றொரு இந்திய வீரர் யுவ ராஜ்சிங்கும் இருக்கிறார். அவர் 744 புள்ளிகளு டன் 8ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். சச்சின் டெண்டுல்கர் 704 புள்ளிகளுடன் 12ஆவது இடத் தில் இருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர பை, யாழ்ப்பாணம்.

மக்கள் வங்கிக் கிளைகளில் இன்று மட்டுப்படுத்திய சேவை

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து மக்கள் வங்கிக் கிளைகளும் இன்று காலை 8.30 மணிதொடக்கம் மு.ப. 10.30 மணிவரை மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளை வழங்கும் என்று வலய உதவிப் பொது முகாமையாளர் த.க.ஆனந்தராசா அறிவித்துள்ளார்.(1)

வடமராட்சி கிழக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நித்தியவெட்டை ஆகிய பகுதிகளில் உள்ள பொதுமக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்தே இந்தச் ஷெல் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது என்றும்-

இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களான உதயகுமார் மதியழகன் (வயது 05),உதயகுமார் ராஜூ (வயது 08), உதயகுமார் உதயா (வயது 02) ஆகிய மூன்று சிறுவர்கள் படுகாயமடைந்துள்ளதுடன், பொதுமக்களின் வீடுகளும் சேதமடைந்துள்ளன என இணையத் தளங்கள் செய்தி வெளியிட்டன. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

கிளிநொச்சியில் உள்ள முரசுமோட்டை, ஊரியான் பொதுமக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்து படையினர் நேற்று தொடர் ஷெல்த் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இத்தாக்குதலால் அப்பகுதி மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவிலுள்ள சிலாவத்தை, தீத்தக்கரை, தியோநகர், மக்கள் குடியிருப்புக் களை இலக்கு வைத்து நேற்று விமானங்கள் மூன்று தடவைகள் தாக்குதல் நடத்தியுள்ளன.

இதில் பொதுமக்களின் மூன்று வீடுகள் அழிந்துள்ளதுடன் கடற்றொழிலாளர்களின் வாடிகள் சேதமடைந்துள்ளன. பத்துக்கும் அதிகமான கால்நடைகள் உயிரிழந்தன.

விமானங்கள் தாழப் பறந்து தாக்குதல் நடத்தியதால் அப்பகுதி பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

வான்படையின் தாக்குதல் நடத்தப்பட்ட அதேவேளை, அப்பகுதியை நோக்கி படையினர் தமது பின்தளங்களில் இருந்து தொடர் ஷெல்த் தாக்குதலையும் நடத்தியுள்ளனர்.

முல்லைத்தீவிலுள்ள வற்றாப்பளை கேப்பாப்புலவு பொதுமக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்து நேற்று முற்பகல் 11:30 மணியளவில் வான்படையின் எம்ஐ-24 ரக ஹெலிகள் தாக்குதல் நடத்தின.

இத்தாக்குதலினால் மாடு மேய்த்துக் கொண்டிருந்த பொதுமக்கள் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கேப்பாப்புலவு சூரிபுரத்தை சேர்ந்த பெருமாள் சண்முகமூர்த்தி (வயது 27) மற் றும் வற்றாப்பளையைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான ரவிக்குமார் (வயது 38) ஆகியோரே படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் ரவிக்குமார் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிவந்துவிட்டது!

அஷ்டலக்ஷ்மி கலண்டர்கள்

தினக்கலண்டர்	:- 200/=
படமாதக்கலண்டர்	:- 140/=
மாதக்கலண்டர்	:- 100/=

வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

அஷ்டலக்ஷ்மி புத்தகசாலை,
இல.14, பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.

அடுத்த வருடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ள வடபகுதி மக்களை மீளக்குடியமர்த்திய பிறகு வடபகுதியில் தேர்தலை நடத்த விரும்புகிறோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு இலங்கையில் பயங்கர வாதத்திற்கு முடிவுகாணப்படும் என தனது அரசு நம்பிக்கை கொண்டுள்ளது எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினருக்கு ஏற்படும் இழப்புக்கள் குறித்த பத்திரிகையாளர்களின் கேள்விகளுக் குப் பதிலளித்துள்ள ஜனா திபதி யுத்தமொன்று இடம் பெறுகையில் இவ்வாறான இழப்புக்கள் ஏற்படுவது இயல்பு எனக் குறிப்பிட்டுள்ளார்.

புலிகள் அம்பாறையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொத்துவில் தொடக்கம் யால வரையிலான வனப்பகுதிக்குள் தேடுதலுக்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை விசேட அதிரடிப்படையினர் களமிறக்கப்பட்டர்.

இவர்களின் இரு அணிகளை நேற்றுக்காலை இரு தடவைகள் உகந்தை வனப் பகுதிக் குள் விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கினர்.

ஜி.சீ.ஈ.விடைத்தாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மதிப்பீட்டுப் பணிக்கென 25 ஆயிரம்ஆசிரியர்கள் விண்ணப்பித்திருந்தனர் என்று தெரிவித்துள்ள பரீட்சைகள் திணைக்களம் அவர்களுள் 15 ஆயிரம் ஆசிரியர்கள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டனர் என்றும் அறிவித்துள்ளது.

ஜி.சீ.ஈ. சாதாரண தர புதிய பாடத்திட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியே இன்று ஆரம்பிக்கப்படுகின்றது என்று கூறிய பரீட்சைகள் ஆணையாளர் பழைய பாடத்திட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்கானதிகதி விரைவில் அறிவிக்கப்படும் என்று சொன்னார்.

அடுத்துவரும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலான் வங்கிக்கு மூன்று புதிய இயக்குநர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய சேமிப்பு வங்கியின் தலைவராக முன்னர் பணியாற்றிய ஈ.நாரன்கொட செலான் வங்கியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் செலான் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் விதான மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி நிஹால் ஜெயமான, நியோமல் குணவர்தன ஆகியோரும் இயக்குநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, வங்கியின் ஏனைய முக்கிய அதிகாரிகள் உட்பட அனைத்து ஊழியர்களும் வழமைபோல் தொடர்ந்தும் பணியாற்றுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செலான் வங்கி சந்தித்துள்ள நெருக்கடிகள், சர்வதேச பொருளாதார நெருக்கடிகள் என்பன இலங்கையின் பொருளாதாரத்தையும் பாதிப்பதற்கான அறிகுறியென சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

கோல்டன் கீ நிறுவனத்தில் ஏற்பட்ட முறைகேடுகள் காரணமாக பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு- அவர்களது பணத்தை திருப்பி வழங்குவதற்காக சிலிங்கோ நிறுவனங்களின் தலைவர் லலித் கொத்தலாவல செலான் வங்கியின் பங்குகளை விற்கப் போகிறார் என சில நாள்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து பதற்றமடைந்த பொதுமக்கள் செலான் வங்கியிலுள்ள தமது முதலீடுகளைப் பெறுவதற்கு முயற்சித்தனர்.

செலான் வங்கியின் 30 வீத பண வைப்புகள் ஒரேநாளில் விலக்கப்பட்டதால் இலங்கை வங்கித்துறை பாதிக்கப்பட்ட நிலையிலேயே மத்திய வங்கி தலையிட்டமை குறிப்பிடத்தக்கது.

பாதாள உலகக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் எப்படியாவது வெற்றிபெற வேண்டும் என்ற திட்டத்தில் அரசு உள்ளது.

இத் தேர்தலில் அரசுக்கு மக்களின் செல்வாக்கு குறைந்து காணப்படுவதால் வன்முறைகள் மூலம் வெற்றிபெற அரசு திட்ட மிட்டுள்ளது.

பாதாள உலகக் கோஷ்டியினரை இத் தேர்தலில் பயன்படுத்தி ஐக்கிய தேசியக் கட்சியினர் மீது தாக்குதல் நடத்த அரசு ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

இந்த இரகசிய ஏற்பாடுகள் பற்றி நாம் நன்கு அறிவோம். பாதாள உலகக் கோஷ்டியினரின் வன்முறைகள் ஊடாக வெற்றிபெறுவதே அரசின் ஒரே திட்டம். இதை நாம் முறியடிப்போம் - என்றார்.

இலங்கைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவு எதுவும் இல்லை என்றும் அமைச்சர் கூறியிருக்கிறார்.

பல தசாப்தங்களாக இலங்கையில் நடைபெற்றுவரும் இனப்பிரச்சனையை இராணுவத் தீர்வினால் முடிவுக்குக் கொண்டுவர முடியாது என்பதே இந்தியாவின் நிலைப்பாடாகும். 1987 ஆண்டில் கைச்சாத்தான ரஜீவ் -ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தை மூலம் உகந்த அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதையே இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது. எங்களது நிலைப்பாடும் அதுவே.

எனினும் அதிகாரப் பரவல் முறை ஊடாக அரசியல் தீர்வைக் கொண்டு வருவதில் இலங்கை அரசு தாமதம் காட்டுவது குறித்து இந்தியா தனக்கு ஏற்பட்டுள்ள ஏமாற்றத்தையும், கவலையையும் வெளிப்படுத்தியுள்ளது-

இது விடயத்தில் விரைந்து நடவடிக்கை எடுக்கவும் வலியுறுத்தியுள்ளோம்.

இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் போரினால் அங்கு மோசமடைந்து வரும் மனிதாபிமான நிலைமை குறித்தும் இந்தியா கவலை கொண்டுள்ளது-

இலங்கையின் சிறுபான்மை இனங்களின் சட்டபூர்வமான அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கான உகந்த அதிகாரப் பரவல் தீர்வு ஒன்றைக் கொண்டு வருவதற்கு அங்கு நிறுவப்பட்டுள்ள உயர்மட்டக்குழு தயாரித்துள்ள அறிக்கையை நடைமுறைப்படுத்த வேண்டும். அதனை அடைவதற்கு நாம் தூண்டுதலாக இருக்க வேண்டும்- என்றும் வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி நேற்று பி.ரி.ஐ. செய்தியாளரிடம் மேலும் தெரிவித்தார். (அ)

எரிபொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றோல் விலை லீற்றருக்கு இரண்டு ரூபாவாலும் முச்சக்கரவண்டிகளுக்கான பெற்றோல் லீற்றர் இருபது ரூபாவாலும் குறைக்கப்படுகின்றது. டீசல், மண் எண்ணை, உலைகளுக்கான எரிபொருள் ஆகியன லீற்றருக்கு 10 ரூபாவாலும் குறைக்கப்படுகின்றது.

இதேசமயம் லாவ் காஸ் கொள்கலன் 276 ரூபாவாலும், ஷெல் காஸ் கொள்கலன் 166 ரூபாவாலும் விலைகுறைக்கப்படுகின்றது.

இந்த விலைக்குறைப்பு உடனடியாக - நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வருவதாகவும் அறிவிக்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவுகளை அறிவிப்பதற்காக நேற்றிரவு அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன இந்த விடயங்களை அறிவித்தார்.

புதுவருடத்தை ஒட்டி அரசு இந்த நிவாரணத் திட்டங்களை அறிவிப்பதாகவும் கூறப்பட்டது.

விடுதலைப்புலிகள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அதிகாரி சொன்னார்.

வன்னிப் பிரதேசத்தில் - புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் - உள்ள பொது களை விடுவிப்பதற்கு இன்று வரை பு ளுக்கு அவகாசம் வழங்குவது என்றும்

அதற்கு அவர்கள் அனுமதிக்கவில் யானால் புதுவருடத்தோடு தடை வி பதைவிட வேறு வழி எதுவும் இல்லை என

ஜனாதிபதி நேற்றைய அமைச்சரவை கூட்டத்தில் கூறியதாகவும் அந்த உ அதிகாரி மேலும் கூறினார்.

இதேவேளை, விடுதலைப் புலிகளி அரசியல் தலை நகரான கிளிநொச்சியில் நட பெற்றுவரும் உச்சத் தன்மையை அடை ளப்படுத்தும் விதத்திலேயே புலிகள் மீ தடை அமையும் எனக் கருதலாம் என்று தானிகள் தெரிவித் திருக்கின்றனர்.

தெல்லிப்பழை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் செய்யப்பட்டுள்ளது.

வலி.வடக்கு உயர்பாதுகாப்பு பகுதியில் பொதுமக்களை மீளக்கு துவது தொடர்பாக உயர் நீதிமன்றத் கல் செய்யப்பட்டுள்ள மனுக்களை செய்த உயர்நீதிமன்றம் மீள் குடி துரிதப்படுத்துமுகமாக யாழ். மேல் நீதிபதி இ.த.விக்னராஜா தலைமையி மட்டக்குழு ஒன்றை நியமித்துள்ளது தெரி

பிரஸ்தாப உயர்மட்டக்குழு பலாலி தலைமையகத்தில் நேற்று முற்பகல் 1 மணியளவில் கூடியது.

ஆகப்பிந்தி உயர்நீதிமன்றம் வழங்கிய அறிவுறுத்தல்கள் தொடர்பாக நேற் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

தெல்லிப்பழை அரசினர் வைத் சாலை, தெல்லிப்பழை யூனியன், ம ஜனக் கல்லூரிகள் ஆகியவற்றுக்கு மக்க மாணவர்களும் நேரடியாகச் செல்லக்கூடி வகையில் முன்னரங்குகளை பின் நகர் ஏற்பாடு செய்யவேண்டும் என்று உயர் மன்றம் அறிவுறுத்தல் விடுத்திருந்தது.

இந்த அறிவுறுத்தலை நடைமுறை படுத்தும் வழிமுறைகள் தொடர்பாக பல யில் நேற்றுக் கூடிய உயர்மட்டக்குழு வி வாக ஆராய்ந்தது.

அந்தப் பிரதேசத்தில் உள்ள கண் வெடிகளை அகற்ற சம்பந்தப்பட்ட கண் வெடி அகற்றும் நிறுவனம் கால அவ கோரியுள்ளது என்றும்-

புதுவருடத்துக்கு பின்னர் அந்தப் களை மேற்கொள்ள அந்த நிறுவனம் இ கியுள்ளது என்றும் - அரச அதிபர் கே.க கூட்டத்தில் தெரிவித்தார்.

கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு, போ வரத்துப் பாதை பாதுகாப்பானது எ உறுதிசெய்யப்பட்ட பின்னர் உயர் நீதிம அதிவுறுத்தலை நிறைவேற்ற ஏற்பாடு வதாக நேற்றைய கூட்டத்தில் முடிவு யப்பட்டது. (அ

SUBRA- சித்தன்கேணி | SUBRA- வட்டுக்கோட்டை

இரு இடங்களிலும்
2011 A/L
02.01.2009
மாலை 4.00 மணி
A/L Day
01.01.2009
4.pm
தரம் 1 - O/L
தமிழ்- ஆங்கில மொழிமூலம்
03.01.2009
காலை 7.00 மணி
ஒரே நாளில்.

சுப்பஸோ வீடியோ ஓடியோ சென்ரர் இடமாற்றம்

இதுவரை காலமும் இல:- 149, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த சுப்பஸோ வீடியோ ஓடியோ சென்ரர் தற்பொழுது அதன் அருகில் இல:- 337, கஸ்தூரியார் வீதி என்னும் முகவரியில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை எமது வாடிக்கை யாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

சுப்பஸோ வீடியோ ஓடியோ சென்ரர்.
337,கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.

மரண அறிவித்தல்

யோக்கியசிங்கம் சுதர்சன்

4 ஆம் கட்டை, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட யோக்கியசிங்கம் சுதர்சன் நேற்று (30.12.2008) செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் நிர்மலாவின் அன்புக் கணவரும் திரிஷா, சந்தியா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4 ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை.

. தகவல்
மனைவி, பிள்ளைகள்.

யாழ் நகரின் முன்னணி ஆசிரியர்களின் ஒன்றிணைந்த சேவையில்...

A/L 2011
கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள்
ஆரம்பம் :- ஜனவரி 03 சனி காலை 8.30 மணி
புதிய அனுமதிகள் இன்று முதல்.
NEC
CLOCK TOWER ROAD, JAFFNA.

DMI
A/L 2011
ஜனவரி - 10
காலை 9.00 மணி

அரியாலையில் கல்வியாண்டு - 2009

GROUP CLASSES | SCIENCE E.J.K. யுவன் | G.C.E - O/L 10, 09

★ பெற்றோருடனான அனுமதி
★ செய்முறை வகுப்புகள்
★ பயிற்சிப் பரீட்சைகள்
★ வரையறையான மாணவர்
★ மாணவருக்கு ஏற்ப நேர அட்டவணை

ஆரம்பம்:- 01.01.2009 காலை 8.30

புறூடிலேன், அரியாலை.

Management & Informatics Studies
MIS புதிய பிரிவுகள் ஆரம்பம் MIS
74 , Sabapathy Lane, Thalaiyali, Jaffna. TPNO: 060 221 6083

Batch I 1/ 1/2009 10 am
Batch II 2/ 1/2009 10 am
முற்றுமுழுதான செய்முறைப் பயிற்சி
அச்சடித்த பாடக் குறிப்புகள்
கணினித்துறையில் அனுபவம் பெற்றோரின் வழிகாட்டல்
மிகக்குறைந்த கட்டணம்

Diploma in Ms-Office 2003/2007
Diploma in Desktop publishing
Certificate in Internet Technology
Diploma in Hardware Technology
Diploma in Web Designing (Front page/ Dream weaver)
Diploma in VB Programming (with sample project)
Diploma in VB.Net Programming (with SQL server)
Diploma in Java Programming (NetBeans Environment)
Diploma in ASP.Net programming (with SQL server)
Diploma in Linux Fundamentals (Ubuntu / Fedora/ SUSE)
Diploma in Multimedia Technology (Flash MX 2D)
Diploma in Web Development (PHP/ MySQL / Apache)
Diploma in Computer Networking (Windows 2003/Linux)

R.Kumaran- B.Sc
ஆசிரியரின் வகுப்புகள் யாவும் இத் நிறுவனத்திலேயே நடைபெறும்

ஒவ்வொரு கற்கைநெறி முடிவிலும் சான்றிதழ்கள் உடனடியாக வழங்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.